
# உணர்வுக் கோலம்

க. கணேசலிங்கம்



SS.
811.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
2000 -5- 31

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
2000 -5- 27
LIBRARY

520123

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணர்வுக்கோலம்

கவிதைத் தொகுதி

520123

## க. கணேசலிங்கம்

520123

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உணர்வுக்கோலம்**

'சித்தாந்தரத்தினம்' க. கணேசலிங்கம்
கவிஞர், பொறியியலாளர்
(குப்பிழான், யாழ்ப்பாணம்)

உரிமை ஆசிரியருக்கே

முதற் பதிப்பு : 5 ஏப்ரல் 1997

பக்கம் : 160
அச்சுப்புள்ளி : 12
அச்சிட்டோர் : மாசறு D.T.P., 75, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.

வெளியீடு : யோகேஸ்வரி கணேசலிங்கம்
9/2, பீச் ஹோம் அவென்யு, பெசன்ட் நகர்
சென்னை - 600 090.

நூல் கிடைக்கும் இடங்கள் :

1. சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்
153, டி.டி.கே. சாலை, சென்னை - 600 018.
2. காந்தளகம், 4, முதல் மாடி,
834, அண்ணாசாலை, சென்னை - 600 002.

**Unarvukkolam**

A Collection of Tamil Poems

by

K. Ganesalingam, B.Sc.(Eng.),
C. Eng., M.I.E.E.(Lond.), M.I.E.(Cey.)

Rs.40.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
11-8-2000
LIBRARY

உ
சிவசிவ

# வாழ்த்துரை

ஞானத்தமிழாகரர், தத்துவ இலக்கிய வேந்தர்
**டாக்டர் வை. இரத்தினசபாபதி**
பேராசிரியர், முன்னாள் சைவசித்தாந்தத் துறைத் தலைவர்
சென்னைப் பல்கலைக்கழகம்

சித்தாந்தரத்தினம் திருமிகு. **க. கணேசலிங்கம்** அவர்கள் சிறந்த சிந்தனையாளர். தொலைநோக்குணர்வுடன் நிகழ்கால நிலையை ஒப்புநோக்கிச் சமுதாய முன்னேற்றச் சிந்தனைகளை வடித்தெடுத்து நல்கும் வான்மையாளர்.

ஈழம் தந்த நல் முத்து எனப் போற்றப் பெறும் பொறியாளர் **க. கணேசலிங்கம்** அவர்கள் யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலரவர்களின் வழியில் நின்று சைவத்தையும் தமிழையும் கற்றுத் துறை போகிய கவிஞர் திலகம்.

சிறந்த பேச்சாளராகவும் எழுத்தாளராகவும் விளங்கும் இவர் கவியரங்கங்கள் பலவற்றில் காலச்சுவடுகளால் அழிக்கப்பெறாத மோன நிலையமைந்த ஞானக் கருவூலங்களை வாலைக் கவிதைகளில் வடித்துத் தந்த வான் புகழ்க் கவிஞர். சிறந்த மொழிபெயர்ப்புக் கவிதைகளையும் உருவாக்கிய கவிதாமணி கணேசலிங்கனாரின் **'உணர்வுக் கோலம்'** என்ற கவிதைத் தொகுதியானது மக்கள் உணர்வினைச் செல்லும் நெறியறிந்து செலுத்தும் வன்மையும் தீநெறியாளர்களின் சூழ்த்த உணர்வினையும் பாழ்த்த விளைவுகளையும் திறனறிந்து தெள்ளிதிற்காட்டி நெறியுணர்த்தும் நேர்மையும் கொண்டு விளங்குவதை எளிதிற் காட்டும் இலக்கியமாகும்.

**'எண்ணக் கோலத்**'தை எழிலுறக் காட்டிய கவிதைப் பேராசான் இப்போது **"உணர்வுக்கோல"**த்தின் மூலம் சமுதாயத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரையோடிக் கிடக்கும் சழக்கு நெறிகளைக்களைய மேற் கொண்டிருக்கும் தொண்டினைத் துறைதோறும் காண முடிகிறது.

எழிலின் எடுப்பை எடுத்துக் கூறிய கவிதைகளைக் கண்டுள்ளேன்; ஆனால் 'எழிலின் நிறைவு' என்ற குறிக்கோள் கவிதையை இவர் எழுத்தில்தான் காண முடிகிறது.

**ஆற்றில்செல் துரும்பாகிக் குறிக்கோளற்று**
**ஆடுபவர் தமிழரென்றால் தமிழா வாழும்?**

என்ற வரிகள் நெஞ்சை நெகிழ்விப்பன. "தமிழா வாழும்" என்ற இரண்டு சொற்கள் இரு பொருள் பயப்பன அல்லவா.

"நூறிலேயொரு மனிதன் சிக்கினான்" என முடியும் கவிதை இன்பில் தொடங்கித் துன்பத்தில் துவளவிட்ட துயர்க்கவிதை. அழுகையை அழகிய செந்தமிழ்ச் சொற்களிலே அள்ளித் தரமுடியும் என்பதற்குச் சான்று காட்டி நிற்கும் கவிதை.

அஞ்ஞானம் யாருக்குமே தேவையில்லைதான். ஆனால் விஞ்ஞானமும் மெஞ்ஞானமும் ஒன்றை ஒன்று நிறைவு செய்பவை களே யொழிய எதிர்பவை அல்ல என்ற கருத்தினில் வாழும் தெளிவுமிக்க திறனுறு கவிதைகள் யாக்கும் சிந்தனைக் கவிஞர் கணேசலிங்கனார் அவர்கள் உண்மை தேர்ந்த உயர்வில் நின்று பாடும் கவிதையையே வாழ்த்துரையாக்கி இதனை நிறைவு செய்கிறேன்.

**இன்று கண்விழித் தொளியைக் காண்கிறேன்**
**எழில்நி றைந்தநல் லுண்மை காண்கிறேன்**
**நன்று காண்பவை நலம ளிப்பவை**
**நானி லத்துநல் வாழ்வ ளிப்பவை**
**என்றும் நல்லிறை நெறியில் வந்தவை**
**என்ப தோர்ந்தனன் உண்மை தேர்ந்தனன்**

வாழ்க கணேசலிங்கனார் வளமிகு கவிதைத் தொண்டு. வளர்க அவர்தம் பன்னோக்குச் சமுதாயச் சிந்தனை.

**அன்பின் வை. இரத்தினசபாபதி.**

சென்னை
10.2.97

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறப்புரை

**டாக்டர் பொற்கோ**
பேராசிரியர், தமிழிலக்கியத்துறைத் தலைவர்
சென்னைப் பல்கலைக்கழகம்

திருவாளர் க. கணேசலிங்கம் அவர்கள் உணர்வுக் கோலம் என்ற தலைப்பில் உருவாக்கியுள்ள இந்தக் கவிதைத் தொகுப்பை மிக மகிழ்ச்சியோடு படித்துச் சுவைத்தேன். திருவாளர் கணேசலிங்கம் அவர்கள் பொறியியல் கல்வி கற்றுப் பட்டம் பெற்றவர்; சைவ சித்தாந்தத்தில் ஈடுபாடு கொண்டு அந்தத் தத்துவத்தைப் பயின்று சித்தாந்தரத்தினம் என்ற பட்டத்தைப் பெற்றவர். பொறியியலிலும் தத்துவத்திலும் பயிற்சி பெற்ற இவர் கவிதையில் ஈடுபாடு கொண்டு கவிதைகளைப் படைத்திருப்பது நாம் மகிழ்ச்சியோடு வரவேற்றுப் பாராட்டத்தக்கது. கவிதைக் கலை செழுமை பெறுவதற்கு இவருடைய பிறதுறை அறிவு இயல்பாகவே பயன்பட்டிருக்கிறது.

திருவாளர் கணேசலிங்கம் அவர்கல் உருவாக்கியுள்ள கவிதைகள் தமிழ் யாப்பு நெறியில் செம்மையாக நடைபயில்கின்றன. தமிழ்க் கவிதை மரபுகளைப் பின்பற்றியே இந்தக் கவிதைகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. மரபுகளைப் போற்றியுள்ள கவிஞர் பாராட்டத் தக்க வகையில் புதுமைகளுக்கும் இடந்தந்திருக்கிறார்.

உணர்வுக் கோலம் என்ற தலைப்பில் உருவாக்கப்பட்டுள்ள இந்தத் தொகுப்பில் அழகின் அலைகள், வாழ்வுப்பாதை, சிந்தனையும் வந்தனையும், தமிழ் தமிழர், பல்வகை என்று ஐவகைப் பட்ட பிரிவுகளில் கவிதைகளைக் காண்கிறோம்.

கவிஞர் கணேசலிங்கம் அவர்களுடைய கவிதைகள் சிறந்த சொல்லாட்சியாலும் புதிய புதிய கற்பனைகளாலும் காலத்துக்கேற்ற கருத்தோட்டங்களாலும் உயிரோட்டம் பெற்று இலக்கியப் பொலிவோடு விளங்குகின்றன. இந்தத் தனிப் பண்பால் இவை நம் நெஞ்சைக் கவர்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*செம்மையான யாப்பில் உருவாக்கப்பட்டுள்ள இந்தக் கவிதை கள் புதிய புதிய ஓசைகளை எழுப்பி நமக்கு மகிழ்வூட்டுகின்றன. சில கவிதைகளில் எழும் ஓசைகள் கம்பனையும் வில்லியையும் நினைவூட்டுவதோடு காவடிச்சிந்தையும் நினைவூட்டுகின்றன. இன்னும் சில கவிதைகள் வேறு எங்கும் கேளாத புதிய ஓசைகளை எழுப்பி நமக்குப் புதிய அனுபவத்தை வழங்குகின்றன.*

*சிறப்பான உணர்ச்சியும் உணர்ச்சிக் கேற்ற ஓசையும் அவற்றுக்கிசைவான பொருள் ஆழமும் இவருடைய கவிதைகளில் பொருந்தி விளங்குகின்றன. இந்தப் பண்பினால் இவருடைய கவிதைகள் படிப்போட்டம் மிகுந்தனவாய் விளங்குகின்றன. இவருடைய கவிதைகளை யாரும் மகிழ்ச்சியாகவும் விரைவாகவும் படிக்க முடியும்; படித்துச் சுவைக்க முடியும். கவிதைகளை ஓசை யோடு வாய்விட்டுப் படித்துச் சுவைக்க வேண்டும். அப்படிப் படித்துச் சுவைக்கப் பழகிக்கொள்ள வேண்டும்.*

காலத் திரைகிழித் தோடினேன்! என்னுளக்
காதலின் மேடையிலே - அலை
மோதிடும் மேடையிலே
கோலக் களிநடம் ஆடும் மயிலொன்று
கொஞ்சிக் குலாவியதே! - எழில்
கொஞ்சநின் றாடியதே!

*மிக அழகிய சொல்லாட்சியும் சந்த நயமும் சேர்ந்த இந்தப் பாட லில் காணும் உணர்ச்சியையும் ஓசையையும் எல்லோரும் எளிதில் உணர்ந்து சுவைக்கலாம்.*

வானத்து மேடையில் மேகங்கள் கூடியே
வண்ண மணப்பந்தல் போட்டனபார்!
கானத்தி லேமலர்க் கூட்டங்கள் கூடியோர்
கல்யாண மாலை சமைத்தனகாண்!

*இங்கே காணும் கற்பனைகள் கம்பனை நினைவூட்டுவன. படிப் பவர் மனத்தில் புதிய அனுபவ முத்திரையைப் பதிக்க வல்லன.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கவிஞரின் பொறியியல் அறிவு கவிதைகளில் ஆங்காங்கே பின் புலமாக இருந்து நுட்பமாக வேலை செய்திருக்கிறது. இங்கே ஒரு கவிதையில் வெளிப்படையாகவே அந்த அறிவு இலக்கியக்கோலம் பூண்டு காட்சி தருகிறது.*

எங்கோ கேட்கும் இன்னிசை கொணர்ந்து
இங்கே தருவேன் வானொலியில்
எங்கோ தெரியும் எழிலார் காட்சி
இங்கே தொலைகாட் டியில் தருவேன்!

*மின்னாற்றல் பேசுவதாக அமைந்துள்ள ஒரு பாடலின் ஒரு பகுதி இது.*

*அரும்பைப் பற்றியும் தளிரைப் பற்றியும் இவர் எழுதியிருக்கும் கவிதைகள் இவருடைய இயற்கை ஈடுபாட்டுக்கும் மென்மை உணர்வுக்கும் கூரிய கவிதைப் பார்வைக்கும் சான்றுகளாக விளங்குவன.*

*கவிஞன் படைக்கும் படைப்புகளில் சில கவிதைகள் உயிர் பெற்றெழுந்து நம்முன் உலவும் என்றே கூறலாம். அப்படிப்பட்ட கவிதைகள் நம்முன் உலவும் - உரையாடும் - தொடர்ந்து உயிர் வாழும்.*

நீலக் கடற்கரையில் – நிலாக்
காலும் மணற்றரையில்
    நெஞ்சம் நெகிழ்ந்திடக்
    கொஞ்சி இருந்ததை
    நீணிலம் கூறிடுமோ? – அந்த
    வேணிதான் கூறிடுமோ? – அந்த
நீலக் கடற்கரையில் – நிலாக்
காலும் மணற்றரையில்...........

*'காலத்தின் போக்கினிலே' என்ற தலைப்பில் இவர் எழுதியுள்ள கவிதையின் ஒரு பகுதி நாம் மேலே கண்டது. இந்தக் கவிதை வெறும் எழுத்தாகவோ சொல்லாகவோ இல்லாமல் கவிதையாக எழுந்து நம்முன் உலவுகிறது -*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரையாடுகிறது - உயிர்வாழுகிறது.

சௌவுதி அரேபியாவில் இருந்தபோது இவர் எழுதிய 'பாலை வனத்துப் பயணம்' என்ற கவிதை உணர்வாலும் பொருளாலும் உரையாலும் நடையாலும் மற்றக் கவிதைகளிலிருந்து வேறுபட்டு நின்று நம்மனத்தை ஈர்க்கிறது. சில வரிகளை இங்கே குறிப்பிட வேண்டும்.

தண்புனல் கண்டு களிப்பேன்; - அது
தண்மையில் லாவெறுங் கானலாய் மாறும்!
வெண்மலை கள்சில காண்பேன் - அவை
வெறும்மணல் மேடுக ளாகிப்பின் தோன்றும்!

* * *

ஏதும் நடந்திடக் கூடும்! - ஆமின்
இன்னல்கள் கண்டுளம் சோர்ந்திட லாமோ?!

துன்பத்தைக் கண்டு உள்ளம் சோராதவராய் - நன்னம்பிக்கை வாணராய் விளங்கும் இந்தக்கவிஞர் "காலம்பின் ஏகிடச் செல்வேன்" என்று கவிதையை முடிக்கிறார். காலம் பின் ஏகிடக் கவிஞர் முன்னேறிச் செல்கிறார் என்பது புதைந்து கிடக்கும் பொருள்.

"இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து கெடுக உலகியற்றியான்" என்றார் வள்ளுவப் பெருந்தகை. "தனி ஒருவனுக்கு உணவில்லையெனில் இந்தச் சகத்தினை அழித் திடுவோம்" என்றார் மகாகவி. "கூழுக்குப் பற்பலர் வாடவும் சிற் சிலர் கொள்ளையடிப்பதும் நீதியோ?" என்று கேட்டார் புரட்சிக்கவிஞர். மெல்லிய உணர்வுகள் கொண்ட கவிஞர் கணேசலிங்கம் அவர்கள் பாடியுள்ள ஒரு பாடலையும் இங்கே இணைத்து நினைத்துப் பார்க்க வேண்டும்.

வீதியினில் சுவரருகில் தெருவோ ரத்தில்
வெளியினிலே வெறுநிலத்தில் வானின்கீழே
நாதியற்ற பலர்நடுவில் பனியில் காற்றில்
நடுங்கியுடல் ஒடுங்கிஇரு கைகளாலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதியுடல் போர்த்துவிடப் பரித விக்கும்
பாவிநெஞ்சக் குமுறலினை வடிகண்ணீரை
வேதனையைத் துடைப்பதற்கு யாரு மில்லை!
வெந்தொழிக ஏழ்மைதவழ் இடங்களெல்லாம்!

உலகில் ஏழ்மை தவழும் இடங்களெல்லாம் வெந்து ஒழிக என்று கவிஞர் ஏழ்மைக்குக் காரணமானவர்கள் மீது சீற்றங்கொண்டு, அவருடைய பரிவுணர்ச்சி நமக்குப் பளிச்சென்று விளங்கும் வகையில் முழங்குகிறார்.

இன்னொரு கவிதையில் ஏழ்மை வாழ்வை ஒரு வரியில் படம் பிடித்துக் காட்டி நெஞ்சை உலுக்குகிறார் கவிஞர். **"காலினை நீட்ட இடங்கிடை யாதங்கு கைவிளக் கேஒளிரும்"** என்று கூறி ஏழை வீட்டின் உண்மையான நிலையினைக் கண் முன் கொண்டு வந்து நிறுத்துகிறார் கவிஞர்.

வேடர் குலத்தில் பெண்ணினைக் கொண்ட வேலவனைப் பார்த்துக் கவிஞர் புதுமையான முறையில் வேண்டுகிறார். **"மன்னும் உன்னருளாட்சியில் இந்த மண்ணில் சாதியை வேருடன் சாய்ப்பாய்."** என்பதுதான் அந்த வேண்டுகை.

"அப்பாவி சிக்கினான்!" என்ற தலைப்பில் உள்ள ஒரு கவிதை ஒரு புதுமையான கதைக்கவிதை. இந்தக் கதை ஒரு சுவையான கதை, நீங்களே படித்து மகிழ வேண்டிய கதை. கவிஞர் ஒரு நிகழ்ச்சியைக் கதையாக்கி அந்தக் கதையை ஒரு கவிதை யாக்கி இங்கே நமக்கு வழங்கியிருக்கிறார்.

"ஊன்றுகோல்" என்ற கவிதையில் தொடித்தலை விழுத்தண்டினாரின் 'இனி நினைந்திரக்கமாகின்று' என்ற சங்கப் பாடலின் இயற்கை மணம் வீசுகிறது. தனித்தன்மை வாய்ந்த ஒரு கலைப் படைப்பு இது.

வாழ்க்கையில் நாம் காணும் முரண்பாடுகள் சில நேரங்களில் சுவையாக இருக்கும்; சில நேரங்களில் அந்த முரண்பாடுகள் துயரச் சுமையாகவும் இருக்கும். வேறு சில நேரங்களில் இந்த முரண்பாடுகள் சிந்தனையைக் கிளறி நம்மைச் செயற்படுத்தும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு சில நேரங்களில் இந்த முரண்பாடுகள் வாயடைத்து நம்மைச் செயலற்று நிற்க வைத்து விடும். முரண்பாடுகளைப் பற்றிக் கவிஞர் கணேசலிங்கம் புதிய புதிய கோணங்களில் நிரம்ப எழுதியிருக்கிறார்.

ஏனிந்த முரண்பாடு? ஏனிந்த வேற்றுமைகள்?
கூனடைந்து நடைதளர்ந்து குறுகியது என்வாழ்வு.
ஆனாலும் எனதுமுதிர் அறிவிற்கு எட்டவில்லை
ஏனிந்த முரண்பாடு? எவர்அறிவார்? எவர்குற்றம்?

முரண்பாடுகள் கவிஞரின் நெஞ்சோடு மோதி இங்கே வினாவாக வடிவெடுத்து நிற்கிறது.

தமிழைப் பற்றியும் தமிழரைப் பற்றியும் இவர் எழுதியுள்ள ஒவ்வொரு கவிதையும் உள்ளத்தைத் தொடும் கவிதைகள். தமிழர்கள் ஆற்றில் செல்லும் துரும்பாகிக் குறிக்கோளற்று ஆடுவதைக் கண்டு நெஞ்சம் நொந்து "வாழுமா தமிழ்?" என்று கேட்கிறார் கவிஞர். நல்ல கவிஞர்கள் எல்லோரும் பொதுவாக நன்னம்பிக்கை வாணர்களாகவே இருக்கிறார்கள். நன்னம்பிக்கையின் விளைவாகவே

"கானாட்டில் வாழினும்நாம் கவின்தமிழைப் போற்றிடுவோம்
கலைமேவு புத்தாண்டில் தமிழ்ஒளியை ஏற்றிடுவோம்"

என்று பாடுகிறார் கவிஞர் திரு. கணேசலிங்கம் அவர்கள்.

தன்மானமோ மொழிமானமோ இல்லாமல், குறிக்கோளற்று வாழும் ஒரு கூட்டத்தைக் கண்டு மனம் நொந்து கவிஞர் பாடுகிறார்.

"எப்படியும் தமிழ்மொழியில் எழுதிக்கொள்வோம்!
எப்பிழையும் இருந்திடலாம்! கவலைஇல்லை!
எப்படியோ பிழைத்திட்டால் போதும்!பின்னர்
ஏனிந்தத் தமிழ்ப்பற்று? சோறாபோடும்?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படியோர் உணர்வற்ற மந்தைக்கூட்டம்
எமதினமா? இதுதமிழர் சாபக்கேடா?
எப்படித்தான் இந்தநிலை மாறக்கூடும்
இன்தமிழே உன்நிலையை என்னவென்பேன்?!

*ஈழத்தமிழ் மக்களின் துயரத்தைக் கவிதையிலும் பகிர்ந்து கொள்ளும் இவர் அந்தத் துயரத்தைக் கவிதை வாயிலாக உலக நெஞ்சங்களுக்கு உணர்த்துகிறார். கங்குகரை இல்லாத துயரச் சூழலில் ஆதரித்து அரவணைக்குமாறு சிறப்பாகத் தமிழகத்தையும் பொதுவாகப் பாரதத்தையும் உரிமையோடு கவிஞர் வேண்டுகிறார்.*

தீயினிலே ஒருலட்சம்
தமிழர்கள் வீடிழந்தார்.
ஆயிரமா யிரந்தமிழர்
அவனியிலே உயிரிழந்தார்!

UNIVERSITY OF PERADENIYA
11-8-2000
LIBRARY

பூவிழந்து பொட்டிழந்து
பூவையர்கள் வாடுகிறார்!
பூவிதழின் மழலையர்கள்
பொருமுகிறார் அனாதைகளாய்!

வழிகிறது விழிநீர்,நாம்
வாயடைத்துப் பொருமுகிறோம்!
பழகியஎம் தமிழ்நாடே
பாரதமே எமைஅணைப்பாய்.!

*இந்தக் கவிதை வரிகள் துயரத்தின் வடிவாய் இதைப் படிக்கும் ஒவ்வொருவர் நெஞ்சத்திலும் உட்புகுந்து நெஞ்சை நெகிழ வைக்கிறது; உதவிக்குக் கைகொடுக்க உள்ளத்தைத் தூண்டுகிறது.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசுதன் மக்களை அனாதைக ளாக்கியும்
குண்டுகள் போட்டுக் கொன்று குவித்தும்
நியாயப் படுத்தல்எந் நாட்டினில் உண்டு?
வேறோர் இனத்தில்இக் கொடுமை நிகழ்ந்திடின்
சீறி எழுந்து உலகமே கொதிக்கும்!
உலகத் தமிழனோ ஒருமுறை நிமிர்ந்து
உரத்துப் பேசுவான்; உறங்குவான் பின்பு!

பின்னருந் தொடர்ந்த கொடுமையால் வாழ்விடம்
அன்னியர் கையில் வீழ்ந்திடப் பலரும்
உயிருக் கஞ்சி ஓடிச் சிதறினர்!

*உண்மைக் காட்சிகளை நிலைக்களமாக்கிக் கவிஞர் எழுதிய துயரத் தழும்புகள் இவை.*

*'இன்னும் வாழ்கிறேன்' என்ற கவிதை கவிஞர் மனத்தில் எழுந்த உணர்ச்சியின் வடிவம். அவருடைய அனுபவம், அந்தக் கவிதையால் எல்லோருக்கும் எய்திய அனுபவமாக ஆகிவிடுகிறது. இத்தகைய கவிதைகள் பாரி மகளிர் பாடிய 'அற்றைத் திங்கள்' என்ற சங்கப் பாடலைப் போலச் சாகாவரம் பெற்ற கவிதைகள் என்றே குறிப்பிடப்படவேண்டும்.*

*தமிழக மக்களை விழிக்க வைக்கத் தந்தை பெரியார் அவர்கள் பட்ட பாட்டைப்பற்றிக் கவிஞருக்கு நன்கு தெரியும். விழித்தெழுந்த தமிழகம் மீண்டும் தூங்கத் தொடங்கித் தூக்கத் திலேயே உலவுகிறது - விழிக்கிறது - தூங்குகிறது. தூக்கத்தில் உலவும் தமிழகத்தைக் கண்டு கவிஞர் மனம் வருந்திக் கேட்கிறார்:*

தந்தையின் சுயமரி யாதையை எந்தத்
    தமிழன்தான் இன்றுளம் கொண்டான்?
முந்தைய பெருமை மொழிஇன மானம்
    முழுவதும் மறந்தின்று தமிழர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மந்தைக ளாகி வாழ்கிறார்! பெரியார்
மண்ணினில் இவர்களை உயர்த்தச்
சிந்திய உழைப்பும் தியாகமும் வீணா?
செந்தமிழ் நிலம்விழித் தெழுமா?

வாழ்க்கையில் எத்தகைய துன்பம் வந்தாலும் நினைக்க வேண்டிய சில வரிகளை 'உயர்வுற உள்ளல்' என்ற தலைப்பில் கவிஞர் மனித குலத்திற்கே பொதுவாக வழங்குகிறார்.

எழில்கலைந் துலர்ந்த இடத்திலும் அன்பு
என்றுமே பசும்புல்லாய் வளரும்.
கழிந்திடும் காலம்;இளமையை அதிலே
கவினுறக் கழித்னு பவங்கள்
உளத்தினிற் கொள்க அமைதியாய்; வாழ்வில்
உற்றிடும் பல்வகைத் துன்ப
விளைவுகள் கண்டு வீழ்ந்திடா திருக்கும்
வீறுகொள் மனத்துரன் வளர்க்க.

இப்படிப்பட்ட வரிகள் துயரங்களைக் குறைக்கும். அக அமைதியைக் காக்கும்.

கவிஞர் கணேசலிங்கம் அவர்கள் பாடியுள்ள கவிதைகள் பொருட் செறிவுள்ளவை; இலக்கிய வளம் கொண்டவை. அனுபவச் சாரத்தையும் உணர வேண்டிய வாழ்வியல் உண்மைகளையும் உள்ளடக்கி நிற்கும் இந்தக் கவிதைகள் எல்லோரும் படித்துப் பயன்பெற வேண்டிய கவிதைகள். இவை போற்றிக் காக்கப்பட வேண்டிய கவிதைகள். பொறியாளர் சித்தாந்த ரத்தினம் கவிஞர் திரு. கணேசலிங்கம் அவர்கள் வழங்கியுள்ள இந்தக் கவிதைகள் தமிழுக்குக் கிடைத்த நல்ல இலக்கிய வரவு. கவிஞர் கணேசலிங்கம் அவர்கள் இத்தகைய கவிதைகளை மேலும் மேலும் வழங்கத்தக்க வகையில் தமிழகம் அவருக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கும் என்று பெரிதும் நம்புகிறோம்.

**சென்னை** **பொற்கோ**
**20.2.1997**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

எனது முதற் கவிதை நூல் **'எண்ணக்கோலம்'** என்ற பெயரில் 1974ல் யாழ்ப்பாணத்தில் வெளிவந்தது. பலரின் பாராட்டைப் பெற்றது. இன்று **'உணர்வுக்கோலம்'** என்ற பெயரில் இரண்டாவது கவிதை நூல் வெளிவருகிறது.

கவிதை உலகில் தமிழ்க் கவிதைக்கு உயர்தனி இடமுண்டு. அதன் வளர்ச்சியில் வெண்பா, விருத்தப்பா, ஆசிரியப்பா, கலிப்பா எனப் பல பாவினங்கள் தோன்றின. அவற்றிலும் பல வகைகள். ஓசையின் அளவு ஒழுங்கு பற்றிப் பிரிந்து, உள்ளத்துணர்வுகள் நிகழ்வுகளின் வெவ்வேறு கூறுகளை உணர்த்துவன இப்பாவகை கள். பிற்காலத்தில் கோவை, அந்தாதி, சிலேடை என்று தோன்றிய பாவினங்கள் ஒன்றை ஒன்று விஞ்சிய இனிமையும் சிறப்பும் கொண்டவை. எதுகை மோனை சிறந்த எழிற் கவிதை களும் சந்தமிகு சிந்து வகைகளும் தமிழ் மொழியில் உள்ளது போல் வேறெந்த மொழிகளிலும் இல்லையெனலாம். இதனை உணராமல், தமிழ்க் கவிதையில் புதுமுயற்சி என்று கூறுவதும், பிற மொழிக்கவிதைகளுடன் தமிழ்க்கவிதைகளை ஒப்பிட முந்து வதும், அவை போல் எழுத முற்படுவதும், பலவேளைகளில், அறியாமை அல்லது இயலாமை அல்லது தாழ்வு மனப்பான்மை யின் விளைவாக அமைந்து விடுகின்றன.

விஞ்ஞான மாணவனாக இருந்தமையால், நான் படித்த யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில், என் தமிழ் இலக்கியப் படிப்பு ஒன்பதாம் வகுப்புடன் முடிந்து விட்டது. பத்தாம் வகுப்பில் 'தமிழ்' என்று ஒரு பாடமுண்டு. அதில் கட்டுரை எழுதல், கவிதைக்கு நயம் எழுதல், இலக்கணம், மொழி பெயர்ப்பு என்ற பகுதிகள் உண்டு. அதைப்படிப்பித்த வித்துவான் கார்த்திகேயன் என்போன்ற சில மாணவருக்கு தமிழ்க்கவிதையில் இருந்த ஈடுபாட்டைக் கண்டு, அசை, சீர், கூவிளம், கருவிளம் என்று யாப்பிலக்கணத்தின் அரிச்சுவடியை மட்டுமே படிப் பித்தார். இதைத் தவிர யாப்பிலக்கணம் என்று எதையும் முறையாக நான் படிக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவயதில் தமிழ்க்கவிதையில் எனக்கு ஆர்வத்தை ஏற்படுத்தியவர் எனது தந்தையாகும். கவிதை எழுதுவதற்கு உந்து சக்தியாக இருந்து அடித்தளம் அமைத்தவர் தமிழாசிரியர் வித்து வான் கார்த்திகேயன். பதினாறு வயதில் எனது முதற்கவிதை வீரகேசரி இதழில், அன்றிருந்த புகழ்மிக்க கவிஞர்களின் ஆக்கங்களுடன் வெளிவந்த போது நான் அடைந்த மகிழ்ச்சி சொல்லுந்தரமன்று.

பல ஆண்டுகளின் பின் 'எண்ணக்கோலம்' என்ற என் கவிதைத் தொகுதிக்கு அணிந்துரை வேண்டி வித்துவான் கார்த்திகேயனை அணுகியபோது, என் கவிதைகளைப் பாராட்டித் தன்கையிலிருந்த தொல்காப்பியம் நூலை எனக்களித்தார். பொறியியல் துறையில் உழலும் எனக்கு தொல்காப்பியத்தை விளங்கும் ஆற்றல் இல்லை எனக் கூறினேன். அதற்கு அவர், விஞ் ஞானம், பொறியியல் படித்தவரினால் தமிழ்க் கவிதையின் எதுகை மோனைப் பண்புகளையும் சீர் அசைகளின் ஒலி அளவுகளையும் தொல்காப்பியம் கூறும் இலக்கண நெறிகளையும் இலகுவாக விளங்கிக் கொள்ள முடியுமென்று பதிலளித்தார். அத்துடன் தொல்காப்பியத்திலிருந்தும் ஆங்கிலக்கவி சேக்ஷ்பியரின் கவிதைகளிலிருந்தும் சில விளக்கங்கள் தந்து கவிதை இயல்பை விளக்கி, தொடர்ந்து பல கவிதைகள் நான் எழுத வேண்டுமெனத் தூண்டினார். இப்பெருமகனை நான் என்றென்றும் போற்றுகிறேன்.

பல்கலைக்கழக வாழ்விலும், இலங்கை மின்சார சபையில் பொறியியலாளராகப் பணிபுரிந்த ஆரம்ப காலத்திலும் எழுதிய கவிதைகள் 'எண்ணக்கோலம்' என்ற நூலாக வெளிவந்தன. பின்னர் உயர் பதவிகள் வகித்த காலங்களில் எதனையும் படிக் கவோ எழுதவோ நேரம் கிடைப்பது அரிதாக இருந்தது. ஆயினும் சில வேளைகளில் உள்ளத்துணர்வுகள் அனுபவங்கள் கவிதைகளாக முகிழ்ப்பதுண்டு. அவை மனதிற்கு ஒரு வித அமை தியையும் புத்துணர்ச்சியையும் தந்தன. இங்ஙனம் எழுந்த கவிதைகள் பல 'உணர்வுக்கோலம்' என்ற உருவில் இன்று வெளி வருகின்றன. இதிலுள்ள 'சிந்தனையும் வந்தனையும்' என்ற பகுதி யிலுள்ள பாடல்கள் பல எண்பதுகளில் சௌவுதி அரேபியாவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணிபுரிந்த காலத்தில் எழுதப்பெற்றவை. இஸ்லாமைத் தவிர பிற மதங்களைச் சகிக்காத ஒரு நாட்டில் வாழ்ந்த வேளையில் இத்தகைய பல கவிதைகள் மலர்ந்தது எனக்கே வியப்பாக இருககிறது.

இந்நூல் வெளிவருவதற்கான குறிக்கோள் என்று கூற எதுவும் இல்லை. தொடர்கின்ற போரினால் ஈழத் தமிழர்கள் ஒவ்வொரு வரும் ஏதோ ஒரு விதத்தில் பாதிக்கப்பட்டுள்ளனர். உயிர்கள் உடைமைகள் தொடர்ந்து அழிகின்றன. அனாதைகளாகச் சிதறுண்டு அலைகின்றனர். கல்வி, கலாச்சாரம், பாரம்பரியம் போன்றவை சிதைகின்றன.

கீழைத் தேசத்தின் சிறந்த நூலகமான யாழ்ப்பாணம் பொது நூலகம் 1980ல் எரிக்கப்பட்டது. பல்லாயிரக்கணக்கான அரிய சுவடிகள் எரிந்து சாம்பலாயின.

தனிப்பட்ட முறையில், எல்லோரையும் போல் நானும் பல இழப்புக்களைச் சந்தித்தேன். எனது தந்தை காலத்து அரிய தமிழ் நூல்களை உள்ளடக்கிய என் தனிப்பட்ட நூலகமும் இவற்றில் அடங்கும். எனது ஆக்கங்கள் பலவும் கூட அழிந்துவிட்டன. எழுதிய கவிதைகளில் எஞ்சியிருப்பவற்றைப் பேணுவதற்கு உதவும் என்ற எண்ணத்தில் இந்நூல் வெளிவருகிறது. இதிலுள்ள கவிதைகள் பல ஈழத்திலும் தமிழகத்திலும் உள்ள பத்திரிகைகள் சஞ்சிகைகளில் முன்பே வெளிவந்தவை.

தமிழகத்தில் வெளிவரும் இந்நூலுக்கு ஒரு அறிமுகம் தேவையெனக் கருதி சென்னைப் பல்கலைக் கழக தமிழ் இலக்கியத் துறைத் தலைவர் டாக்டர் பொற்கோ அவர்களை அணுகினேன். சென்ற ஆண்டு சென்னையிலுள்ள உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் நிகழ்ந்த கருத்தரங்கில் ஆய்வுக் கட்டுரை ஒன்று படிக்கச் சென்ற போது அவரின் உரையைக் கேட்கும் வாய்ப்புக் கிடைத்தது. கருத்தாழமும், ஒழுங்கும், நேர்மையும், அறிவுசார் அணுகுமுறையும் கொண்டதாக அவர் பேச்சு அமைந்திருந்தது. ஆகவே அவரிடம் முகவுரை என்ற பெயரில் ஒரு அறிமுகவுரை வாங்க விழைந்தேன். தொலைபேசி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலம் என்னை நானே அறிமுகம் செய்து கொண்டு, அவரின் அலுவலகஞ் சென்று என் கவிதைப்பிரதிகளைக் கொடுத்தேன். குறிப்பாக எந்தக் கவிதையையும் தொட்டு விளக்காமல் பொது வான ஒரு சிறுமுகவுரை தருவதாகக் கூறினார். எனது கவிதை களை அறியாத நிலையில் அவர் தந்த இப்பதில் நான் எதிர்பார்த்ததுதான். ஆயினும் கவிதைகளைப் படித்தபின் நல்ல முகவுரை எழுதுவாரென்ற நம்பிக்கை எனக்கிருந்தது. நான் எண்ணியதற்கு மேலாக சிறப்புரை என்ற பெயரில் சிறந்ததொரு மதிப்புரையை வழங்கியுள்ளார். ஓய்வற்ற பணிகளுக்குகிடையில் சிறப்புரை எழுதித் தந்த டாக்டர் பொற்கோ அவர்களுககு எனது உளங்கனிந்த நன்றி.

இந்நூலுக்கு வாழ்த்துரை வழங்கிய டாக்டர் வை. இரத்தின சபாபதி அவர்கள் சென்னைப் பல்கலைக்கழகத்துச் சைவ சித்தாந்தத் துறையின் தலைவராக இருந்தவர். தமிழ்ப் பேரறிஞராகவும் தத்துவஞானியாகவும் விளங்கும் இவர் தமிழகத் திலும் பிறநாடுகளிலும் பெரிதும் மதிக்கப்படுபவர். பல விருது கள் பெற்றவர். என் போன்றவருக்கு சைவசித்தாந்த தத்துவத்தின் ஆழத்தை உணர்த்திய, உணர்த்துகின்ற, சிறந்த சிந்தனையாளர். அவருக்கு நான் என்றென்றும் நன்றியுடையவனாவேன்.

கவிதைகளின் படிகளைப் பார்த்து அச்சுப் பிழை திருத்த உதவிய வே. திருநாவுக்கரசு (அரசன் பிரிண்டேர்ஸ், கொழும்பு) அவர்களுக்கும், இந்நூலைச் சிறப்புற அமைத்துத் தந்த 'மாசறு D.T.P.' உரிமையாளர் ஜெயராஜ் ஷோபனா தம்பதிகளுக்கும் என் நன்றியைத் தெரிவிக்கிறேன்.

**சென்னை - *90*** **க. கணேசலிங்கம்**
20.3.1997

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளுறை


| | பக்கம் |
|---|---|
| வாழ்த்துரை | 3 |
| சிறப்புரை | 5 |
| முன்னுரை | 14 |
| உள்ளுரை | 18 |
| காணிக்கை | 22 |

**அழகின் அலைகள்**

| | | |
|---|---|---|
| 1. வசந்தம் நடை பயின்றாள் | ... | 25 |
| 2. மதியும் புவியும் | ... | 27 |
| 3. அழகும் ஆற்றலும் | ... | 29 |
| 4. மீட்டும் கேட்டேன் | ... | 31 |
| 5. எழிலின் நிறைவு | ... | 32 |
| 6. எழில்நிறை இன்பம் | ... | 33 |
| 7. அரும்பு | ... | 34 |
| 8. தளிர் | ... | 36 |
| 9. அழைப்பு | ... | 38 |
| 10. கானங்கலந்தது! | ... | 39 |
| 11. முத்துக்கள் | ... | 41 |
| 12. ஏன் பிரிந்தாய்? | ... | 42 |
| 13. காலத்தின் போக்கினிலே | ... | 43 |
| 14. மீண்டும் நினைவுகள் | ... | 45 |
| 15. கோபம் | ... | 48 |
| 16. அலைகள் | .. | 49 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வாழ்வுப்பாதை**

17. வசந்தம் காண நடக்கின்றேன் ... 53
18. பாலைவனத்துப் பயணம் ... 54
19. இது மனிதர் கூட்டம்! ... 56
20. ஏழை வாழ்வு ... 57
21. பொங்கல் ... 59
22. ஞாலம் மலர்ந்தது! ... 61
23. தெரிவை அறிவாளோ? ... 62
24. சங்கமம் ... 63
25. கதவு திறந்தது ... 65
26. சாதியை வேரறுப்பாய்! ... 66
27. அப்பாவி சிக்கினான்! ... 67
28. ஊன்றுகோல் ... 69
29. சுவடுகள் ... 70
30. மல்லிகைப் பந்தல் ... 72

**தமிழ், தமிழர்**

31. வாழுமா தமிழ்? ... 75
32. தமிழ் அழியும் நிலை ... 76
33. இன்னும் வாழ்கிறேன்! ... 78
34. மண்ணின் மைந்தன் ... 79
35. பாரதமே எமை அணைப்பாய்! ... 81
36. தமிழ் ஒளியை ஏற்றுவோம்! ... 83
37. என்பார்வையில் ஒருகுறள் ... 84
38. ஈரடியால் இருள் களைந்தாள் ... 85

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

39. தமிழ்ச்சுடர் விபுலானந்தன் ... 87
40. முத்தமிழ்க் காவலன் ... 88
41. சுயமரியாதைச் சுடர் ... 90
42. ஆறுமுக நாவலர் ... 92
43. நாவலன் வழி சென்ற மேதை ... 94
44. சித்தாந்தமேதை செந்திநாதையர் ... 96
45. ஆத்மஜோதி முத்தையா ... 98

## சிந்தனையும் வந்தனையும்

46. ஆன்ம தாகம் ... 101
47. உயிர்த் துடிப்பு ... 103
48. சிதறும் அலைகள் ... 104
49. தத்துவம் ... 106
50. பனித்திரை ... 108
51. நீர்மேற் குமிழி ... 109
52. குவிந்த இருள் ... 110
53. காலத்தின் திரைக்கிழித்து ... 111
54. உண்மையறிந்திலர் ... 113
55. ஒளிவெள்ளம் ... 114
56. தெய்வசிந்தனை ... 115
57. உள்நிற்கும் ஒளி ... 116
58. அமைதி அருள்வாய்! ... 117
59. மெய்ப்பொருள் உணர்வு ... 118
60. நலங்கள் பெருகும் ... 119
61. கற்பக விநாயகா! ... 120
62. வாணி நீ அருள்வாய்! ... 121

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

63. வேலவா ஓடிவா! . . . 123
64. இருள் கடியும் கதிர்வேலா . . . 125
65. வள்ளல் நீயே! . . . 127
66. அன்பின் வடிவம் இயேசு . . . 128


**பல்வகை**


67. தெய்வத்தை எங்கே தேடுகிறாய்? . . . 131
68. அருட் பிச்சை . . . 132
69. எழில் அரசி . . . 133
70. துணைவி . . . 134
71. மெய்ப்பொருள் தேடி . . . 136
72. உண்மையின் ஊற்று . . . 137
73. கடலும் உளமும் . . . 138
74. சிரித்தனன் கண்ணன் . . . 140
75. விவேகானந்தா! . . . 142
76. உயர்வுற உள்ளல் . . . 144
77. ஒளிவளர் விளக்கு . . . 147
78. வெள்ளத்தனைய மலர்நீட்டம் . . . 151
79. கவி படைத்துக் கலை வளர்ப்போம். . . 155

எண்ணக்கோலம் நூலிலிருந்து . . . 159



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணிக்கை

இளமையும் அழகும் இனிமையும் உடைத்தாய்
பழமையிற் சிறந்து விளங்குபைந் தமிழே!
உன்னெழில் எந்தன் உளத்தினில் பெய்து
சின்ன வயதிலென் சிந்தையிற் காதலை
மூட்டிய தந்தையென் முன்னறி குரு;அவன்
நாட்டினிற் பலர்புகழ் நல்லா சிரியன்.
பெற்று வளர்த்தெனைப் பெருமையும் உரனும்
உற்றவ னாக்க உளத்தினிற் கொண்ட
உத்தமன், வாழ்வில் உயர்நெறி உணர்த்திடு
வித்தகன் ***கந்தை யா***வெனும் எந்தை;
அவன்பத மலர்களுக் கிந்தக்
கவிமலர்த் தொகுதி என்னெழிற் படைப்பே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகின் அலைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
11-8-2000
LIBRARY

*பாலை நிலமான அரேபிய நாட்டிலும் வசந்தம் வருகிறது. கொடிய கோடைக்கு முன் அழகு குலுங்குகிறது.*

# வசந்தம் நடை பயின்றாள்!

வரண்டு விரிந்துசெல் பாலை வனத்தினில்
வசந்தம் நடைபயின்றாள்! - இள
வசந்தம் நடைபயின்றாள்!
இருண்டொளி நீங்கிய மாலையி லேயவள்
இளமதி யாயெழுந்தாள்! - உளம்
குளிர்மதி யாயெழுந்தாள்!

கானகப் பாதையில் காணும் மரங்களில்
கவின்மலர் சிந்திநின்றாள்! - இதழ்
தவழ்நகை சிந்திநின்றாள்!
தேனமு தாகிய தென்றலி லேநறும்
தீங்கவி தந்துநின்றாள்! - எழில்
தேங்கிட வந்துநின்றாள்!

520123

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈர மிலாநிலத் தோடிடு பாதையில்
ஏகிக் களைத்து நின்றேன்! - துரும்பு
ஆகிக் களைத்து நின்றேன்!
தூரம் நடந்தபின் வந்தணைந்தாள்; - உடல்
தொட்டுத் துயர்களைந்தாள்! - இன்பம்
கொட்டித் துயர்களைந்தாள்!

கருந்திரை மூடிய பொம்மைகளை, வெறும்
காகிதப் பூக்களையே - உணர்வு
ஏகிய மாக்களையே
விருந்தெனக் கண்டு நடந்துசென் றேன்,இன்று
வேனில் முகம் மலர்ந்தாள்! - இந்தக்
கானில் முகம் மலர்ந்தாள்!

காலத் திரைகிழித் தோடினேன்! என்னுளக்
காதலின் மேடையிலே - அலை
மோதிடும் மேடையிலே
கோலக் களிநடம் ஆடும் மயிலொன்று
கொஞ்சிக் குலாவியதே! - எழில்
கொஞ்சநின் றாடியதே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதியும் புவியும்

வானத் திருந்திந்த வையத்தை நோக்கிடும்
வண்மதி யே!சென்ற நாட்களெல்லாம்
மோனத் தவத்தினில் மூழ்கினை யோ?பயன்
முற்றும் கிடைத்ததோ இன்றுனக்கே?

வாடி மெலிந்தனை காதலினால் இந்த
வையம் அலைக்கரம் நீட்டியுன்னைக்
கூடி மருவ நினைத்தன னே!நிலாக்
கோதைஉன் கன்னிமை போனதடி!

காதலின் போதையில் கன்னஞ் சிவந்திடக்
காத்திருந் தாய்!புவி ஆசையுடன்
பேதைஉன் கன்னத்தில் பெய்தமுத் தங்களோ
பேருல கெங்கும் தெரியுதடி!

இன்றுன தெண்ணங்கள் கூடின வோ?புவி
என்றும் இனியுனைக் கூடிடுமோ?
ஒன்றுனக் கிங்குநான் கூறிடு வேன்,காதல்
உற்றவர் தம்கதி பற்பலவே!

வானத்து மேடையில் மேகங்கள் கூடியே
வண்ண மணப்பந்தல் போட்டனபார்!
கானத்தி லேமலர்க் கூட்டங்கள் கூடியோர்
கல்யாண மாலை சமைத்தனகாண்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீனினம் முற்றும்உன் மேடைக்கு வந்தன:
மேடை முழுதும் ஒளித்திரள்கள்!
வானத் திருந்துநீ நாணுகின்றாய்! இங்கே
வையம் துடிக்கிறான் மாலையிட!

இன்பத்தின் எல்லையில் பொங்கிடும் உன்எழில்
இப்புவி செய்தநல் முற்பயனோ?
அன்பெனும் ஆழியில் நீந்திடு வாய்!இனி
ஆயிரம் தோற்றத்தில் ஆடிடுவாய்!

**வேறு**

இடியிடித்தது மணமுடித்திடு
பொழுதொலித்திடு இசையதோ?
பொடுபொடுத்திடு சிறுமழைத்துளி
மணவறைத்தெளி பன்னிரோ?
கொடியெனத்திகழ் ஒளிபடைத்தமின்
புவிதொடுத்திடு தாலியோ?
அடியெடுத்துவை மதி,உனைப்புவி
அணையும்போதுடல் நாணிடேல்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*ஓடும் நதியிற்றான் எத்தனை அழகு! அதன் நளினமும் எழிலும் கலை உள்ளங்களைக் கவர் கின்றன. அதன் ஓட்டத்தில் கலந்த ஆற்றலோ எந்திரங்களை இயக்குகின்றது; மின்சக்தி பிறக்கின்றது; உலகுக்கு ஒளி கூட்டுகிறது.*

# அழகும் ஆற்றலும்

இன்றிவ் வுலகின் இருளைக் களையும்
எழில்மின் னொளியாய் மிளிர்கின்றேன்!
சென்றந் நிலவைச் சேர்மின் கலத்தின்
செயலின் திறன்என் வலுவாகும்!

எங்கோ கேட்கும் இன்னிசை கொணர்ந்து
இங்கே தருவேன் வானொலியில்!
எங்கோ தெரியும் எழிலார் காட்சி
இங்கே தொலைகாட் டியிற்றருவேன்!

மின்னல் கீற்றில் நெளியும் ஒளியாய்
மேகத் திடியாய் மேவிடுவேன்;
பின்னோர் பொழுதில் மின்னாய் மிளிர்என்
பிறப்போர் அழகுக் கதையாகும்!

இளமைப் பெண்ணின் எழிலோ டசையா(து)
இருக்கும் மலையை வருமுகில்கள்
தழுவும் பொழுதென் உதயம்; மலையில்
தவழும் நதியாய் வந்துதித்தேன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழிலின் நிறைவும் இழுமென் னொலியும்
ஏரார் நடையும் கொண்டேநான்
பொழிலும் வயலும் புதரும் காடும்
புகுந்து நடந்து ஓடலுற்றேன்!

புலவர் பாடிப் புகழ நடந்தேன்;
பொறியிய லாளர் எனைமறித்தார்!
கலையும் பொலிவும் களையும் மாறிக்
கவின்நீர்த் தேக்கம் எனநின்றேன்!

அணையிட் டென்னைக் கட்டிய அறிஞர்
ஆணைப் படிநான் செல்கின்றேன்;
கணமோர் வேகத் துடனே வீழ்ந்தவர்
காட்டிடு பொறிகளை ஓட்டுகிறேன்!

அழகின் திருவாய் அன்றோர் நதியாய்
ஆடிச் சென்றேன்; இன்றோநான்
சுழலும் பொறியில் உருவும் மாறிச்
சுடரும் மின்னாய் உதிக்கின்றேன்!

ஓடிச் சுழன்று ஓவென் றிரைந்து
உறுமும் பொறியில் உதித்தெங்கும்
ஓடிச் செல்லும் மின்னோட் டத்தில்
உலவும் ஆற்றல் என்மூச்சே!

இருளைப் போக்கும் எழில்மின் னொளியாய்
இன்றிவ் வுலகில் மிளிர்கின்றேன்!
விரியும் விசும்பின் பொருட்கள் தனிலே
வெவ்வே றுருவாய் ஒளிர்கின்றேன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீட்டும் கேட்டேன்

மீட்டும் உனதுகுரல் கேட்டேன்! - பல
நாட்கள் கழிந்தபின்பு கேட்டேன்!

குளிரும் நிலவொளியில் குளிக்கும் நிலமடந்தை
எழிலை விழிபருக எழுமோர் வெறியிலிந்த
வையத் தெனைமறந்து செய்யும் கவிதையொரு
மையல் தரச்செவியில் எய்தும் மதுரகுரல்

மீட்டும் ஒருமுறைநான் கேட்டேன்! - உன்
பாட்டை மறுபடியும் கேட்டேன்!

மண்ணில் சருகுதிர வண்ணத் தளிர்தெரிய
கண்ணைக் கவர்ந்துகவின் மலர்கள் குலுங்கிவிட
எண்ணம் கவருமிள வேனில் எனைமயக்க
பண்ணைக் குழைத்துஇளம் தென்றல் தழுவிவிட

மீட்டும் உனதுகுரல் கேட்டேன்! - உன்
பாட்டை எனைமறந்து கேட்டேன்!

வாட்டம் களைந்தமுதப் பாட்டாய்ப் பலதடவை
கேட்டு மகிழ்ந்தஇளம் நாட்கள் நினைவுவர
வீட்டில் குளிர்நிழலை ஊட்டும் மரத்திலின்பம்
கூட்டிக் குக்கூவென்று கூவும் எழிற்குயிலே!

மீட்டும் இனியகுரல் கேட்டேன்! - பல
நாட்கள் கழிந்தபின்பு கேட்டேன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழிலின் நிறைவு

என்னைத் தேடும் எழிலின் நிறைவாய் இருக்கின்றாள்!
இதழ்கள் அவிழும் பனிமென் மலராய்ச் சிரிக்கின்றாள்!
மின்னல் கீற்றின் ஒளியாய் விழிகள் மிளிர்கின்றாள்!
மேகத் துறைவெண் ணிலவா யமுதைப் பொழிகின்றாள்!

குழலும் யாழும் குரலின் இசையாற் பழிக்கின்றாள்!
குழையும் மொழியில் தேனின் துளிகள் தெளிக்கின்றாள்!
பழகும் பொழுதில் புவியின் துயர்கள் துடைக்கின்றாள்!
பாடும் கவியில் பாரின் எழில்கள் படைக்கின்றாள்!

மலரின் அழகும் மணமும் அவளே! மண்மீதென்
மனையின் ஒளியும் மலர்வும் அவளே! இல்வாழ்வில்
உலவும் தென்றல், கலையா உறவு, இருள்கீறும்
உதயச் சுடர்,என் மழலைச் செல்வம் மகளாவாள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழில்நிறை இன்பம்

ஞாலமிருள் மாழஒளி காலவரும்
கோலஇள ஞாயிறெழத் தாதவிழ
ஓலமிட்டுப் புட்களெல்லாம் ஒலியெழுப்பும்! - அக்
காலையெட்டுத் திக்கும்இன்ப ஒலியெழுப்பும்!

திங்களெழ முந்தியலை பொங்கிவிட
நுங்குகடல் எங்கும்நுரை சிந்திவிட
இங்கிதம் நிறைந்தஇசை மெல்லஎழும்பும்! - உளப்
பங்கயம் நிறைந்துமது மெல்லத்தழும்பும்!

நெஞ்சிலலை பொங்கியெழச் சந்தநகை
சிந்தியிள வஞ்சியிதழ் கொஞ்சவர
முந்திவரு கண்களொளி சிந்தைதொடுமே! - அவள்
சொந்தமென வந்தவுடன் சிந்தைசொலுமே!

முத்துநகை பொத்துவர மெத்தஎழில்
எத்திமழ லைச்சொல்தவழ் கொத்துமலர்
ஒத்ததளிர் தத்தியெனைத் தாவவருமே! - என்
சித்தமிசை புத்தமுதம் மேவிவருமே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரும்பு

அன்பில் விளைந்த அமுதம்நீ! - என்
அகத்தில் மலர்ந்த குமுதம்நீ!
இன்பம் கொடுக்கும் எழிலல்லவோ! - என்
இதயம் தொடுமுன் எழிலல்லவோ!

திங்கள் பழித்த முகம்மலரோ? - இளந்
தென்றல் விழுந்திடும் தேன்மலரோ?
கங்குல் கிழிக்கும் இளங்கதிரோ? - என்
கன்னிமை தந்த நறுங்கனியோ?

மொட்டு மலர்ந்திடும் போதினிலே - அதில்
மொய்த்த அளிகளோ உன்விழிகள்?
மொட்டு மலர்ந்து துளிர்த்திடுந்தேன் - உன்
முத்துச் சிரிப்பில் முகிழ்த்திடுதே!

தங்க நிறத்துத் தளிருடலை - நான்
தாவி அணைத்திட வேண்டுகிறேன்;
அங்கிருந் தேயெனை நோக்குகிறாய்; - உளத்(து)
ஆசைகள் யாவையும் தேக்குகிறாய்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடிவந் தேயெனைத் தாவுகின்றாய்! - நான்
ஆவ லுடனுனைத் தாவுகின்றேன்!
தேடிவந் தாலும் கிடைத்திடுமோ - இளந்
தென்றலின் சாயலில் உன்சுகமே!

கொஞ்சும் மதலையைச் சிந்துகின்றாய்! - எழிற்
கோல நகையுடன் வந்துநின்றாய்!
கொஞ்சி யணைத்து மகிழ்ந்துநின்றேன்! - மனக்
கோயில் நிறைந்தஎன் இன்னுயிரே!

உள்ளம் கலந்திடும் போதினிலே - எந்தன்
உள்ளம் எழுந்தஎன் பேரெழிலே!
கள்ளம் இலாத நறுமலரோ! - இளம்
காதல் மலரெழும் தேன்துளியோ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தளிர்

முத்துச் சிரிப்பினொலி எத்தித் தவழ்ந்துமலர்க்
கொத்திற் பிறந்துமிகத் தித்திப் புடையமது
மெத்தக் குழைத்தமத லைச்சொல் தனைச்சிதறி
தத்தித் தவழ்ந்துமடி தாவும் தமிழ்ப்பிழம்பே!

சின்னஞ் சிறியஉடல் தன்னில் மலர்ந்துவிடும்
மென்மை இளந்தளிரின் தன்மை; உனதுமுகம்
பொன்னின் இதழ்விரிந்த போதின் மலர்ச்சி!எந்தன்
கன்னிப் பருவத்தில் பின்னிப் பிணைந்தஎழில்!

கன்னல் எனதுமுலை தன்னைச் சுவைத்தமுதம்
கன்னம் வழிந்தொழுகு முன்னம் விரைந்து'களுக்'
கென்னச் சிரித்தஒலி எங்கும் எதிரொலிக்க
இன்பம் நிறைந்ததெழில் தங்கும் தமிழ்க்கொழுந்தே!

கீழைத் திசையின்இருள் கீறிப் பிளந்துவரும்
வேளைப் பொழுதுமலர் காலைக் கவின்வனப்பும்
ஆழக் கடலினொளி காலும் மணிகள்எழில்
யாழின் இசையாவும் ஆளும் கலைவடிவே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தம் புதியமலர் எத்தும் புனிதமணம்
தித்தித் திடுநறுந்தேன் திங்கள் எழுங்குளிர்மை
மெத்தச் சுமந்தஇளந் தென்றல் அதன்குழைவு
சித்தத் தலத்தினிலே இத்தனையும் சேர்த்திறைவன்

உன்னைப் படைத்திட்டான் என்இதயக் கோவிலிலே
கன்னி வயது,இன்பக் கனவுஎழிற் கற்பனைகள்
பின்னிப் படருமிளம் பேதைப் பருவத்தில்
என்னுள் எழிலாகி எழிலின் மலராகி

எங்கும் மணம்பரப்பிப் பொங்கும் புதுஉவகை
தங்கும் படிஎந்தன் அங்கம் சிலிர்த்துவிட
இங்கு எழுந்தனை!பேர் இன்பம் கொடுத்தனை!நீ
திங்களோ! பங்கயமோ! செங்கரும்பே! செழுந்தளிரே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழைப்பு

வானத்து வெண்ணிலவின் தண்ணொளியிற் றோயும்
வையத்தின் எழில்காண வாவென்று கேட்டாய்!
மோனத்தில் மூழ்கிஅலை மோதுகடற் கரையில்
முழுஇரவும் காதலிலே மூழ்கிடுவோ மென்றாய்!

வானத்து வெண்ணிலவுன் வண்ணமுகம் கண்டு
வாடிவிடும், பாவம்அது தன்சிறுமை கண்டு!
மோனத்தில் முழுஇரவும் மூழ்கிவிடில் பின்பு
முத்தமிட்டுப் பாட்டிசைத்து மகிழ்வதெப்போ
தென்றேன்.

அலைமோது கடல்பாடும் எழில்மேவு கீதம்;
அமுதான கதிர்வீசும் மதி;எந்தன் உள்ளம்
கலைமேவும்; எழில்சேரும்; ககனத்து மீன்கள்
கண்மூடும்; இதுகாண வாவென்று கேட்டாய் !

கலையே ! உன் விழிகூறு கனிவான காதல்
கலையாது நிலையாகி உறவாடு மோதான்?
கலைதேயு நிலவாகிக் கனவாகி உள்ளக்
கடலோரம் நுரையாகி கலைந்தேகு மோதான்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கானங்கலந்தது!

கன்னிஅவள்! அன்னை கண்களின் முன்பொரு
காதல் அறிந்திடாப் பேதையவள்!
சின்னக் குழந்தையென் றெண்ணிநின் றார்;அவள்
சிந்தை நிறைந்தது ஓருருவம்!

காலைக் கதிரவன் தோன்றிவிட் டாலவள்
கண்களி லெத்தனை யோகதிர்கள்!
வாலைக் குமரியின் வண்ண இதழ்களில்
வந்துநிற் கும்ஒரு சந்தநகை!

ஓடிடு வாளறைக் குள்ளொரு மேசைமுன்
ஒத்திகை செய்திடு வாள்;களிப்பில்
ஆடிடு வாள்;பளிங் கொத்தகண் ணாடிமுன்
ஆயிரந் தோற்றத்தில் நின்றிடுவாள்!

எத்தனை யோதரம் ஒத்திகை போட்டபின்
இன்பத்தின் போதையில் வந்துநிற்பாள்;
இத்தரை மீதினில் கால்பர வாமலே
ஏகிடு வாள்கல்விக் கூடத்திற்கே!

நேரங் கழித்தவள் வீடுசெல் வாள்;அந்த
நேரத்தி லேநினைப் பேதுமில்லை!
ஆரத் தழுவி அணைத்தன னோ?இல்லை
அன்புடன் பேசிச் சிரித்தனனோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்ணும் உணவினில் நாட்டமில் லை;அவள்
உள்ளம் பிறந்தஅவ் வீட்டிலில்லை;
எண்ணம் அழிந்தவள் ஏங்கிடு வாள்;ஏதோ
எண்ணித் தனக்குள் சிரித்திடுவாள்.

வீணை தழுவும் விரல்களி லேஅந்த
வீணை விழுந்திடும் நோக்கமில்லை;
நாணம் நிறைந்தவள் கோணிடு வாள்!அந்த
நாதன் நினைப்பினில் மூழ்கிடுவாள்!

நாட்கள் கழிந்தன; நாதன் எழுதிய
நாலைந்து காகிதம் அன்னையிடம்
காட்டின வேஅவள் காதலை! அம்மம்ம!
காட்சி யழிந்தவள் ஏங்கிநின்றாள்!

எத்தனை யோகதை கட்டின ரூரவர்;
எத்தனை யோமுறை பேசினரே!
இத்தரை மீதினில் செய்யத் தகாததை
இங்கிவள் செய்தன ளோ,உலகே?

காலத்தின் கோலத்தில் கன்னி இசைந்தஅக்
கானங் கலந்தது காற்றினிலே!
ஞாலத்தி லேயொரு நல்லிசை கூடியே
நண்ணிக் கலந்ததிக் கானத்துடன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்துக்கள்

நெஞ்சைப் பிழிந்தனை;
நிம்மதி குலைத்தனை;
விஞ்சிடும் ஆசைகள்
வேதனை ஏக்கங்கள்

எத்தனை யோஉளத்(து)
ஏற்றினை; எண்ணங்கள்
எத்தனை யெத்தனை
யெத்தனை யோதந்து

சென்றனை! சென்றிடும்
போதினில் கண்களில்
நின்றவை கூறிடும்
நீள்கதை நற்கவி

முத்துக்க ளாக முகிழ்த்தன! - இதழ்
முத்தங்கள் வேண்டித் தவித்தன!
சித்தத்தில் என்ன நினைத்தனை! - எந்
நித்தமும் சொன்னவை யெத்தனை?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏன் பிரிந்தாய்?

நேற்று எறித்த நிலவில் இனித்த
நீள்கதை பேசிநின் றாய்!
வேற்று மனிதர் நிற்பினும் காதல்
வீணையை மீட்டிநின் றாய்!
ஆற்று மணற்றரை ஆயிரம் பொற்கதை
ஆக்கி அளிக்குமென் றாய்?
'நேற்று' மறைந்தது; நெஞ்சில் நிலைத்திடும்
நீஎனை ஏன்பிரிந் தாய்?

மல்லிகை மொட்டு மலர்ந்திடும் கூந்தலில்
மாரி சுமந்துவந் தாய்?
வில்லினை யொத்த புருவம் வளைத்தந்த
வேல்விழி பாய்ச்சிவிட் டாய்!
எல்லை யிலாத அன்புநெய் பெய்துநீ
என்னகம் பற்றவைத் தாய்?
சொல்லில் இல்லாத சோகத்தில் என்னுளம்
சோர்ந்திட ஏன்பிரிந் தாய்?

புன்னகை யொன்று பூத்த இதழ்களும்
பொற்சிலை உன்னெழி லும்
கன்னஞ் சிவந்து காதல் மிகுந்துகண்
மூடிய உன்நிலை யும்
பின்னர் இமைகளை மெல்லத் திறந்தங்கு
பேசிய வார்த்தை களும்
கன்னி,உளத்தினில் காலமெ லாமுந்தன்
காதலைத் தானுன :க் கும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தின் போக்கினிலே

நீலக் கடற்கரையில் - நிலா
காலும் மணற்றரையில்
நெஞ்சம் நெகிழ்ந்திடக்
கொஞ்சி யிருந்ததை
நீணிலம் கூறிடுமோ? - அந்த
வேணிதான் கூறிடுமோ? - அந்த
நீலக் கடற்கரையில் - நிலா
காலும் மணற்றரையில்.....

மாலைப் பொழுதினிலே - சுடர்
வீழும் பொழுதினிலே
மங்கலப் பண்ணிசை
அங்கலை கூட்டிட
மங்கின துன்பமெல்லாம்! - அங்கு
பொங்கின இன்பமெல்லாம்! - அந்த
மாலைப் பொழுதினிலே - சுடர்
வீழும் பொழுதினிலே....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணம் கலந்திடவே - எழில்
கண்ணிற் கலந்திடவே
    எத்தனை யெத்தனை
    எத்தனை யோகதை
    பித்தர்கள் போற்கதைத்தோம்! - வெண்
    முத்துக்க ளோவிதைத்தோம்! - எம்
எண்ணம் கலந்திடவே - எழில்
கண்ணிற் கலந்திடவே...

காலத்தின் போக்கினிலே - இந்த
ஞாலத்தின் நோக்கினிலே
    கண்களில் மீட்டிய
    காதற் கனவுகள்
    காலத்தை வென்றிடுமா? - இந்த
    ஞாலத்தில் நின்றிடுமா?
காலத்தை நாமறியோம்! - இந்த
ஞாலத்தை நாமறிவோம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் நினைவுகள்

அழகுத் திருமுகம் கண்டேன்! - மீண்டும்
பழமை நினைவுகள் வந்ததே தோழி!
இளமைப் பருவத்தில் ஒருநாள் - என்
எழிலைத்தன் விழிகளால் பருகிச் சிரித்தான்!

இதயக் கடல்பொங்க நின்றேன் - அதில்
இன்பத்தின் அலைமோதி எழில்சிந்தக் கண்டேன்
உதயத்தின் எழிலாகக் காதல் - என்
உள்ளத்தில் அரும்பாதல் அறியேன்நான் தோழி!

தினமுமே மாலையில் வருவான் - வரும்
திசையிலென் விழியவன் வருகைக்கு ஏங்கும்!
கனவுகள் பலகண்டு நிற்பேன் - அக்
கணமிந்த வையத்தில் நானில்லைத் தோழி!

விழிகளுள் எதனையோ தேடி - தன்
விழிகளால் என்னையே வெறியுடன் பார்ப்பான்!
கழிகின்ற காலத்தை மறந்தே - நான்
கண்மூடல் இன்றியே கட்டுண் டிருப்பேன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதலோ இதுஎந்தன் தோழி? - நான்
காண்பதெல் லாமவன் காட்சியாய் நின்றெழில்
மோதுமென் நெஞ்சினில் என்றும்! - காதல்
மொட்டாகி மலர்வதும் காண்கிலேன் தோழி!

கடற்கரை மண்ணிலே இருப்போம் - தன்
கையினால் மணல்மீது கோடுகள் வரைவான்;
படமொன்று கீறினா னென்றே - நான்
பார்க்கையில் என்பெயர் படமாகத் தோன்றும்!

கையைத்தன் கையிலேந் திடுவான் - நான்
கண்களால் கைரேகை பாரென்று கேட்பேன்;
'மெய்யாக நல்லகை' என்றே - என்
மெய்சிலிர்த் திடக்கிள்ளி மெதுவாய்ச் சிரிப்பான்!

வானொலிப் பெட்டியொன் றருகில் - அதில்
வந்தகா தற்பாட்டுச் சிந்தையில் இல்லை!
'தேனொலிக் கும்உந்தன் குரலில் - நான்
சிந்தை இழந்தனன்' என்றுசெப் பிடுவான்!

மாலையில் மதிகண்ட போது - 'என்
மதியிலே தவழும்தண் மதியொன்று உண்டு
வாலைக் குமரி,அது நீதான்!' - என்று
வார்த்தைகள் கவியாக வார்த்துக் குவிப்பான்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிபாடி என்னிடம் தருவான் - நான்
களிப்போடு படிப்பதைக் கண்டே மகிழ்வான்;
புவிகாணும் இன்பங்கள் எல்லாம் - அதில்
பொங்கித் ததும்பும்பின் என்னையே கொணர்வான்!

கவிதைக்குள் என்னையே காண்பான்! - அந்தக்
ககனத்து மீன்களென் எழில்பாடு மென்பான்;
செவிகேட்கும் இன்னிசை யெல்லாம் - என்
சிரிப்பிலே எழும்இன்பப் பண்ணிசை என்பான்!

நானின்றி அவனில்லைத் தோழி! - அவனில்
நானும் கலந்தொன்றாய்க் கரைந்தனன் தோழி!
வானுள்ள வரையெங்கள் உறவு - இந்த
வையத்தில் அழியாது வாழ்ந்திடும் தோழி!

உருவங்கள் வேறான போதும் - எம்
உள்ளங்கள் இடையிலே வெளியொன்றும் இல்லை!
பருவங்கள் மாறலாம் வாழ்வில் - ஆயின்
பண்பட்ட எம்முளப் பான்மைகள் மாறா!

இளமைதான் நிலையில்லைத் தோழி! - ஆனால்
இதயத்து நினைவுகள் அழியா;நான் இன்றோர்
அழகுத் திருமுகம் கண்டேன்! - மீண்டும்
பழமை நினைவுகள் வந்ததே தோழி! .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோபம்

'பொல்லாத கோபம்இனி உன்மீது' என்றாய்;
பொன்னிதழைச் சுழித்துவிழி புரட்டியெனைப் பார்த்தாய்;
பொல்லாத பார்வைஎழில் விழிமீதில் அறிவேன்!
பொன்னான இதழ்மீதில் புன்னகையை அறிவேன்!
பொல்லாத கோபம்இன்று வந்ததென்று சொன்னால்
'பொய்அது'என் றேஇதயம் புகலும்;நான் நம்பேன் !
செல்லாதுன் கோபம்;அது வெகுதூரம் உனக்கு;
சேய்மையிலும் எனைப்பிரியா தெண்ணத்தில் கலந்தாய்!

தோள்மீது தலைசாய்த்து வதனத்தை வைத்துத்
தொடர்காதல் விழிபேச எனைப்பார்த்தாய்; திரையில்
பாழாகப் படமோட உளம்உன்னை நாடப்
பழகியவள் நீயாகி எனில்பாதி யானாய்!
நாளாக நாளாக நாமொன்ற, இன்று
'நான்கோபம்' எனில்நம்ப மாட்டேன்! உன்விழிகள்
வாளாகி உளம்தீண்டி எனைக்கொல்லும்! அழகு
வதனத்தில் எழில்கொஞ்ச வளர்காதல் வெல்லும்!

இன்றுந்தன் கோபத்தைக் காட்டினால் நாளை
என்னருகில் என்னவளாய் நீவந்த பின்பு
என்றென்றும் எத்தனையோ தண்டனைகள் கிடைக்கும்!
என்செய்வாய் அப்பொழுது? இன்பத்தின் பாரம்
குன்றாது புயலாகி வீசிவிடில் திணறிக்
கோபிக்க வேண்டாம்;நான் பொறுப்பல்லப் பின்பு!
என்றென்றும் என்அன்புச் சிறைக்குள்ளே இருந்து
எழிலான மணியாக ஒளிர்வாய்என் எழிலே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலைகள்

பேரெழில் யாவும் பிறந்தொன்று சேர்ந்தொரு
பெண்ணுருக் கொண்டங்கு வந்தது! - என்
கண்ணினின் முன்வந்து நின்றது!
பாரினில் வேறிலை யென்றென துள்ளத்துப்
பாங்கினில் எண்ணங்கள் கூறின! - எழில்
தேங்கிடும் பிம்பத்தை நாடின!

நாடிய பெண்ணவள் நாணி இதழ்களில்
நல்ல முறுவலைக் கூட்டினள்! - உளம்
கொல்லும் நகையினை யூட்டினள்!
தேடிய கண்களப் பூங்கொடி முன்பொரு
தேனுணும் வண்டினை யொத்தன! - இதழ்
தேனுண வேண்டித் தவித்தன!

தங்க வளைக்கரம் தன்னைப் பிடித்திழுத்
தங்கவள் தோளினைப் பற்றினேன்! - களி
பொங்கிடத் தோளினைப் பற்றினேன்!
குங்குமம் போல்முகம் மாறிட மார்பினில்
கோதை முகத்தைப் புதைத்தனள்! - அந்தக்
கோதை முகத்தைப் புதைத்தனள்!

பொங்கிடு காதலிற் கட்டுண்ட பேதையின்
பொன்னிகர் கன்னம் உயர்த்தியே - அதில்
என்னிதழ் முத்தம் இருத்தியே
திங்கள் முகத்தினை நோக்கினேன்; அன்னவள்
செங்கரங் கள்உடல் தாவின! - இன்பம்
பொங்கிட நெஞ்சங்கள் விம்மின!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கித மான இதழ்களுக் கென்னிதழ்
இன்பங்கள் கோடி கொடுத்தன! - அவள்
இன்பத்திற் கீடு கொடுத்தன!
அங்க அசைவுகள் எங்குமே காதலின்
இன்னிசைப் பாடல் தொடர்ந்தது! - அந்தக்
கன்னி அயர்ந்து கிடந்தனள்!

ஞாலம் முழுதும் நிறைந்தஇன் பங்களோ
நாடிவந் தேயுடல் தாவின! - காதல்
பாடிவந் தேயுளம் தாவின!
வாலைக் குமரியும் காதற் கனிரசம்
வண்ண இதழ்களிற் றாங்கினள்! - நான்
உண்ணும் வரையவள் தாங்கினள்!

பாடம் முடிந்தது! பாரினில் பேதையும்
பக்குவ மாக இறங்கினள்! - தோள்
சிக்கிய மாது இறங்கினள்!
ஆடை திருத்திச் சரிசெய்து என்னுளத்(து)
ஆவலுங் கொண்டவள் ஏகினள்! - என்
ஆவி சிறைகொண்டு ஏகினள்!

காதல் முடிந்தது; கன்னி எழுப்பிய
காதல் அலைகளென் நெஞ்சிலே - என்றும்
மோதி அடித்திடும் நெஞ்சிலே!
போதை நிறைந்திடு காதல் கவிதைஇப்
போது பிறந்தது; வாழ்கவே! - இக்
காதல் சிறந்தது; வாழ்கவே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வுப்பாதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வசந்தம் காண நடக்கின்றேன்!

பாலை நிலத்து வழியில் செல்வேன்
பார்வை எதிலும் படராது
மாலைப் பொழுதில் இல்லம் மனைவி
மக்கள் சுற்றம் உளம் மேவும்
வேலைக் கமர்ந்த நாட்டில் தனிமை
வேதனை யொன்றே கூடவரும்
சாலைக் கருகில் ஆடும் செடிகள்
சிரிக்கும் மலர்கள் எனைநோக்கும்!

போவோர் வருவோர் இதயம் மாலைப்
பொழுதின் அழகில் புரளாது
யாவும் வாழ்வில் எழிலே யில்லா
யந்திர மயமாய் சென்றோடும்!
தாவிப் பாய்ந்து ஆடும் மழலைத்
தளிர்கள் உலகே எழில்கூடும்
காவின் வளமில் லாமண் மீதும்
கவினார் அழகின் நிழலாடும்!

வரண்ட நிலத்தில், வசந்தம் வருவாள்
வண்ணப் பூக்கள் மலர்ந்துவிடும்
திரண்டு சிதறும் நினைவின் அலைகள்
தீண்டி உளத்தில் நுரைசிந்தும்
இருண்ட பொழுதில் எழில்மின் விளக்கே
எங்கும் பகலாய் ஒளியூட்டும்!
வரண்ட பாலை நிலத்தில் நாளை
வசந்தம் காண நடக்கின்றேன்!

---

*சௌவுதி அரேபியாவிலிருந்தபோது எழுதியது.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*வாழ்க்கை ஒரு பயணம். அது சோலையிலும் நடக்கலாம்; பாலையிலும் நடக்கலாம். அதிற்றான் எத்தனை அனுபவங்கள் !*

# பாலை வனத்துப் பயணம்

பாலை வனத்திலென் பயணம்! - இந்தப்
பயணம் முடிந்திடும் நாளுமெப் போதோ?
சாலையும் நேர்,சில வேளை - அது
சற்றுக் குறுகி வளைந்துபின் நீளும்!

எத்தனை பேர்வந்து செல்வார்! - அவர்
எத்தனை எத்தனை நாட்களாய்ச் செல்வார்?
எத்தனை காதங்கள் வந்தேன்? - இன்னும்
எத்தனை எத்தனை காதங்கள் செல்வேன்?

மனிதர்கள் கூட்டத்தைக் காண்பேன்; - ஆயின்
மந்தைகள் கூட்டமும் கூடுதல் காண்பேன்!
கனிமரங் கள்சில காண்பேன்; - ஆயின்
கானகம் காய்ந்து விரிந்தெங்கும் தோன்றும்!

தண்புனல் கண்டு களிப்பேன்; - அது
தண்மையில் லாவெறும் கானலாய் மாறும்!
வெண்மலை கள்சில காண்பேன்; - அவை
வெறும்மணல் மேடுக ளாகிப்பின் தோன்றும்!

---

*சௌவுதி அரேபியாவில் இருந்தபோது எழுதியது.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரையிட்ட வதனங்கள் தெரியும், - அந்தச்
திரைசற்று விலகத்தண் முகமலர் தோன்றும்!
கருமுகில் கலைந்திடும் போது - அங்கு
கலைவளர் நிலவுதண் ணெழிலினைக் கூட்டும்!

உள்ளக் கடலலை மோதும்! - மனை
உள்ளவள் பிள்ளைக ளோடெனைச் சேர்வாள்!
கொள்ளையின் பத்திற் குலவி - அன்பு
கொஞ்சும் குழந்தைகள் கூடி மகிழ்வேன்!

கற்பனை மோதிச் சிதறும்! - அங்கு
காண்பவை யாவுமே கலைந்துபின் ஓடும்!
பற்பல காட்சிகள் மாறும்! - இந்தப்
பாலையி லேயெந்தன் பயணமும் நீளும்!

பயணம் முடிந்திடு மட்டும் - இந்தப்
பாலையில் செல்கலம் ஓடிடு மோதான்?
நியதி தவறிடு மோதான்? - இல்லை
நிலைகுலைந் தேயிடை நின்றிடு மோதான்?

ஏதும் நடந்திடக் கூடும்! - ஆயின்
இன்னல்கள் கண்டுளம் சோர்ந்திட லாமோ?
பாதை தெரியும்,நான் போகும் - வழி
பாதியில் நின்றிடில் என்செயல் கூடும்?

காலைக் கதிரொளி தோன்றும்! - அந்தக்
காலத்தை எண்ணியே பாலையில் செல்வேன்!
கோலக் கவினெழில் தோன்றும்! - அந்தக்
கோலத்தில் கானம்பின் னேகிடச் செல்வேன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இது மனிதர் கூட்டம்!

ஒட்டுகின்ற சிறுவயிறு; ஒளிமழுங்கி
உட்குழிந்த இருவிழிகள்; ஒன்றொடொன்று
முட்டிநடைத் தளர்வுணர்த்தும் கால்இரண்டு;
முதுகுவளைந் தசையும்வெறும் என்புக்கூடு!
எட்டியடி எடுத்துவைத்து உணவிற்காக
ஏங்கியெதிர் வருபவரை இரந்துநோக்கி
நெட்டுயிர்ப்பும் நீள்பசியும் நீங்கலின்றி
நிலைதவறி நெறிதவறி நிற்கும்ஏழை!

உடல்தழுவும் உடைஅழுக்கு நாற்றம்வீசும்;
உலகமென்ப தவனளவில் ஒன்றுங்காணான்!
கடலலையும் அலைமுகிலும் கவிதைபாடா!
கதிரவனும் கலைமதியும் கதைகள்கூறா!
தொடர்ந்தெரியும் பெரும்பசியே நாளும்வாழ்வில்;
சோர்ந்தயர்ந்து தொடர்பசியில் துடிதுடித்து
இடருறுமவ் வேழைஇருள் அகற்றயாரும்
இப்புவியில் இல்லை;இது மனிதர்கூட்டம்!

வீதியினில் சுவரருகில் தெருவோரத்தில்
வெளியினிலே வெறுநிலத்தில் வானின்கீழே
நாதியற்ற பலர்நடுவில் பனியில்காற்றில்
நடுங்கியுடல் ஒடுங்கியிரு கைகளாலும்
பாதியுடல் போர்த்துவிட்ப் பரிதவிக்கும்
பாவிநெஞ்சக் குமுறலினை வடிகண்ணீரை
வேதனையைத் துடைப்பதற்கு யாரும்இல்லை!
வெந்தொழிக ஏழ்மைதவழ் இடங்களெல்லாம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏழை வாழ்வு

காலை யெழுந்துடல் வேக வெயில்தனில்
நாளு முழைத்திடு வார்!
காடு வயல்வெளி தானிவ ராலைகள்;
காண்க இவர்உழ வர்!
மாலை வயல்வெளி நின்று நடந்தவர்
மண்குடில் நோக்கிடு வார்;
மங்கும் ஒளியினில் மக்களும் கூடுவர்;
மாலை மறைந்திடு மே!

வேலை முடிந்துடல் சோர்ந்திட வந்தவர்
வீட்டினிற் குந்திடு வார்;
வேதனை விஞ்சுமவ் வீட்டினைப் பார்த்திடின்;
வீழ்ந்திடு மோஅறி யேன்!
காலினை நீட்ட இடங்கிடை யாதங்கு
கைவிளக் கேயொளி ரும்!
காண்பவர் யாரிவர் துன்பத்தை? மேடையில்
கத்திடு வோர்பல ரே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயிற்றி லெழுங்கனல் போக்க நெருப்பினை
வளர்த்திடு வாள்துணை வி;
வளர்பசி போக்கியவ் வீட்டுமுற் றத்தினில்
வீழ்ந்திடு வாருறங் க!
செயலறி யாதுயிர் தூங்கிடும்; எங்கும்
செறிந்திடும் பேயிரு ளே!
செம்மை உழவர்கள் வாழ்வு செழித்திடச்
செய்பவர் ஈங்கிலை யோ?

நல்லறி வில்லை உளத்தினில் உண்மை
நயந்திடு பண்பு மிலை!
புல்லறி வாளர் இவர்புவி மீது
புகழ்திட எதுவு மிலை!
வல்வினை நோக்கி விதியினை நொந்து
வறிது புலம்பிடு வார்!
தொல்லைகள் கண்டு துவண்டு விழுந்திவர்
சோர்ந்திடு வாருல கில் !

வாழ்வு தரும்பெரும் வேதனை யாலுளம்
வெந்திடு மவ்விரு வர்
வாழ்வுமவ் வீட்டுமுற் றத்தினில் தானிருள்
வளர்ந்திட வளர்ந்திடுங் காண்!
ஏழ்மை சிரித்திட ஏந்திழை மென்னுடல்
ஏந்தல் தழுவிடு வான்!
இத்தரை மீதினில் எத்தனை பேரின்னும்
ஏழ்மை தழுவிடு வார்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
11-8-2000
LIBRARY

# பொங்கல்

மொட்டவிழ்ந்த பனிமலரில் முறுவலிக்கும்
மதுத்துளியை மயக்கத்தோடு
தொட்டருந்தும் அளிமதுர ஒலியெழுப்பும்
அதிகாலை; உதயத்தின்முன்
எட்டிசையின் மலர்ச்சியையும் இதயத்தில்
சிறைகட்டும் பொங்கலின்று!
மட்டற்ற மகிழ்ச்சியினில் சிறுவர்கள்
உளம்பொங்கும் உவகைப்பொங்கல்!

"தம்பிஇன்று பொங்கலடா! எழும்பு!வெடி
கொளுத்தவர வில்லையாநீ?
அம்மியினில் மஞ்சளரைப் பதுஅக்கா;
அம்மாதான் கிணற்றடியில்
செம்புமுதல் பாத்திரங்கள் மினுக்குகிறாள்;
நீபல்லை தீட்டு;நான்போய்
நம்முடைய புத்தாடை சட்டைகளை
எடுக்கின்றேன்; குளிக்கவேண்டும்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பைந்தொடிதன் தளிர்க்கரத்தில் படைத்திட்ட
எழிற்கோலம் பார்ப்பதற்கு
விந்தையிலை; வீடுகளில் விளங்குகின்ற
தமிழ்க்கலை;அவ் வெழிலின்ஊற்று!
உந்துகின்ற உவகையினில் எழுமலர்ச்சி!
அதன்பிம்பம்! அழகுக்கோலம்!
செந்தளிரில் மலர்பறிக்கச் சென்றுவிட்டார்
சிறுவர்கள்; மலர்ச்சியெங்கும்!

"பொங்கிறது பால்;அரிசி போடுதற்குன்
அப்பாவைக் கூப்பிடிங்கே"
"எங்கேயோ தெரியாது; என்னம்மா
வெடிகொளுத்த வேண்டாமாநான்?"
"தங்கள்திருக் கையாலே போட்டாற்பால்
பொங்காதோ?" "போங்களத்தான்!
எங்கேயும் இப்படித்தான்; எடுங்கள்இந்த
அரிசியினை; இந்தாருங்கள்!"

பொங்கலின்று பொங்கலென்று பொங்கலினைப்
படைத்துவிட்டுப் பரிதிநோக்கித்
தங்கள்கரம் உயர்த்திஉயிர் தரும்பருதி
தனைவணங்கி மகிழ்ச்சியோடு
செங்கதிரின் எழுச்சியெனச் செழுங்கவிதை
மலர்ச்சியெனச் செறிந்துஇன்பம்
பொங்கியுளம் பொங்கிவிடப் புதுஉலகம்
பொங்கியெழப் பொங்கல்பொங்க!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞாலம் மலர்ந்தது!

குக்கூ எனக்கூவிக் குயிலழைக்கக் கண்விழித்து
கோலக் கவின்இயற்கை அழகிற் குளித்தெழுவேன்!
செக்கச் சிவந்தநிற வானத்தில் ஓவியங்கள்
செய்து கடல்குளிக்கும் செம்பருதி மேற்றிசையில்!

வண்ண நிலாப்பெய்யும் தண்ணொளியிற் கண்துஞ்சும்
வையத் தெழில்கூற வார்த்தை கிடைத்திடுமா?
விண்ணிற் சிறந்ததிந்த மண்ணென்று கூறிவிட
வேறென்ன வேண்டுமிந்தக் கிராமத்தில் எனமகிழ்வேன்!

இன்றோர் நகரத்தில் தங்கி யிருக்கின்றேன்
எழில்மின் னொளியில்இப் புவியும் தெரிகிறது,
தென்றல் சிலவேளை தெரியாத் தனமாகத்
தீண்டும்; உளத்தின்பத் தேன்ஓர் துளிஊறும்!

எதற்கோ துடிக்கிறதென் இதயம்! சிலநாளாய்
ஏங்கித் தவிக்கிறது, எதிலும் நிறைவில்லை;
இதற்கா அதற்காவென் றெண்ணிக் குழம்பிடுவேன்;
இதயத் தெழில்மேவும் அமைதிக் கேங்கிடுவேன்!

காலை மலரவில்லை; கண்விழித்த போதெந்தன்
காதில் ஒருகீதம் கேட்டுக் களித்திட்டேன்!
ஞாலம் நிறையின்பம் அத்தனையும் கொண்டுவந்து
நாவல் மரக்கிளையில் வீட்டருகில் குயிலொன்று

குக்கூ எனக்கூவக் கேட்டேன்! உளம்மகிழ்ந்து
குதித்துக் குதித்தின்பக் கடலிற் குளித்தெழுந்தேன்!
'குக்கூ' தனில்நகரம் கோலம் கலைந்ததடா!
கோலக் கவினழகில் ஞாலம் மலர்ந்ததடா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெரிவை அறிவாளோ?

கள்ளூ வெறியின் மயக்கத்தில் எதேதோ
கடிதத்தில் கீறிவிட்டேன்! கருத்துக்கள் எவையுமில்லை!
தெள்ளு தமிழ்த்தேனே! தெரிநிலவே! உன்விழிகள்
தெறித்து வரும்எழிலில் உளமழிந்தேன்!' என்றெல்லாம்
அள்ளி எறிந்தேன் அழகுதமிழ்ச் சொற்களினை!
அகத்தில் இருந்துதமிழ்க் கன்னி மெதுவாகக்
கள்ளச் சிரிப்பொன்றைக் காட்டி மயக்கிநின்றாள்!
கள்ளுண்ட வேளையிலும் கைகொடுக்கும் கன்னிஅவள்!

அள்ளக் குறையாத அமுதக் கடலெந்தன்
அழகுக் கடிதமென மனைவி பதிலளித்தாள்;
'தெள்ளு தமிழெந்தன் காதலனின் தேனூற்று!
திங்கள் ஒளிகுழைத்தென் எழில்படைக்கும் தீங்கவிதை!
நள்ளிரவின் பின்னும்நான் திரும்பப் படித்திட்டேன்;
நாயக,உன் அன்புக்கு நன்றி!' எனமுடித்தாள்;
தெள்ளு தமிழந்தக் கள்ளின் விளைவென்று
தெரிவை அறிவாளோ? தெரியின் அழுவாளோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கமம்

இளமைநிறை உருஅவளின் இதழமுத கலசம்;
இதழவிழு பருவமலர் எழில்நிறையும் பருவம்
நளினகலை பலவுமவள் நகையினிடை யாடும்;
நகையினிடை ஒளிரெயிறில் நல்முத்துக் கூடும்;
தளருமிடை யொடியுமிரு விழிகளொளி வீசும்;
தளருடலில் படர்துகிலும் இளமைவெறி பேசும்;
களிபெருகு முளமிளமைக் கனவுபல காணும்;
கன்னிமையின் பொன்மலரும் இதழ்விரியும் காலம்!

காலமெனும் ஏட்டிலொரு கதைமுடிந்த தாலே
கலைவளரு சிலையெழிலின் நிறைவுகொண்ட தாலே
கோலமுணர் கொள்கையுயர் சீலர்சில முதியோர்
கொடிபடரக் கொம்புதரு வித்தார்கள்; கடலில்
மாலையொளி வீழுபொழு தாகியநன் நேரம்;
மாலையிடக் காளைமணப் பந்தலில் இருந்தான்;
சேலையுடுத் தோவியத்தைத் தோழியர்கள் கூடிச்
செம்மையுறச் செய்தார்க ளோரறைக்கு ளோடி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடிவரு தென்றலவள் சாயல்,இள மானும்
அன்னமு மிரந்துநடை யவளிடத்தில் பயிலும்;
பாடிவரு நதிகடலில் ஓடிவிடு முன்பு
பாடல்மறந் தாடல்குறைந் தோடல்மறந் ததுபோல்
சேடியர்கள் கூடிவரச் சீறடிகள் நோவ
செம்மைமுகம் மேவஇதழ் சிறுமுறுவல் நெழிய
பாடுகவி கூறுநடை மீறிஅடி மெதுவாய்
பாவைநடந் தேகினள்;கண் பார்வைபுவி மீதில்!

மறைபரவ நிறையொளியில் இசையொலிக்க அங்கு
மங்கைகழுத் தில்மஞ்சள் நாணைசுப வேளை
முறைகளுடன் ஏற்றினன்முன் கண்டறியா ஒருவன்;
முதியவர்கள் வாழ்த்தினர்;சம் பிரதாயப் படியே
பிறைதிகழும் வான்பார்த்தார்; பெருமீனைக் கண்டார்;
பெய்வளையும் கைப்பிடித்த பெருமகனும் புவியில்
நிறைவுபெற வாழ்வதற்கு எத்தனையோ செய்தார்!
நிலமகளும் நிலவொளியில் நினைவழிந்து கிடந்தாள்!

**வேறு**

தனிமையி லினிமையொன் றினியிலை யெனஅவள்
தனிவழி யினிலொரு மனிதனைத் தள்ளினர்!
இனியவள் விதியவன் விதியுடன் இணைவழி
எழில்மிகு மெனவுளம் எண்ணின ரோஅவர்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கதவு திறந்தது!

எங்கள்சிற் றூரிலெங்கும் இன்றொரு பரபரப்பு!
இதயங்கள் குமுறிநின்ற மனிதருள் சலசலப்பு!
'இங்குள மனிதர்க்கெல்லாம் இதுஅவ மானமாகும்'
எனமொழிந் ததனைச்செய்த இளைஞரைத் திட்டினார்கள்!
மங்கிடும் பொழுதுகோயில் முன்மணற் பரப்பில்கூடி
மனத்தினில் குமுறிக்கோப மழையினைக் கொட்டினார்கள்!
இங்கிது ஏனென்றாலெம் இளைஞர்கள் சிலர்முன்வந்து
இழிசனர் கூட்டிஎங்கள் இறைவனைக் காட்டினார்கள்!

ஆலயம் நடத்துகின்ற அவையினர் கூடினார்கள்;
அர்ச்சகர் அதனைக்கண்டு தமக்குள்ளே பேசினார்கள்!
'காலத்தின் போக்கில்கோயில் கதவுகள் திறக்கவேண்டும்
கடவுள்முன் சமமெல்லோரும்' எனச்சிலர் கருதினார்கள்!
'ஆலயத் துள்ளேயின்று நுழைந்தனர்; நாளைவந்து
அடுக்களைப் படியிலேறி அவர்களெம் பெண்ணைக் கேட்டால்
ஏலுமோ கொடுக்க?இந்தக் கொடுமையைச் சகிக்கலாமோ?'
எனச்சிலர் கொதித்திட்டார்கள்! இரைந்தனர்! வாதிட்டார்கள்!

அமைதியாய் நடந்தகூட்டம் ஆத்திரம் கூச்சல்மிக்கு
அடிதடி யாகுமோவென் றஞ்சின சிலருமுண்டு;
அமைதியாய் இருந்தஊரில் அடிபிடி தொடங்குமோவென்(று)
அஞ்சின பேருமுண்டு! ஆனாலங் கெவரும்சற்று
அமைதியாய் எண்ணவில்லை; எமக்குள்ளே சிலரைத்தாழ்த்தி
அவமதித் திருக்கஎந்த ஆண்டவன் ஆணையிட்டான்?
அமைதியாய் ஆதிமூலத் திருந்தருள் தெய்வம்சாதி
அழிவதைக் கண்டுமெல்ல அருள்நகை உதிர்த்ததங்கே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதியை வேரறுப்பாய்!

வேடர் குலத்தினில் பெண்ணினைக் கொண்டாய்!
வேல வாஉனை வேண்டுகின் றோம்நாம்!
பாடி யேத்துமுன் பக்தர்கள் கூடப்
பாரி லெம்மைப் பழித்துரைப் பார்கள்;
கூடி நின்றவர் சாத்திரம் சொல்வார்;
கோத்தி ரத்தில் குறைத்தெமைக் கொள்வார்!
வேடர் பெண்மண வாளனே, சாதி
வீழச் சாடிடு வாய்,கதிர் வேலா!

ஆலய யத்தினில் சென்றழு வார்கள்;
அகத்தி லுன்னருள் வேண்டிநிற் பார்கள்;
கால முற்றுமிச் சாதி யரக்கன்
காலி லேமிதி பட்டழு கின்றோம்!
ஞால மீதிதைக் கண்டு நெகிழும்
நல்ல உள்ளங்கள் இல்லையே வேலா!
ஆல முண்ட கடவுளின் மைந்தா!
அண்டும் எம்குறை தீர்த்தருள் கந்தா!

முன்னர் சூழ்ந்த பகையினை வென்றாய்;
மூண்ட போரில் அரக்கரைக் கொன்றாய்!
இன்னல் செய்தெமைத் தாழ்வு படுத்தும்
இந்தச் சாதி அரக்கனை ஏனோ
இன்னும் நீயழிக் காதிருக் கின்றாய்!
இதுவுன் பேரருள் ஆட்சிக்கு நன்றோ?
மன்னும் உன்அருள் ஆட்சியில் இந்த
மண்ணில் சாதியை வேருடன் சாய்ப்பாய்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பாவி சிக்கினான்!

ஓடி வந்தரெயில் ஆடி நின்றது!
ஆடும் பெட்டிகளும் பழமை மிக்கவை;
ஏறி வந்தவர்கள் இறங்க முந்தினர்;
வீறு கொண்டநடை யோடு சென்றனர்;
ஆலை செல்பவர்,பல் வேலை செய்பவர்
வேலை பிந்துமென ஓட முந்தினர்!
வெள்ளைச் சீருடையில் பள்ளி மாணவர்
மெள்ள வேநகரும் பருவ மங்கையர்
புதுமை யென்றுமுடி வளர்க்கும் வாலிபர்
முதுமை கொண்டவர்கள் முட்டி மோதினர்!

முட்டி மோதியஅக் கூட்டம் வாசலில்
ஒட்டி நின்றவனின் அருகில் வரிசையில்
நின்று நீட்டினது பயணச் சீட்டினை;
சென்று கொண்டிருந்த பள்ளி மாணவர்
'சீசன்' என்றுசொலி யவனைத் தாண்டினர்;
காசில் லாதவரும் 'சீசன்' என்றபடி
நழுவிச் சென்றனர்!பின் வந்த நாரியரும்
பழகி விட்டவொரு முறையி லேதமது
குரலில் 'சீசன்'எனக் கூறிச் சென்றனர்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருகில் வந்தஇளம் தலைகள் 'சீசன்'எனச்
சொல்ல வில்லை;அவர் கேலி செய்தபடி
மெல்லச் சென்றனர்!'ரிக் கற்று' என்றதுவும்
பிறகு பார்த்திடுவோம், நாளைக் கென்றுபல
உறவு சொல்லிநகை யுதிர்த்துச் சென்றனர்!

இறுதி யாகவொரு மனிதன் வந்தனன்;
குறுகிச் சென்றவனின் அருகில் நின்றனன்;
பயணச் சீட்டினுக்குக் கையை நீட்டியதும்
வியர்வை சிந்த,'அது தொலைந்த' தென்றனன்;
'காசில் லாதரெயில் பயண மாஇது?
ஓசி யா?ரெயிலுன் அப்பன் வண்டியா?......
சீறி னான்!அங்கு வந்த கும்பலில்
நூறி லேயொரு மனிதன் சிக்கினான்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊன்றுகோல்

இளமையில் அவளோ டிணைந்தஅந் நாட்களில்
எதனையும் செய்திடும் மனத்துரன் இருந்தது;
'தனிமையில் அவளால் எதுசெய முடியும்?என்
திறன்இலை எனில்அவள் செயலெது?' என்றுளம்
எண்ணிய நாட்களோ ஏகின! இன்றோ
எடுத்ததற் கெல்லாம் அவள்துணை வேண்டி
இருந்திடும் நிலையொரு முதுமையாய் எழுந்ததே!
வீட்டிலும் வெளியிலும் தெருவிலும் கடையிலும்
விளங்குமெய்த் துணையென அவளின் றாகினள்!
உலகினில் இனிஅவன் உலவிட அவள்தான்
ஊன்றுகோல்! இதுதான் முதுமையின் நியதியோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவடுகள்

காலை யெழும்பும் கதிரவ னெழிலைக்
கண்டு களித்துக் கவிபல செய்து
ஞாலத் தினிமையை நுகர்ந்துமுன் பிருந்த
நாட்கள் அழகுறக் கழிந்திட வாழ்ந்தேன்;
நல்லெழில் பொங்கிய காலை மறைந்து
நண்பகல் வந்து கொடும்வெயில் காய்ந்து
மாலையின் வரவில் மயங்கித் திளைத்து
மண்ணெழு பேரழ கில்உளம் களித்து
பண்ணெழு மின்பத் தலைகடல் வாழ்வென
எண்ணி எழிற்கவி புனைந்து மகிழ்வேன்!

சின்ன வயதில் சிறுமைகள் ஏதும்
சேரா நிலையினில் சேர்ந்திடும் தூய
குழந்தையின் எண்ணமும் இனிமையும் என்றும்
நிலைத்திடல் இல்லை; நியதியு மிதுதான்!
இளமை எழுச்சியில் இப்புவி இன்பம்
கொள்ளை எனக்கவி பாடி மகிழ்ந்து
இருந்தஅந் நாட்கள் ஓடி மறைந்து
சென்றன! சென்றஅந் நாட்களின் சுவடுகள்
செல்லா துளத்தினில் நின்றிடு மின்றும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மங்கிய மாலைப் பொழுதென வாழ்வு
முதிர்ந்து இளமைக் கனவுகள் ஏகி
திங்களின் தண்ணொளி தென்றலின் இனிமை
தீங்கனி பனிமலர் யாவையு முளத்தில்
தெம்பினை யூட்டா நிலையினில் வாழ்வு
தேய்ந்து கரைந்திட நோய்நொடி முற்றி
நொந்து விழுந்து கிடந்துடல் மாயும்

வாழ்வொரு கனவா? வாழ்வினிற் கண்ட
வனப்புகள் அழகிய கனவுக ளா?இவை
நனவென நம்பிய நாட்களை யின்று
நம்பிடக் கூட முடிந்திட விலையே!
நாளையிந் நானில வாழ்வு மழிந்து
வாழ்ந்த சுவடும் இன்றி மறையும்!
யாரிதை எண்ணுகின் றார்கள்தம் வாழ்வில்?
இப்புவி வாழ்வில் எத்தனை ஆட்டம்?
எத்தனை சூது! எத்தனை பேச்சு!
பொன்னொளிர் காலையும் மாலையும் மறைந்து
போய்விடும்! காரிருள் மேவிடல் காணார்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மல்லிகைப் பந்தல்

மல்லிகைப் பந்தலின் கீழ்,இராப் பொழுதில்
மலர்பல விழுந்துவெண் கம்பளம் விரிக்கும்!
நல்லெழில் மலர்களைக் கைகளில் அள்ளி
நலந்தரும் காலைப் பொழுதினில் மகிழ்வோம்!
குழந்தை வயதில் குலவிய இன்பம்
கொள்ளை!அந் நாட்களை முதுமையில் இன்று
உளம்விழைந் திடும்,நான் வளர்ந்தமண் வீடும்
உலவிய முற்றமும் மல்லிகைப் பந்தலும்
இன்னமும் என்னுளத் தினிமையைக் கூட்டிடும்!

பின்னரென் வாழ்வினிற் பின்னிய பற்பல
பேரெழில் யாவையும் காவியம் பாடிடும்!
தென்றலில் மாந்தளிர் ஆடிடும்! மாலையில்
தேன்குயில் கூவிடும்! தேனிலா வானெழும்!
அமைதியில் பாடிடும் ஆழ்கடல்! கரையிலே
அலைகளின் சிதறலில் கலைநடம் ஆடிடும்!
இளமையின் கனவுகள் உளத்தினில் மோதிட
இனிமையில் உலகமே இன்கவி பாடிடும்!

ஆயினும் முன்னரென் வீட்டுமுற் றத்துள
அழகிய மல்லிகைப் பந்தலும், காலையில்
ஆவலோ டள்ளிய வெண்மலர்க் குவியலும்
இன்னமும் என்னுளத் தெழிலினைக் கூட்டிடும்!
இரவெழும் நிலவென ஒளியினைச் சிந்திடும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ், தமிழர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழுமா தமிழ்?

பழம்பெருமை கொண்டின்னும் இளமை குன்றாப்
பைந்தமிழே தமிழமுதே என்றும் வாழ்க!
செழுந்தமிழில் புகழ்தொல்காப் பியமும் வையம்
சிறப்புறுநல் வாழ்வுதரு குறளும் இன்னும்
களம்கண்ட தமிழ்வீரம் மானம் காதல்
கற்பென்று பல்துறையின் சங்க நூல்கள்
அழகொழுகு காப்பியங்கள் நீதி நூல்கள்
அகம்நெகிழச் செய்பக்தி நூல்கள் உண்டு!

என்றாலும் அறிவியலின் வளர்ச்சிக் கின்று
ஈடுதரும் மொழியாகத் தமிழோ இல்லை!
இன்றுபிற மொழிச் சொற்கள் கலந்து பேசி
எழுதிஇது பெருமையென எண்ணு கின்றார்!
குன்றாது தமிழ்வாழ வேண்டின் கொள்கை
கொண்டவர்கள் அறிஞர்கள் அரசு கூடி
இன்றேஇந் நிலைமாறச் செய்தல் வேண்டும்!
இல்லையெனில் நாளைதமிழ் இல்லை யாகும்!

நேற்றுவந்த மொழிகள்செம் மொழிக ளென்று
நிமிர்ந்துநிற்க நீண்டவர லாறு கொண்ட
ஆற்றல்மிகு தமிழ்வெற்றுப் பேச்சில் மட்டும்
அழகுமொழி உயர்மொழியென் றிருக்க லாமா?
ஏற்றமுடன் தமிழ்மொழிமுன் ஆண்ட தாலே
இயல்புள்ள செம்மொழியாய் வளர்ந்த தன்று!
ஆற்றில்செல் துரும்பாகிக் குறிக்கோ ளற்று
ஆடுபவர் தமிழரென்றால் தமிழா வாழும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் அழியும் நிலை

தமிழ்நாட்டில் தமிழ்அழியும்! தமிழரென்போர்
தமிழறியா இனமாக மாறுவார்கள்!
அமுதான மொழியெங்கள் தமிழேயென்று
ஆர்ப்பரிப்போர் இதுகேட்டுக் குமுறவேண்டாம்!
எமைச்சாடிப் பயனில்லை; இதுவேஉண்மை!
இங்குதமிழ் உணர்வுகொண்டோர் எவர்தானுண்டு?
எமதென்று பிறமொழிச்சொல் பலவும்சேர்த்து
எழுதுவதில் பேசுவதில் குறைவேயில்லை!

தமிழறிந்தோர் எவரிந்த நாட்டிலுண்டு?
தமிழ்நாடே இதுதானுன் தலையெழுத்தா?
தமிழினிலே "ஆவின்பால்" என்பாரில்லை;
தமிழழித்து "ஆவின்மில்க்" என்றேசொல்வார்!
"நமதுகடை மம்மிடடி ஷொப்பிங்சென்டர்"
"நாம்டெய்லி மோணிங்கில் பூஜைசெய்வோம்"
எமதுதமிழ் இப்படியே உருக்குலைந்தால்
எப்படித்தான் உயிர்வாழும்? அழிவேநேரும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியினை வரவேற்றுப் படிப்பார்!தங்கள்
    இன்னிசையே தெலுங்கென்று சுவைப்பார்!நேற்று
வந்தமொழி ஆங்கிலத்தைப் பிழையேயின்றி
    வழங்கிவிட அகராதி புரட்டுவார்கள்!
சிந்தையொன்ற வடமொழியில் வந்திப்பார்கள்!
    சேர்ந்தமொழி எதுவெனினும் மகிழ்ந்தணைப்பார்!
சொந்தமொழி எக்கேடு கெட்டாலென்ன?
    சூடின்றிச் சுரணையின்றி வாழுகின்றார்!

எப்படியும் தமிழ்மொழியில் எழுதிக்கொள்வோம்!
    எப்பிழையும் இருந்திடலாம்! கவலையில்லை!
எப்படியோ பிழைத்திட்டால் போதும்!பின்னர்
    ஏனிந்தத் தமிழ்ப்பற்று? சோறாபோடும்?
இப்படியோர் உணர்வற்ற மந்தைக்கூட்டம்
    எமதினமா? இதுதமிழர் சாபக்கேடா?
எப்படித்தான் இந்தநிலை மாறக்கூடும்?
    இன்தமிழே உன்நிலையை என்னவென்பேன்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்னும் வாழ்கிறேன்!

முன்னரென் வீட்டுமுற் றத்தினில் மல்லிகை
மணம்தந்து வரவழைக்கும்!
சின்னஊர் எனததன் செழுமண்ணில் விளைபயிர்கள்
சிந்தையில் செழுமைகூட்டும்!
பொன்விளை கிராமமெப் பொழுதுமே புலர்காலைப்
பூபாளப் பாட்டிசைக்கும்!
இன்னமுத மாகநிலம் உழுதபலன் நிறைவுதர
எழிலான வாழ்வுமலரும்!

இன்றுமல் லிகையில்லை; இருக்கின்ற வீடில்லை;
எழிலில்லை; வாழ்வுமில்லை!
கொன்றழிக் கின்றபகைக் கொடுமையில் உயிரையும்
கொடுத்துநா டோடிகளாய்
சென்றுசென் றழிகிறார்! சிறுமையுற் றழுகிறார்!
சீரோடு வாழ்ந்தவாழ்வு
இன்றிலை! எரிகுண்டில் உடல்சிதறி எரிகிறார்!
இதைக்கேட்க எவருமில்லை!

இங்கெமக் கடைக்கலம் தந்ததமி ழகத்தைநான்
இதயத்தில் போற்றுகின்றேன்!
அங்குதம் இனமானம் அலைமோத இன்னுமுயிர்
வாழ்பவரை வாழ்த்துகின்றேன்!
இங்கவரைப் பிரிந்தோடி வந்தகதி யாய்வாழும்
நிலையெண்ணி நாணுகின்றேன்!
எங்களிருள் போய்க்காலை புலருமெனும் எதிர்பார்ப்பில்
இன்னும்நான் வாழுகின்றேன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்ணின் மைந்தன்

வழுவிலா உழவுத் தொழிலினைச் செய்து
வாழ்ந்தஅக் குடும்பம் எளிமையின் வடிவம்!
அழகிய கிராமம் அவர்களின் உலகம்!
அதிலொரு சிறுநிலம் அவர்பயிர் விளைநிலம்;
வாழ்வுடன் பின்னிய கிராமமும் நிலமும்
வளம்தரு பயிர்களும் உளம்நிறை எழிலாய்
வளர்ந்திட வாழ்வொரு நிறைவினைக் கண்டது!

ஆண்டனு பவித்த தமிழ்நிலத் தினிலே
குண்டுகள் வீழ்ந்தன! குடிசைகள் எரிந்தன!
குடும்பம் பலவும் சிதறி அழிந்தன!
இளைஞர் முதியவர் குழந்தைகள் அனைவரும்
அழிவின் விழிம்பில் நின்று கலங்கினர்!

அரசுதன் மக்களை அனாதைகள் ஆக்கியும்
குண்டுகள் போட்டுக் கொன்று குவித்தும்
நியாயப் படுத்தல்எந் நாட்டினில் உண்டு?
வேறோர் இனத்திலிக் கொடுமை நிகழ்ந்திடின்
சீறி எழுந்து உலகமே கொதிக்கும்!
உலகத் தமிழனோ ஒருமுறை நிமிர்ந்து
உரத்துப் பேசுவான்; உறங்குவான் பின்பு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னரும் தொடர்ந்த கொடுமையால் வாழ்விடம்
அன்னியர் கையில் வீழ்ந்திடப் பலரும்
உயிருக் கஞ்சி ஓடிச் சிதறினர்!

அடைமழை தனில்நெடும் தொலைவு நடந்து
ஆயிரம் ஆயிரம் தமிழர் அலைந்தனர்!
அவர்களில் ஒருவனாய்ச் சென்றஅக் குடும்பத்
தலைமகன் முதுமையில் அனைத்தையும் இழந்து,
செழித்து வளர்ந்த பயிர்களும் வாழ்ந்த
அழகிய கிராமமும் மக்களும் குடும்பமும்
உளத்தினில் எழுப்பிடு நினைவுகள் சுமந்து
குளிரில் நடுங்கித் தளர்வுடன் நடந்தான்!
வழியினில் உடம்பு விறைத்திட வீழ்ந்தான்!
வாழ்வு முடிந்தது!.... வாழ்வின் வளத்தை
மண்ணினில் கண்டஅம் மண்ணின் மைந்தனின்
இறுதி இவ்வாறு அமைந்ததே இன்று!

---

*1995 ஒக்டோபர் மாதம் இலங்கை இராணுவம் யாழ்ப்பாணத்தை ஆக்கிரமித்தது. பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் உயிரைக்காப் பாற்ற இரவும் பகலுமாக கொட்டும் மழையில் நடந்து சென்றனர். அப்படி சென்று உயிர் நீத்த ஒரு முதியவரின் உண்மைக் கதையை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பெற்றது.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதமே எமையணைப்பாய்!

UNIVERSITY OF PERADENIYA
11-8-2000
LIBRARY

தாயகமே! பாரதமே
தமிழ்நாடே! சான்றோரே!
சேயகத்தில் பாயுமெங்கள்
செங்குருதி காணீரோ!

ஈனரிட்ட தீயினிலே
ஈழத்தில் எரிந்தழிந்து
போனஉயிர் உடைமைகளைப்
புவியுள்ளோர் பாரீரோ!

நாதியற்றுத் தமிழரின்று
நடுத்தெருவில் நிற்கின்றார்!
போதிமரப் புத்தனையே
புன்மதியர் கொன்றிட்டார்!

கேட்பதற்கு யாருமில்லை;
கேடுகெட்ட ஈனர்வாழ்
நாட்டுநிகழ் கொடுமைகள்போல்
நானிலத்து வேறுளதோ?

வெஞ்சிறையில் தமிழ்வீரர்
விழி தோண்டிக் கொன்றழிக்கும்
நஞ்சுநிறை மிலேச்சர்கள்
நாடிதுபோல் வேறுளதோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காக்கியுடை ராணுவமும்
காடையரும் செய்கின்ற
தாக்குதலில் ஈழத்தில்
தமிழரினம் அழிகிறது!

தீயினிலே ஒருலட்சம்
தமிழர்கள் வீடிழந்தார்;
ஆயிரமா யிரம்தமிழர்
அவனியிலே உயிரிழந்தார்!

பூவிழந்து பொட்டிழந்து
பூவையர்கள் வாடுகிறார்!
பூவிதழின் மதலையர்கள்
பொருமுகிறார் அனாதைகளாய்!

வழிகிறது விழிநீர்!நாம்
வாயடைத்துப் பொருமுகிறோம்!
பழகியஎம் தமிழ்நாடே
பாரதமே எமைஅணைப்பாய்!

---

*இலங்கையில் தமிழ்மக்கள் மீது தொடரும் தாக்குதலும் அடக்குமுறையும் 1983ல் உச்சக்கட்டத்தை அடைந்தது. இந்த இனக்கொலையை உலகமே கண்டித்தது.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் ஒளியை ஏற்றிடுவோம்!

காலை இளம்பருதி, கவினொளிரும் கீழ்வானம்,
கதிர்கொஞ்ச எழில்சிந்தி இதழ்விரியும் கமலமலர்,
மாலைக் குளிர்மதியம், மதிசிந்தும் அமுதஒளி,
மலைவீழ் நதி,நீலக் கடல்,மண்ணின் கலைவிருந்து!

ஞாலத் துதித்தசிறு தளிர்க்குளவி, அன்புபொங்க
நாடி அணைத்தமுதம் ஊட்டுகின்ற தாய்மை,இளம்
வாலைக் குமரிஇதழ் நெளிகின்ற புன்முறுவல்,
வளர்காதல் கலையெல்லாம் வாழ்வின் எழில்நலன்கள்!

எழில்கண்டு மழைகண்ட மயிலாக உளம்ஆடும்!
இதயம்தண் மதியொளியில் இவ்வையத் தெழில்தேடும்!
அழியாத கலைசெய்ய அகம்விழையும்! கவிபாடும்!
அரேபியநாட் டினில்எண்ண அலைபொங்கும்! அடங்கிவிடும்!

ஆனாலும் எழில்மேவும் அருங்கலைகள் ஆக்கிடுவோம்!
அழகுதமிழ் எழில்சிறக்கும் ஆக்கங்கள் படைத்திடுவோம்!
கானாட்டில் வாழினும்நாம் கவின்தமிழைப் போற்றிடுவோம்!
கலைமேவு புத்தாண்டில் தமிழ்ஒளியை ஏற்றிடுவோம்!

---

*சௌவுதி அரேபியாவில் ஒரு தமிழ்ப் புத்தாண்டு நிகழ்ச்சியில் பாடப் பெற்றது.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்பார்வையில் ஒரு குறள்

*"பண்புடையார் பட்டுண் டுலகம் அதுவின்றேல்*
*மண்புக்கு மாய்வது மன்" - குறள்*

சீர்பெற்ற வாழ்வும் சிறப்புற்ற வீடும்
 சிதறுண்டு போன பொழுதும்
சோர்வற்று நேர்மை வழியில்தன் மானம்
 சுடர்கின்ற வீர உணர்வில்
போரிட்டு நீதி பெறுகின்ற பண்பும்
 புகழுக்கும் இகழுக்கும் வளையா
நேர்நின்ற பண்பும் நிலைகொண்ட சிலரால்
 நிலமென்றும் வாழ்தல் நியதி !

பொருள்சேர்ப்ப தற்கும் புகழ்சேர்ப்ப தற்கும்
 புவிவாழ்வில் எந்த வழியும்
பொருளாகு மென்று நினைப்போரும் தீமை
 புரிவோரும் பொய்மை புகன்று
இருள்சேரும் உள்ளம் தனைஅன்பு வெள்ளம்
 எனஏத்து வோரும் பண்பின்
அருள்காணா ஈனர்! இவர்வாழும் நாடு
 அழகின்றி மாய்தல் உறுதி !

---

*1992 ஆகஸ்ட் மாதம் சென்னையில் நடைபெற்ற உலகத் திருக்குறள் மாநாட்டின் இறுதி நிகழ்ச்சியில் கவிஞர்கள் 'என்பார்வையில் ஒரு குறள்' என்ற தலைப்பில் கவியாக்கினார்கள். அதில் பாடப்பெற்றது.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஃரடியால்
# இருள் களைந்தான்!

வாழ்வியல் நெறிகளை வண்தமி ழாக்கியெம்
வாழ்வை உயர்த்தவந்தான்! - வையத்
தாழ்வை அகற்றவந்தான்!
நீள்கவி ஏதுமில் லாதுஈர் அடிகளில்
நிறைவுறு பொருளுரைத்தான்! - திருக்
குறளினில் பலவுரைத்தான்!

அகத்தழுக் கிலையெனில் அதுஅனைத் தறம்என
அரியதோர் கருத்துரைத்தான்! - அறம்
பெரிதென எடுத்துரைத்தான்!
இகத்தெழு வாழ்வினை எழிலுற வாழ்பவர்
இங்குவிண் காண்பரென்றான்! -எழில்
பொங்கிடக் காண்பரென்றான்!

ஊழ்வலி தென்றவன் ஊழையும் வென்றிட
உழைப்பினை ஊக்குவித்தான்! - மனக்
களைப்பினைப் போக்குவித்தான்!
வாழ்புவி பண்புடை யார்களி னாற்றான்
வாழ்ந்திடும்; பண்பிலையேல் - அது
வீழ்ந்துமண் ணாகுமென்றான்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பினைப் போற்றிய வள்ளுவன் அன்பினை
அறத்திற்கு மட்டுமல்ல - அது
மறத்திற்கும் ஒட்டுமென்றான்!
இன்பமே நன்றெனக் கொள்பவர் துன்பத்திற்(கு)
ஏன்துயர் கொள்ளலென்றான்! - உயர்
வானசிந் தனையளித்தான்!

இல்லற மாட்சியை நல்லர சாட்சியை
ஈகையை வீரத்தினை - உயிர்
ஆகிய மானத்தினை
நல்லொழுக் கத்தினைக் காதலை என்றுபல்
நலங்களை எடுத்துரைத்தான்! - இந்த
நிலம்நிலைத் திடவுரைத்தான்!

வாழ்வியற் கூறுகள் யாவையும் தொட்டவை
வளம்பெறும் வழியமைத்தான்! - இருள்
கலைந்தொளிர் புவிபடைத்தான்!
நாழிலும் பொழுதிலும் நாம்குறள் போற்றிடின்
நன்மைகள் கூடிவிடும்! - வரும்
புன்மைகள் ஓடிவிடும்!

தெள்ளிய திருக்குறள் நெறிகளில் ஆழ்ந்தவை
தேர்ந்துபின் பரப்பிடுவோம்! - அவை
ஓர்ந்தறம் உணர்த்திடுவோம்!
வள்ளுவன் வாழ்ந்தமண் வான்புகழ் கொண்டது!
வண்தமிழ் ஓங்கிவிடும்! - புவி
பண்பினை ஓம்பிவிடும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ச்சுடர் விபுலானந்தன்

அருந்தமிழ்ப்பண் ணிசைமரபை ஆய்ந்தறிந்து
அரியபெரு யாழ்நூலை அளித்தசெம்மல்,
பொருந்துகலை விஞ்ஞானம் தெரிந்தமேதை,
பொதுநலனில் மனம்மகிழ்ந்த கர்மயோகி,
திருந்துதமிழ் வளர்ஈழம் மீன்கள்பாடும்
தேனாடு மட்டுநகர் தந்தமைந்தன்,
பெருந்துறவி யாய்வாழ்ந்தும் தமிழணங்கின்
பேரழகில் தனையிழந்த விபுலானந்தன்!

வெள்ளைநிற மல்லிகையோ வேறுபூவோ
விழைந்திலன்நல் லிறைஉள்ளக் கமலமொன்றே
வள்ளலவன் விரும்பிடுவான் எனவுரைத்தான்,
வளம்மிக்க எம்பண்டைப் பெருமைவேற்று
வெள்ளத்தில் கரையாது மீட்டான்;தொண்டின்
விளக்கமெனும் ஆறுமுக நாவலன்தன்
உள்ளத்தின் வழிபணிகள் தொடர்ந்தான்;கல்வி
ஊட்டினன்;நல் லுயர்பள்ளி பலஅமைத்தான்!

பழந்தமிழர் இசைசிற்பம் கலைகளென்று
பல்பொருளில் விரிவுரைகள் செய்தான்;உள்ளம்
விழைந்துபல மொழிகற்றான்; வேதாந்தத்தில்
விளங்குபவை மொழிபெயர்த்தான், சித்தாந்தத்தில்
செழுந்தமிழில் பலநூல்கள் படைத்தான்;உண்மைச்
செயல்வீரன், பேரறிஞன், தமிழுலகில்
எழுந்தஇருள் கிழிக்கவந்த ஞாயிறாவான்
எழுச்சிதரு தமிழ்ச்சுடரே விபுலானந்தன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்தமிழ்க் காவலன் வாழ்க!

தீந்தமிழ் மொழிக்கு தீங்குநே ரிட்டால்
தீயெனக் கனன்றிடர் களைவான்!
மாந்தருள் தமிழர் மாண்பினை எவரும்
மதித்திட உழைப்பவன்; மானம்
ஏந்திய வீரன்! எழிலுறு வாழ்வுக்
கிலக்கண மாகிவாழ் கின்றான்!
சாந்தியின் உருவம், சமநிலை, கொள்கைச்
சரிவிலாக் 'கி. ஆ.பெ.' வாழ்க!

தென்னகக் கலைகள் திருக்குறள் நெறிகள்
தேன்தமிழ் இசைநட னங்கள்
மன்பதை ஒழுக்கம் மருத்துவம் உணவு
மண்ணினில் வாழ்ந்திடு முறைகள்
என்றுபல் துறைகள் ஆய்ந்துநல் லுரைகள்
இயம்பினன்; எதுவுமெம் மரபில்
நின்றுகாண் அறிஞன் முத்தமிழ்க் காவலன்
நிலைத்தநல் வளமுடன் வாழ்க!

---

*முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்களின் 95-ஆவது பிறந்த நாள் 11-11-1993ல் கொண்டாடப்பட்டபொழுது எழுதப்பெற்றது.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செந்தமி ழாட்சி பெற்றிட விழைந்தும்
சேர்ந்திட்ட இந்திஆங் கிலத்தை
சிந்தையில் ஏத்திப் போற்றுவோர்க் குணர்ச்சி
சேர்த்திட நினைந்தும்போர் தொடுப்பான்!
சொந்தமண் ணினிலே பிறர்சுரண் டலையும்
சுரணையற் றெம்மவர் இங்கே
மந்தைக ளாகி இருந்திடு நிலையும்
மாற்றிட விழைபவன் வாழ்க!

எந்தநாட் டினிலும் எம்தமிழ் மக்கள்
இடருறின் கொதித்தவன் எழுவான்!
நொந்தழிந் திடினும் தம்மொழி மானம்
நிலத்தினைக் காத்திட ஈழச்
செந்தமி ழர்செய் போரினை யிகழ்ந்து
சிறுமைசெய் நீசரை ஒறுப்பான்!
அந்தநாள் தொட்டவர் உணர்வினைப் போற்றி
அணைத்திடும் தலைவனே வாழ்க!

தொண்ணூற் றைந்தாண்டு கண்டவன் நூறு
தொடர்ந்துபல் லாண்டுகள் வாழ்க!
வெண்ணீற்று வெள்ளை உடைதிகழ் உருவில்
விளங்குநல் லுளத்தினைப் போற்றிப்
பண்ணூறு பாடி வாழ்த்துகின் றோம்!நீ
பாரினில் நலத்துடன் வாழ்க!
கண்ணூ றிலாது, கவின்தமிழ்ப் பண்பாய்க்
கனிந்தமு தறிஞனே வாழ்க!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*தந்தை பெரியார் காண விழைந்த திராவிடம் கானல் நீராகலாம். கடவுள் மறுப்புக்கொள்கை காற்றிலே போகலாம். ஆனால், அவர் ஏற்றிய சுயமரியாதைச் சுடர் தொடர்ந்து எரியும்; எரிய வேண்டும்.*

# சுயமரியாதைச் சுடர்

சுயமரி யாதைச் சுடரினை ஏந்திச்
சூழ்ந்திடு சிறுமைகள் எரித்தான்!
உயர்இன மான உணர்வினைத் தமிழர்
உளங்களில் நிலைத்திட உழைத்தான்!
கயமையின் சின்னம் எனஒரு கூட்டம்
காட்டிடும் சாதிவேற் றுமையைப்
புயலெனச் சாடிப் புலியெனப் பாய்ந்தான்!
பார்ப்பனச் சூழ்ச்சியீ தென்றான்!

தாழ்வுயர் வகற்றத் தன்சுக போகம்
தரணியில் துறந்துயர்ந் திட்டான்!
வாழ்வினில் மூட வழக்கமும் பயமும்
வழங்குதல் மதமென மொழிந்தான்!
ஊழ்வினை விதியென் றுலகவர் கூறும்
உரையெலாம் மனிதனைக் கீழே
ஆழ்த்திடும் என்றான்! பகுத்தறி வொன்றே
அனைவரும் போற்றிட விழைந்தான்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனத்தினிற் பட்ட தெதனையும் மூடி
மறைத்திடாக் குழந்தையின் பண்பு!
நினைத்ததைச் செய்து முடித்திடும் ஆற்றல்,
நெறிபிறழ்ந் திடாதநல் வாழ்வு;
வினைத்திறன், பெண்மை விடுதலை, அடிமை
விலங்கறுத் திடவிரை எண்ணம்,
எனத்திகழ் வாழ்வில் எமக்குழைத் திட்ட
எழுச்சியின் வடிவமே பெரியார்!

தந்தையின் சுயமரி யாதையை எந்தத்
தமிழன்தான் இன்றுளம் கொண்டான்?
முந்தைய பெருமை மொழிஇன மானம்
முழுவதும் மறந்தின்று தமிழர்
மந்தைக ளாகி வாழ்கிறார்! பெரியார்
மண்ணினில் இவர்களை உயர்த்தச்
சிந்திய உழைப்பும் தியாகமும் வீணா?
செந்தமிழ் நிலம்விழித் தெழுமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவத் தமிழ்ச்சான்றோன் ஆறுமுக நாவலர்

முந்தை யர்வழி வந்த பண்பினை
மூல மெய்ப்பொருள் உண்மையை
சிந்தை தேர்ந்தமெஞ் ஞானி கள்அநு
பூதி மான்கள் நெறிகளை
வந்த அன்னியப் பண்பு மோகத்தில்
வாழ்வில் முற்றும் மறந்தனர்!
அந்த வேளையில் வந்த ஞாயிறே!
அகிலம் போற்றிடும் நாவலா!

உணவி னோடுநல் லுடைபெ ருந்தொழில்
ஊதி யம்எனக் கூறினர்;
கணமு மேழ்மையில் கலங்கி நின்றவர்
கடிதி லேதடு மாறினர்;
பணத்தி லேமனச் சாட்சி வீழ்ந்திடப்
பரம தத்தினைப் பற்றினர்;
உணர்வி லாதவர் நிலைமை கண்டுளம்
அழிய நொந்தனை நாவலா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேற்று வந்தவர் நீண்ட எம்வர
லாறு கண்டவை மாற்றவோ?
தூற்ற வோஉயர் உண்மை காட்டிடு
தூய எம்மதக் கொள்கையை?
ஆற்றி லேவிழுந் தேகு மோர்துரும்
பாகி யெம்மவர் மாள்வதோ?
வேற்று மாந்தரின் சூழ்ச்சி வென்றெமைக்
காத்து நின்றனை நாவலா!

மரபு ணர்த்திடு கல்வி யூட்டினை;
மறும லர்ச்சியைக் கூட்டினாய்!
அரவ ணிந்தவன் அருளு ரைத்திடும்
அரும றைகளைக் காட்டினாய்;
வரைவி லக்கணம் இலக்கி யம்தமிழ்
வளர நூல்களை ஆக்கினாய்:
உரைகள் செய்தனை; உண்மை யோம்பிடு
நெறிகள் கூறினை நாவலா!

பழந்த மிழ்ப்பெரும் ஏடுகள் தமைப்
பலர றிந்திட அச்சிலே
வழங்கி னாய்;தமிழ் சைவம் வாழ்ந்திட
வாழ்வை யேபணிக் காக்கினாய்!
விளங்கு நீறணி வேட மும்சிவம்
வளரு சிந்தையும் வீரமும்
உளங்கொள் தொண்டன்யாழ்ப் பாண நல்லூர்
உதித்த ஆறுமுக நாவலா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவலன் வழி சென்ற மேதை

முந்தைய பெருமை முதிர்ந்தநற் பண்பு
முழுவதும் மறந்துநம் மக்கள்
மந்தைக ளாகி மயங்கிய வேளை
மண்டிய இருளினைக் கிழிக்க
வந்தநற் சுடராய் நின்றவன்; பண்டை
வளமிகு பெருமைகள் உணர்த்தி
சிந்தையில் எழுச்சி பொங்கிடச் செய்தோன்;
செந்திநா தையனே போற்றி!

வாழினும் மண்ணில் வீழினும் வாய்மை
வழிநடந் திடுகர்ம வீரன்;
நாளெலாம் சைவ நன்னெறி பரப்பி
நாவலன் வழிசென்ற சீடன்;
பூழியில் வாழ்வு பயனுறப் பரத
பூமியின் தலங்களில் ஈசன்
தாளிணை தொழுது காசியில் இருந்து
தவம்முடி திட்டவோர் முனிவன்.

---

*செந்திநாதையர் ஆறுமுக நாவலரின் மாணாக்கராக இருந்து, பின் அவர் வழியில் பெரும் பணி புரிந்தவர்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னவன் காசி வாசி'யென் றறிஞர்
அழைத்திட வளர்ந்தபேர் அறிஞன்;
பொன்னினைப் புகழைப் பதவியைக் காட்டிப்
புதுமதப் போதையை யூட்டும்
அன்னியர் வலையை அறுத்துநம் சமய
அருநெறி வழிகளைக் காட்டி
சொன்னயம் மிக்க சொற்களால் எழுத்தால்
சோர்விலாப் பணிசெய்த தொண்டன்.

கற்களா உங்கள் கடவுளென் றவரை
கண்டனம் எழுதிவாய் மூடி
நிற்கவும் பொய்மை நீங்கவும் சைவம்
நிலைக்கவும் செய்தவன்; மூவர்
நற்றமிழ்த் தேனைச் சாரங்கி* யுடனே
நயம்படப் பயந்துசேக் கிழாரின்
சொற்சுவை அமுதைத் தந்திறை பக்திச்
சுடரினை யேற்றிய மேதை!

மேதை'சித் தாந்த சிகாமணி' போன்ற
மேன்மைகொள் பட்டங்கள் பெற்றான்;
தீதறு சைவ நூல்களைத் தந்து
தேங்கிய இருளினைக் களைந்தான்!
ஆதலின் அவனை ஆதவன் என்கோ!
அருமறைக் காவலன் என்கோ!
மாதவ முனிவன் செந்திநா தையன்
மலர்ப்பதம் உளத்தினிற் கொள்வோம்!

---

* *சாரங்கி - பிடில்போன்ற ஒரு வடநாட்டு வாத்தியம். ஐயரவர்கள் தேவாரத்தைப் பண்ணுடனே சாரங்கியை வாசித்துப் பாடுவார்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்தாந்தமேதை செந்திநாதையர்

பழமைமிகு பெருமைநிலை மறந்துவாழ்வில்
பதடிகளாய் அடிமைகளாய் நமதுமக்கள்
களையிழந்த கண்மூடி உறங்கும்போது
கருமிருளில் பரிதியெனக் கர்மவீரர்
எழுபொழுதில் எழுந்துநிறை இருள்கிழித்து
எமதுமதப் பெருமையெலாம் எடுத்துரைத்த
அழகுதமிழ் அறிஞ!செந்தி நாதஐய!
அருமைநம தூர்ப்பிறந்த பெருமபோற்றி!

எண்ணரிய மறைகளறை இறையையேத்தி
இன்தமிழில் வடமொழியில் எழுந்தநூல்கள்
வண்ணமுறச் சிறுவயதில் படித்துணர்ந்து
வாய்மனம்மெய் புலன்கடந்த பொருளைப்போற்றி
மண்ணில்வரு பிறவிதனைப் பரதநாட்டு
மண்ணெழுந்த கோயிலெலாம் சென்றுணர்ந்து
தண்ணிலவு தவழ்சடையான் தழுவும்காசி
தனிலமர்ந்து தவம்முடித்த முனிவபோற்றி!

காலமெலாம் கடவுள்பணி தலைமேற்கொண்டு
காசுபொருள் தனைமறந்த நெறியில்நின்று
ஓலமிடும் அடியவரின் வழியில்வந்த
உத்தமநல் லடியவர்கள் ஒன்றுகூடிச்
சீலமிகு சிறப்புணர்ந்த தாற்"சித்தாந்த
சிகாமணி"யென் றொருபட்டம் அளித்தார்;பின்னும்
மேலவர்கள் அளித்துநின்ற தீஷாநாமம்
மேன்மைபெறு 'அகோரசிவா சாரியாரே'.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவியுடல் பொருளனைத்தும் சைவமென்று
ஆர்ப்பரித்து அர்ப்பணித்த முனிவன்நல்லூர்
நாவலனின் பணிகளினைச் சிரமேற்கொண்டு
நான்மறையின் பொருள்விளக்கிச் சேக்கிழாரின்
காவியத்தில் கலந்தநறுந் தேனைச்சிந்திக்
கானமுடன் சாரங்கி தனிற்றேவாரம்
ஆவலெழப் பாடிஅன்பர்க் கருளையூட்டும்
அந்தணனே! அருள்வடிவே! செந்திநாத

ஐய!உனைப் போற்றுகிறோம்; அறிவிலாது
அன்னியரின் வலைவிழுந்து மண்பொன்னுக்கும்
தையலர்க்கும் கோழைகளாய் மோகங்கொண்டு
தருமநெறி தவறிச்சைவ மதமும்மாறிப்
பையஇருள் தனில்விழுந்த நமதுமக்கள்
பாதையினில் ஒளிபரப்பிக் "கற்கள்தாமும்
தெய்வதங்கள்" என்றவரின் திறந்தவாய்க்குத்
திறமான மறுப்பெழுதிப் பூட்டுப்போட்ட

பெரும,உனைப் பெற்றெடுத்த நாட்டிலின்று
பிறந்ததனாற் பெருமையுற்றோம்! சிவமேபோற்றும்
அருமறைகள் வடமொழியில் தமிழிலாய்ந்து
அரியபல நூல்செய்த அறிஞ!சைவத்
திருமுறைகள் வேதங்கள் தேர்ந்தவற்றில்
தெரிபொருளின் ஒருமையுணர்ந் துரைத்துநின்ற
பெருமகனே! பேரறிஞ! அன்பும்பண்பும்
பிணைந்துபணி பலசெய்த சுடரேபோற்றி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்மஜோதி முத்தையா

சிவமுணர்த்து சைவநெறி சிறந்து வாழ்க!
சிறுவயது முதல்அருளிற் சிந்தை தோய்ந்து
தவமுனிவர் பலரடிகள் தலைமேற் கொண்டான்!
தரணியுளோர் உய்யஅருட் பணிகள் கண்டான்!
அவமுறுமிவ் வாழ்வில்அரன் அடிகள் போற்றி
அறமுரைக்கும் முத்தையா ஆத்ம ஜோதி!
பவமதனை மாற்றுசிவ ஞானம் கூறிப்
பணியாற்றும் அருட்பழமே, நீடு வாழ்க!

ஆழிமிசைக் கல்மிதப்பில் அணைந்த அப்பர்
அருள்வழியில் சமுதாயப் பணிகள் செய்வோன்!
பூழிமிசை வாழும்வழி உணர்த்தி ஞானப்
புகலியர்கோன் போல்தமிழால் சிவம்வ ளர்ப்போன்!
யாழிசைத்த நாடுதித்துச் சைவம் காத்த
நாவலனின் வழிநின்று சீலத் தோடு
வாள்விழியர் கூடுமண வாழ்வு மின்றி
வளர்பணியே வாழ்வாகக் கண்டோன் வாழ்க!

தளர்வுற்று வயதேறி முதிர்ந்த மேனி!
தளர்வறியா உளம் வையம் நலங்கள் மேவ
உளம்விழைந்து பணியாற்றும் கர்ம யோகி!
உயிர்குடிக்கும் குண்டுகளின் இடையில், ஈழம்
தழைத்துவிட, அமைதிபெற, அழிவு நீங்க
தளராது தொடர்பாத யாத்தி ரைகள்!
வெளியுலகில் மேல்நாட்டுப் பயணம் இன்று!
வேதியனின் இன்னருளால் என்றும் வாழ்க!

---

*'ஆத்மஜோதி' என்னும் ஆன்மீக சஞ்சிகையை வெளியிட்டு, சைவப்பணி புரிந்த திருநா. முத்தையா அவர்கள் தன் 76-வது அகவையில் வெளிநாடுகளில் தொண்டு செய்யப்புறப்பட்டபோது எழுதப்பெற்றது.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தனையும் வந்தனையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆன்ம தாகம்

நீண்டு பரந்த கடலினை - நான்
நீந்திக் கடக்க விழைகிறேன்
ஆண்டுகள் போயின ஆயினும் - பெரும்
ஆழியை நீந்த முயல்கிறேன்!

பொங்கும் உணர்வுகள் மோதிடும் - எழில்
பூத்த கனவுகள் ஆடிடும்
நுங்கு நுரைக்கடல் மீதிலே - எனை
நோக்கி அலைகளும் சாடிடும்!

வெள்ளை மணற்கரை தன்னிலே - கடல்
வெண்ணுரை சிந்திநின் றாடிடும்
கொள்ளை அழகு குலவிடும்; - அந்தக்
கோலம் கலைந்துபின் னேகிடும்!

வானத்து வெண்மதி தண்ணொளிக் - கதிர்
வண்ணக் கரங்களை நீட்டிடும்
கானம் இசைத்துக் கடலலை - நிலாக்
காதலில் வீழ்ந்து புரண்டிடும்!

காதல் வெறிகொண்ட பேரலை - இரு
கண்கள் மறைத்தெனைச் சாடிடும்
ஏதும் வழியின்றி வீழுவேன் - இடர்
எய்திடும்; பின்னரும் நீந்துவேன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தும் நுரைகளில் மேல்விழுந்(து) - ஒளி
சேரும் பொழுதினில் தென்படும்
விந்தை நிறங்களின் ஓவியம் - எழில்
விஞ்சு வடிவங்கள் காட்டிடும்!

காணும் வடிவங்கள் எத்தனை? - முன்பு
கண்ட வடிவங்கள் எத்தனை?
ஆணெனப் பெண்ணெனக் கூடியே - இங்கு
ஆடிடும் ஆட்டங்கள் எத்தனை?

எத்தனை நாடகம் கண்டனன்? - இங்கு
எத்தனை மேடைகள் கண்டனன்?
நித்தமும் ஆடிடும் நாடகம் - இந்த
நீணில மீதென்று நிற்குமோ?

உள்ளக் கடலலை மோதிடும் - அதில்
உள்ளவை வெண்ணுரை யாகிடும்
நள்ளிரு ளாகிய வேளையில் - உயிர்
நல்லொளி காணத் துடித்திடும்!

நீண்டு பரந்த கடலினை - நான்
நீந்திக் களைத்தின்று செல்கிறேன்!
ஆண்டுகள் எத்தனை போயினும் - இந்த
ஆழியை வென்றிட நீந்துவேன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர்த்துடிப்பு

புலரும் காலைப் பொழுதிந்தப்
புவியின் அழகைப் பருகிவிடப்
புலன்கள் விழையும் உளம்பொங்கும்
புரியாப் போதை பிறந்துவிடும்
அலைகள் எறியும் கடலழகை
அம்பொன் கதிரின் ஒளிக்கீற்றை
மலரும் முகையின் எழிலையெலாம்
மயக்கத் துடன்முன் பருகிடுவேன்!

நீண்டு பரந்த வான்வெளியில்
நிலவின் ஒளியில் மலர்மணத்தில்
யாண்டும் நிறையும் இயற்கையிலே
யாதோ பொருளை உளம்தேடும்
காண்டற் கரிய பொருளொன்று
கருத்திற் றெரியும் பெருவெளியைத்
தாண்டிப் பறக்க உளம்விழையும்
தளைகள் அறுக்க உயிர் துடிக்கும்!

இதயத் துடிப்பில் எழுமெந்தன்
இன்பக் கவிதைப் பண்ணெல்லாம்
உதயப் பொழுதின் திவ்வியநல்
லொளியில் குளித்துப் பரந்துவிடும்
இதயத் திறுதித் துடிப்புந்தான்
எழிலாய் விரியும் மோனத்து
உதயத் தடங்கி உள்ளொளிரும்
உண்மைப் பொருளில் கரைந்துவிடும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிதறும் அலைகள்

பிறப்பினி வேண்டா மென்பார்
இறப்பினை விரும்பா நிற்பார்
பிறப்பிறப் பில்லான் பாதம்
தொழுதவை யொழிப்போ மென்பார்
சிறப்புறு தத்து வங்கள்
சடங்குகள் பலவும் காண்பார்
அறம்பொருள் வீடென் றெல்லாம்
ஆய்ந்துபல் விளக்கம் சொல்வார்.

நிலையிலை வாழ்க்கை யென்பார்
நீரின்மேல் குமிழி யென்பார்
அலைவுறு மனத்தை யாண்டு
அகத்திறை காண்க என்பார்
சிலையிறை யில்லை யென்றும்
சிலையது தெய்வ மென்றும்
பலகுறை குணங்கள் கண்டு
பாரினில் வாதம் செய்வார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணுவினில் உள்ளான் என்பார்
அணுஅவன் உள்ளே என்பார்
கணுமுற்று கரும்பு போலும்
கடவுளின் நிலையென் பார்கள்
பணம்பொருள் பற்று விட்டால்
பதியுணர் வெளிதா மென்பார்
கணமிவர் கூறும் வார்த்தை
கடலென விரிந்து தோன்றும்!

கடலெழும் அலைக ளெல்லாம்
மோதிவெண் நுரைகள் சிந்தி
மடிந்திடல் போலு மிந்த
மனிதர்கள் கூற்றும் வீழும்!
கடல்செலும் படகு மோதும்
அலைகிழித் தொருநாள் வாழ்க்கைக்
கரையினை அடையும்! அங்கே
கலங்கரை விளக்கம் தோன்றும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தத்துவம்

என்னைப் படைத்த இறைவா உந்தன்
எண்ணம் எனக்கெடுத் துரைப்பாயோ?
உன்னை யறிந்தவ ரென்பவர் சொல்வது
உண்மை யெனக்கொளல் எப்படியோ?

காலக் கடலிலென் வாழ்வுக் கலம்புயற்
காற்றில் அலைந்திடல் காண்கிலையோ?
ஞாலத் தெழுதுயர்ப் பேயிரு ளிற்கரை
நண்ணிடு மோ?வழி தென்படுமோ?

உள்ளக் கடலடிப் பாறைக ளும்இருள்
ஓங்கி வளர்குகை கள்பலவும்
கள்ளக் கருமிருள் தன்னில் மறைந்தொளி
காலும் மணித்திரட் கற்பனையும்

இளமைக் கனவின் இனிமையி லேபடர்
எண்ணக் கவிதைகள் பேரெழிலும்
பழமைப் புதர்தரு முட்களு மாய்அதில்
பழகிய நினைவுகள் தருமிடரும்

நேற்று நடந்தவை நெஞ்சம் நிறைந்தவை
நீண்டு தொடர்ந்திடு தொல்லைகளும்;
காற்றில் மிதந்தவை காதில் விழுந்தவை
காலம் அளித்த சுவடுகளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று நடப்பவை எண்ணம் அளிப்பவை
என்றும் இதயத் திருப்பவைகள்
நின்று வளர்ந்துபின் நாளை நிகழ்பவை
நீணிலத் தில்இவை யாவையுமே

சுற்றித் தொடர்ந்தெனைச் சூழ்வது மேன்?இது
சோதனை யோ?இலைச் சூழ்விதியோ;
கற்றுத் தெளிந்திடி னும்இதன் காரணம்
கண்டவர் யார்?இறை வாஇதுஏன்?

துன்பம் வரத்தொடர் முன்வினை கள்,இறை
தோன்றி மயக்கம் அறுப்பது,பின்
இன்பம் பெறநல் வழிகளென் றேஇங்கு
எத்தனை எத்தனை ஓதுகின்றார்!

என்னைப் படைத்த இறைவா! எனக்கு
இப்புவி தனில்ஒரு வழிகாட்டு!
உன்னை யறிந்து உயர்ந்து நலம்பெற
உண்மை ஒளிதனை நீகாட்டு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனித்திரை

கவிதை பொங்கிய நாட்கள் கடந்ததோ?
கனன்று மூண்டெழும் உணர்வுகள் மாய்ந்ததோ?
புவியி லேநிலை யானதும் உள்ளதோ?
போகும் பாதையின் அந்தம் புரியுமோ?

இந்த நேரமே உண்மையென் றார்சிலர்
இல்லை யாவுமே பொய்மையென் றார்சிலர்
வந்த பாதையை எண்ணிடென் றார்சிலர்
வழிகள் முக்கியம் இல்லையென் றார்சிலர்

முன்பு செய்தவை இன்றுநாம் செய்பவை
முடிவி லாதெமை நாளை தொடர்ந்திடும்
இன்பம் வேண்டிடின் நல்லவை செய்திடு
என்று தத்துவம் பேசுகின் றார்சிலர்

இன்ப துன்பங்கள் பின்னிய வாழ்க்கையில்
ஏது உண்மையென் றெங்ஙனம் காண்பதோ?
முன்பு கண்டவை முடிந்த கதைகளோ?
முடிவு காணமுன் வாழ்வும் முடியுமோ?

கவிதை பொங்கிய காலத்தின் கோலமும்
கனன்று நின்ற உணர்வுகள் சேர்க்கையும்
புவியி லின்றுளம் நின்றெழில் தந்திடும்!
போகும் பாதையி லும்ஒளி பெய்திடும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீர்மேற் குமிழி

புவிவாழ் வினிலே எவையும் பெறவும்
புலன்கள் இன்பம் பருகிடவும்
எவரும் வினைழவார்; தினமும் உழல்வார்;
இதற்கே யென்றும் உழைத்திடுவார்!
நவமா மணிகள் நகைகள் பரவும்
நிலமும் பொருளும் தேடிடுவார்;
சுவையே விரும்பும் இவர்வாழ் வொருநாள்
சிதறிக் குலைதல் கருதார்கள்!

புகழே பொருளாய்க் கருதும் வாழ்வும்
புவியில் ஒருநாள் அழிந்துவிடும்!
அகிலத் தெதுவும் கவரும் நினைவும்
அகத்தின் பொய்மை புகழின்பம்
இகத்தில் எவையும் நீங்கப் பிரிவர்;
இதுவே இவர்கள் விதியாகும்!
வகுத்தான் வகுத்த வகையே யன்றி
வாழ்வில் எதனைத் துய்ப்பார்கள்!

யார்தான் என்றும் நிலையா யிருப்பார்?
யாதே யென்றும் கூடவரும்?
பாரில் ஈனச் செயல்செய் மனிதப்
பதர்கள் காலக் கடலினிலே
நீர்மேற் குமிழி யாவார்! இவர்தம்
நிலையை என்றும் அறியார்கள்;
கூர்வாள் மேலே தொங்கும் அதனைக்
காணார்; கூத்தா டிடுவார்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குவிந்த இருள்

ஒளிதரு கதிரவன் சென்றனன்! வானத்
தெழில்நிறை ஓவியம் அழிந்ததுவே!
வெளிபடர் இருள்கரும் புகையென வையம்
விரிந்தது; யாவும் மறைந்தனவே!

வண்ண மலர்எழில் வண்மை அழிந்திட
வாடியதே! அதன் வாழ்விதுவோ?
பண்ணொலி வண்டுகள் பாட லொழிந்தன;
பார்வை மறைந்திருள் மூடியதே!

இன்னிசைப் புட்களின் இன்னொலி இல்லை;
என்னகச் செவிகளும் மூடினவோ?
பின்னிய இருளினில் வழியறி யேன்;மனப்
பேதமை யகன்றிடு வழியெதுவோ?

மூடிய இருளும் கலைவதெப் போ?கண்
முன்னொளி பின்னும் வீழ்வதெப்போ?
நீடிய பயணம் முடிவதெப் போ?இந்
நிலையினில் மீண்டும் தொடர்வதெப்போ?

இங்கொரு கைவிளக் கேற்றிடு! என்னகத்(து)
இருளினை விலக்கிடு! மூடுமிருள்
பொங்கிடும் ஒளியினில் கரைந்திட லாம்;பகற்
பொழுது வரும்வரை காத்திருப்பேன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
11-8-2000
LIBRARY

# காலத்தின் திரை கிழித்து..........

காலஞ்செல் வேகத்தில் கழிந்ததுநாள்; மறைந்ததுஇஞ்
ஞாலத்தில் பேரிளமை; இளமைதரும் பேரின்பம்;
காலத்தின் திரைகிழித்துக் கண்ணோட்டம் செலுத்துகிறேன்;
நீலநெடு வானத்தின் நீண்டபெரு வெளியன்றோ?

அன்னைமடி மேற்படுத்து அவள்வதனம் தனைநோக்கி
சின்னஞ்சிறு விரல்மடித்து சிறியதளிர்க் காலுதைத்து
கன்னல்நிகர் முலைசுவைத்து கண்ணயர்ந்த தொருகாலம்;
மின்னலென மறைந்தது;வான் நிறைந்ததுபே ரிருள்மேகம்!

வாழ்வினின்வே தனையறியா வயதினிலென் கரத்தினிலே
பாமுலகின் தாழ்வுயர்வைப் பகர்ந்திடுநூல் வைத்திட்டார்;
தாழ்வடைந்தோர் தமைக்கண்டேன்; தரணிதனை யறிந்திட்டேன்;
பாழ்வெளியில் மனக்கோட்டை படைத்திட்டேன்! பயனில்லை;

உலகத்தின் கறைபோக்கி உயிருள்ள புதுவையம்
மலர்விக்கக் கனவுற்றேன்; மனதில்அலை மோதியது!
அலைவுற்றேன் வழிநாடி; அறிவுதனைத் துணைக்கொண்டேன்;
கலையறிவும் பயனில்லை! கலைந்திட்ட தெண்ணங்கள்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீள்கடலின் கரையினிலே நிலவொளியில் வெண்மணலில்
ஆழ்ந்தபெரும் அமைதிநிறை அகிலத்தில் இருந்திட்டேன்;
வீழ்ந்தபெரும் அலைசிதறி வெடித்தது;வெண் நுரையெங்கும்!
பாழ்வெளியில் வெறும்அழகு! பாய்ந்ததுசிந் தனைவெள்ளம்!

வேறுபட்ட கருத்துக்கள், வெவ்வேறு எண்ணங்கள்,
மாறுபட்ட உள்ளங்கள், மனிதகுலம் இவைகளினால்
கூறுபட்டு விட்டதுவே! குலைந்தபுவி ஒன்றாகி
வீறுபெற்று விளங்குதற்கு வெறும்அறிவு காணாதே!

தேங்கனியின் சுவையொக்கும் திவ்வியநற் பாட்டிசைத்துப்
பாங்கினிற்கா தலிகூடப் பலரடைவார் பேரின்பம்!
தாங்கமுடி யாப்பசியில் தன்மனைவி மக்களுடன்
ஏங்கியொரு பிடிசோற்றிற் கிரங்குபவர் களுமுண்டு!

ஏன்இந்த முரண்பாடு? ஏன்இந்த வேற்றுமைகள்?
கூன்அடைந்து நடைதளர்ந்து குறுகியது என்வாழ்வு!
ஆனாலும் எனதுமுதிர் அறிவிற்கு எட்டவில்லை;
ஏன்இந்த முரண்பாடு? எவர்அறிவார்? எவர்குற்றம்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மையறிந்திலர்!

குழந்தை கள்இவர்! கூடிநின் றாடுகின் றார்களிங்கே;
கழிந்து சென்றிடும் காலத்தில் வாழ்வு கரைந்துவிடும்;
விளங்கு பேரருள் வித்தக! நின்னை விளங்கிவிடாக்
குழந்தை கள்இவர் வாழுகின் றார்களிக் குவலயத்தில்!

காதல் நெஞ்சம் கலந்து கரைந்திடும் காதல!இப்
பூத லத்திலுள் ளோர்பலர் வாழ்வின் இருட்குகையுள்
ஏது மின்றி இடர்படும் ஏழைகள்! இன்னல்பொங்கும்
போது நின்னருள் வேண்டித் துடித்திடும் பேதையர்கள்!

ஆல யத்தின் அருங்கத வைத்திறந் தண்ணலுந்தன்
கோல நல்லுரு வைக்கண்டு கொள்ள முனைந்திடுவர்;
ஞால மீதினில் நாதியில் லாதவர் மேன்மையுற
நாலு காசுகள் நல்கிவி டார்!உனை நாடுகிறார்!

வாழ்வு முற்றும் வறிது புலம்பி வயிற்றிலெழும்
பாழு மிந்தப் பசியினைப் போக்கப் பரிதவித்து
வீழு கின்ற மனிதரை, வீதியில் வாழுகின்ற
ஏழை மக்களை எண்ணிடும் உள்ளங்க ளில்லையிங்கே!

சாத்தி ரங்கள் கதைத்திடு வார்களுன் சந்நிதியில்;
கோத்தி ரங்கள் குலங்களி லேசில ரைக்குறைந்த
பாத்தி ரங்கள் எனப்பகர்ந் தாலயத் தின்கதவைச்
சாத்தி நின்னடி ஏத்திடு வார்!உயர் சாதியிவர்!

அண்ணல் உந்தன் அருள்மழை பெய்து அவனியிலே
புன்மை யென்ற புழுதிகள் மாய்ந்து புதுப்புனல்நீர்
நண்ணி யுள்ளத் தடாகத்தில் பூத்திடும் நன்மலரில்
உண்மை நாறி யுயர்நிலை யெய்திடச் செய்திடுவாய்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒளி வெள்ளம்

இறைவ! உன்னருள் இன்னொளி ஏழையின்
இதய வீட்டினில் வீழ்ந்திட வேண்டும்;பின்
நிறைவு பெற்றவை நின்றிடத் தீயவை
நீங்கி நின்னருள் நெஞ்சில் நிறையுமே!

காதல் நெஞ்சம் கலந்திடும் காதல!
காலம் முற்றிலும் கண்டவை யாவிலும்
காதல் கொண்டுவீண் காலம் கழிந்ததே!
கால வெள்ளத் தமிழ்ந்து கலங்கிறேன்!

இளமை தந்தஇன் பங்களும், எண்ணத்தில்
இருந்து கூடிப்பின் ஏகிய பெண்மையும்,
மழலை தந்தவை மண்பொன்னின் சேர்க்கையும்,
மறைந்த காலம் அளித்தவை யாவையும்,

ஏக்க மும்துயர் இன்பத்தின் தேக்கமும்
ஏறிஉள் ளத்தை வாட்டிடு நோய்களும்
நோக்க மற்று நொடியினில் மாறிடும்
நுண்பு லன்களில் நுண்ணிய ஆட்டமும்

இதய வீட்டை யிடித்துடைத் தென்னுயிர்
இருளில் மூழ்கி இறுதியில் ஏகுமுன்
உதய ஞாயிறு ஒப்பஉன் நல்லொளி
உள்ளத் தேற்றிடு வாயுயிர் நாதனே!

அண்ணல் உன்னருட் பேரொளித் தூமழை
அடிய னேன்அகம் வீழ்ந்திடும் போதிலுன்
வண்ணம் மட்டும் வளர்ந்திடும் சிந்தையில்
வந்து சேர்ந்தவை யாவும் தெளிந்திடும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெய்வ சிந்தனை

தெய்வ சிந்தனை முன்பு கொண்டிலேன்
தெளிவி லாவழி சென்று ளன்றுளேன்
செய்வ தொன்றிலும் அமைதி கண்டிலேன்
செயல வன்வழி யென்று மெண்ணிடேன்
பொய்வ ளர்புவி செயல்கள் மாந்தர்வாய்
புகலும் வார்த்தைகள் பொருளி லாததால்
எய்வ தேதுமென் சிந்தை தேர்ந்திலேன்
இந்த வாழ்வுமேன் என்ப தோர்ந்திலேன்.

இன்று கண்விழித் தொளியைக் காண்கிறேன்
எழில்நி றைந்தநல் லுண்மை காண்கிறேன்
நன்று காண்பவை நலம ளிப்பவை
நானி லத்துநல் வாழ்வ ளிப்பவை
என்றும் நல்லிறை நெறியில் வந்தவை
என்ப தோர்ந்தனன் உண்மை தேர்ந்தனன்
பொன்று மிப்புவி வாழ்வு யர்த்திடும்
பொன்னொ ளிச்சுடர் தெய்வ சிந்தனை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள் நிற்கும் ஒளி

உள்நின் றொளிரும் ஒளியா கியவன்
ஒளிரும் ஞானத் தெளிவா கியவன்
தெள்ளிய நீரின் சுவையா கியவன்
தெரியும் பொருளின் பொருளா கியவன்
எல்லா மாகி எங்கும் நிறைந்து
எல்லாப் பொருளிலும் கலந்து நிறைந்தவன்
தொல்லுல கத்துத் தொடக்கமு மவனே
தோன்று முயிர்களின் இயக்கமு மவனே
ஆக்கமும் அழிவும் அவனே என்றும்
அனைத்தும் அறிந்தவர் உணர்வதும் இதுவே
இதுமெய் யாகின் இவ்வுல கத்து
வருகையும் வாழ்வும் இறப்பும் அவனின்
வழியே நடந்திடும் எல்லா மியங்கிடும்
இங்ஙன மாயின் வாழ்வின் பொருளெது
காரண காரியம் கண்டிட மானிட
அறிவினுக் கியலா தென்பதை யறிகிறேன்
இறையருள் நம்பி யிருப்பதே காணும்
வழிகளில் சிறந்த வழியென் றனுபவம்
உணர்த்திடும் ஞானிகள் உரைப்பதும் இதுவே
உண்மைப் பொருளே உள்ளொளிர் இறையே
ஒண்தமிழ்க் கவிமலர் தொடுத்து
உனதருள் வேண்டுவேன் உள்ளொளிர் இறையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைதி அருள்வாய்!

ஒளிமய மான உயர்ந்தவான் பொருளே
உயரிய ஞானப் பேரொளிப் பிழம்பே
தெளிந்தநல் லறிவின் தெள்ளிய ஆற்றே
தீந்தமிழ் இனிமை பழித்தநற் சுவையே
மனத்தினை அடக்கும் மாண்பினை யறிந்தோர்
மனத்தினில் ஒளிரும் உண்மையின் உருவே
அலையுமென் மனத்தை ஆண்டுபின் அதனின்
செய்வினை பிறிதெனக் கருதிநான் புறம்பாய்
நின்றிடும் நிலையினை நித்தமும் தருவாய்
வையகத் ததனிலும் தோய்ந்திடா மனநிலை
இன்பமோ துன்பமோ அவையினைக் கருதா
தென்றுமே அமைதியின் ஒளியினிற் றோய்ந்து
நிலைத்திடும் அகநிலை தந்தருள் இறைவா
எல்லாம் உன்செயல் என்றுநான் எண்ணி
இருப்பினும் உள்ளமிப் புவிநிகழ் வினைகளில்
விழுந்தெதும் என்னால் நிகழ்ந்திடும் என்றே
எண்ணிடும் எண்ணியங் குழன்றிடும் மயங்கும்
மகிழ்வதும் துயரினில் அழிவதும் உளத்தின்
இயல்புதான் எனினும் உன்னருட் டுணையால்
இந்தஎன் உளநிலை மாறிட வேண்டும்
வானமே இடிந்தென் தலையினில் விழுகினும்
வையத்தில் அழிந்துடல் எரியினும் அமைதியில்
இருந்திடும் மனநிலை அருளிடல் வேண்டும்
ஐங்கரா, என்றும்நான் தமிழில்
கவிமலர் சாத்தி ஏத்திடும் இறையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெய்ப்பொருள் உணர்வு

ஒளியே திருவே உண்மைப் பொருளே
உள்ளத் தொளிரும் சுடரே இறையே
வழியே தெரியா துழலும் புவிவாழ்
வினிலே யொளிபெய் தருளும் முதலே

முதலே முதலும் முடிவும் நடுவும்
முன்பும் பின்பும் நிறமும் குணமும்
எதுவும் இலதாய் உளதாய் ஒளிர்வாய்
இதயத் தெழுந்துன் னருளைப் பொழிவாய்

பொழிவாய் அருளைத் தினமும் உனையெப்
பொழுதும் நினைவேன் தொழுவேன் பணிவேன்
எழுவாய் மனதில் எழுமுன் உருவின்
எழிலில் பொருள்கண் டுயர்வேன் புவியில்

புவிவாழ் வினிலுன் அருளைத் தமிழிற்
புனையும் கவியாற் புகழ்வேன் நினைவேன்
அவையும் நினதன் பருளாற் பெறுதல்
அறிவேன் அடிகள் தொழுவாய் மனமே

மனமே தினமுந் தொழுஐங் கரனை
மகிழ்வோ டெதையும் அவனின் வழியென்
றினியெண் ணிடுவாய் இறைவன் அருளால்
இனிதா கிடுமெய்ப் பொருளே உணர்வாய்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நலங்கள் பெருகும்

இன்னருட் டெய்வம் இனியவான் பரம்பொருள்
இகபர மெல்லாம் கரந்திடு மெய்ப்பொருள்
என்னஈ தென்று எவரு மறிந்திடா
ஏதோ பொருளாம் வேழ முகத்தோன்
நெஞ்சினி லென்றும் நிலைத்தொளிர்ந் திடுவான்
அஞ்சுத லகற்றி அகத்துர னளிப்பான்
வானமும் மண்ணும் வீழ்ந்தழிந் தாலும்
ஐம்புலன் அழிந்து மெய்யுதிர்ந் தாலும்
குலையா அமைதியை யளிப்பவ னவனே
அமைதி அமைதி ஆழ்ந்தபே ரமைதி
அகத்தினி லென்றும் விழைவது மிதுவே
உமைமகன் கணபதி திருவரு ளாலே
உள்ளத் தமைதி ஓங்கிடும் நிலைக்கும்
அமைதியி லிருந்து அவனையே காணும்
அருந்திறல் வாய்க்கும் அகிலத் தெதுவும்
உளத்தினை உடலினை உறுத்திடா தென்றும்
நோய்பிணி மூப்பு வாட்டிடா வுடலும்
நொய்ந்திட லில்லா நெஞ்சமு மளிப்பாய்
உலகத் தெனக்கு உள்ளொளி தருவாய்
பகைமையும் வெறுப்பும் பூசலும் ஒளிப்பாய்
பாரிடை எவரையும் எதனையும் காப்பாய்
உனதரு ளாலே பெருகிடும் நலங்கொள்
ஒளியினில் குளித்து உலகம் தழைத்திடும்
அன்னை உமைமகன் ஐங்கரா
உன்திருப் பதங்கள் உளத்தினிற் பணிந்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்பக விநாயகா!

வானுற வளர்ந்த மாமலை யமர்ந்த
வண்தமிழ் வாழ்த்திடும் அரனைத்
தேனுறு கனியை வாங்கிட வலமாய்த்
திரிந்தபொற் பாதங்க ளிரண்டும்,
வானினிற் றெரியும் மீனினம் மிளிர
வளர்ந்திடு மண்டத்தை யடக்கித்
தான்பெரி தாகத் தோன்றிடு வயிறும்,
தகவுடன் வயிற்றினைச் சுற்றி

ஆரமாய் அமைந்து அனைத்தையும் தாங்கும்
அருள்வலி யெனமிளிர் அரவும்,
தாரமாய் வனத்து வள்ளியைப் புணரத்
தமிழிறை முருகனுக் குதவி
நேரெதிர் வந்த வாரண முகமும்,
நீள்புரி யிலங்கிடு மார்பும்,
பாரதம் எழுதிப் பாரினுக் கருளப்
பண்டொடித் திட்டவோர் எயிறும்,

கொண்டெழுந் தருளிக் குறைகளைக் களைந்து
குப்பிழான் ஊரில்கற் கரையில்
கண்டவர் உள்ளம் கனிந்திடச் செய்யும்
கற்பக விநாயகா! வாழ்வில்
அண்டிய வினைகள் அறுத்திடும் அரசே!
ஐங்கரா! அன்புடன் ஏத்தும்
தொண்டர்கள் இதயம் தோன்றுமெய்ப் பொருளே!
தூமலர்க் கழலிணை போற்றி!

---

*யாழ்ப்பாணத்துக் குப்பிழான் கிராமத்தில் ஒரு கற்பக விநாயகர் ஆலய முண்டு. அண்டியவர் வினையகற்றும் அருட்தெய்வம் அது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாணி நீ அருள்வாய்!

மலரினை மேவிய கலைமக ளே!என்
மனதினி லேறிய ஒருமகளே!
நிலமிசை யுனதருள் வேண்டிநின் றேன்;எழில்
நிலவுமெய்ப் பொருள்நிறை கவிபடைப்பேன்!

நீலக் கடலினில் வானினில் நிலவொடு
நின்று சிரித்திடு மீன்களிலே
வாலைக் குமரியின் விழிகளில் இதழ்களில்
வந்துநிற் கும்சந்த நகையினிலே

அன்ற லர்ந்தபுது மலரினி லேதங்க
அழகுக் குழவியின் மழலையிலே
நின்றொ ளிர்ந்துஎழில் நிறைப்ப வளே!என்
நிலையறிந் துளத்தினில் நிலைப்பவளே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெஞ்சத் தெழுந்திடு நெட்டுயிர்ப் பும்அங்கு
நீடி நிலைக்கும் இலட்சியமும்
விஞ்சிடும் ஆசைகள் வேதனை ஏக்கங்கள்
வீறிட் டெழும்புநற் கற்பனையும்

எத்தனை யெத்தனை யெத்தனை யோஉளத்
தெண்ணங்க ளாக மலர்ந்திடுதே!
இத்தனைக் கும்எழில் உடல்படைத் தின்னுயிர்
ஏறிய நற்கவி படைக்கநின்றேன்!

இதயத் தேறிய என்னவ ளே!என்
எண்ணம் அறிந்திடு நாமகளே!
நிதியும் பிறவும் நினைத்துவி டேன்;உன்
நினைவினில் நெஞ்சம் அழிந்துநின்றேன்!

அறிவுடை எழில்மிகு கவிபடைப் பேன்!என்
அகத்தினில் ஆலயம் உனக்கமைத்தேன்!
பொறிகளை அருநெறி வழியது வாய்,தினம்
போக்கிட அருளுதி போற்றுகிறேன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலவா ஓடிவா!

அரக்கர் குலத்தை அழித்துப் பகைவென்று
அச்சம் களைந்தசூர் வேலவா! - தேவர்
மெச்சும் கதிர்வடி வேலவா!
சுரக்குமுன் பேரருள் வேண்டுகி றோமெமைச்
சூழும் பகைபொடி யாக்குவாய்! - புவி
மூழும் பயத்தினைப் போக்குவாய்!

வள்ளிக் கொடியிடை வாழ்ந்த குறத்தியை
வாழ்வில் கரைசேர்த்த வேலவா! - புவி
வாழ்வைக் கரைசேர்க்கும் வேலவா!
உள்ளத் திருளிடை ஒன்றிய என்னுயிர்
உன்னை யறிந்திடச் செய்திடாய்! - நான்
என்னை யறிந்திடச் செய்திடாய்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வையத்தில் இன்பத்தின் எல்லையைக் கண்டுதன்
வாழ்வை அழிக்க விழைந்தவன் - இன்ப
வாழ்வுபெண் ணோடென் றழிந்தவன்
உய்ய வழிசெய்து உண்மைப் பொருளுக்கு
உரியவ னாக்கினாய் வேலவா! - அருண
கிரிக்கருள் தேக்கினாய் வேலவா!

பொன்னுக்கும் மண்ணுக்கும் பெண்ணுக்கு மாயிந்தப்
பூதலத் துள்ளவர் வாழ்வதா? - காலம்
போதல் அறியாது மாழ்வதா?
பின்னுக்கு யாதவ ரோடுதான் ஏகிடும்?
பேதைமை போக்கிடு வேலவா! - ஆசை
மோதலை நீக்கிடு வேலவா!

அர்க்கர் குணத்தை யழித்திருள் சூழ்ந்திடும்
அகத்தினி லேயொளி காட்டுவாய்! - இந்த
இகத்தினி லேயெழில் கூட்டுவாய்!
சுரக்குமுன் பேரரு ளாலெமைச் சூழ்ந்திடும்
தொல்லை சிதைந்திட ஓடிவா! - அருள்
நல்லைப் பதியெழுந் தோடிவா!

---

*நல்லைப்பதி - யாழ்ப்பாணத்து நல்லூர் கந்தசாமி கோயில்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருள் கடியும் கதிர்வேலா!

ஒருசிறிது பொழுதுமுனை நினையாதே
உனதருளைப் பெறமனதில் விழையாதே
பெருகிவளர் சிறுமைகளை மகிழ்வாகப்
பெறமுயல்வன் புவியிலவை பெரிதாக;
மருவுகுற மகள்தழுவு மலையோனே!
மலைமகளின் புதல்வ!மயில் இவர்வோனே!
மருளகல எனதுமனத் தெழவேண்டும்!
மனதிலிருள் விலகஒளி தரவேண்டும்!

எனதறிவின் சிறுமைகளை உணராமல்
எழில்பெருகு முனதியல்பை அறியாமல்
வினைபெருகப் புவியில்நிகழ் செயல்யாவும்
வெறுமறிவில் தெரியுமென இறுமாந்தேன்!
அனைவரிலும் எனதறிவு பெரிதென்று
அறுமுகவ, சிறுமதியால் அலமந்தேன்!
தினமுமுன தொளிமனதில் விழவேண்டும்!
திருநடன மிடுமுதல்வன் புதல்வோனே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகதனில் உளபொருட்கள் தனிலெல்லாம்
உளமழிய மயங்கிடுவேன் தினமெல்லாம்;
அலையுமென துளம்மண்பொன் மனைமீதே;
அவைமனதில் தருமிடர்கள் சிலவோதான்;
உலையிலிடு மெழுகெனநான் உருகாமல்
உனையமுது தொழுதுபெற நினையாமல்
நிலைதவறி உலகில்விழுந் தழிவேனோ?
நினதடிகள் தனைநினைந்து எழுவேனோ?

மலைமகளின் மடிதவழும் இளையோனே!
மழலைதவழ் குழவிநிலை வரவேண்டும்!
அலைகள்நிறை குமுறுகடல் எனதுள்ளம்;
ஆசையெனும் புயலினிடை உயிர்வள்ளம்
நிலைதவறி நெறிபிசகி விழுமுன்னே
நினதடிகள் தனையடைந்து விடவேண்டும்;
கலைதவழு மலைகளுறை கதிர்வேலா,
கடிதிலுன தருளையெனக் கருள்வாயே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வள்ளல் நீயே

கந்தா,உன் திருக்கோயிற் கதவண்டை
வந்துற்ற காலையெல்லாம்
மந்தார மிட்டுமன வானத்தை
மூடுமிருள் விலகிப்போகும்!
எந்தாயும் தந்தையுமிவ் வுலகத்தில்
நீயாக உன்னைநாடி
வந்தேதும் கொள்ளாமல் சென்றேக
விடுவாயோ? வள்ளல்நீயே!

நீயேஎன் உள்ளத்து நினைவாகி
நிற்கின்ற நேரமெல்லாம்
ஓயாது போராடி எழுகின்ற
எண்ணங்கள் ஓய்ந்துவீழும்!
சேயாகி, நானிந்தப் புவிவாழ்வில்
சிறுமையெனும் சேற்றில்வீழ்ந்து
தோயாதுன் எழில்காண, உளம்ஞான
ஒளிபெய்து அருளல்வேண்டும்!

அருள்வேண்டும், அகத்தென்றும் அழகாஉன்
எழிற்பாதம் அமைதல்வேண்டும்!
இருள்தாண்டி எஞ்ஞான்றும் ஒளிகாலும்
உன்வண்ணம் எண்ணவேண்டும்!
மருள்மாண்டு மனம்பொய்மை தனில்மாழ
நிலைமாய உன்னைநான்மெய்ப்
பொருள்வேண்டி யழுகின்றேன்! புனிதா,இப்
பொழுதென்னை யணைக்கவேண்டும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பின் வடிவம் இயேசு

அன்பெனும் ஆழிதன்னை அகத்திலே அடக்கியிந்த
அவனியில் மனிதருய்ய அவதரித் திட்டதெய்வம்!
என்பையும் பிறருக்கீயும் பண்பினால் அறம்தழைத்து
எழில்நலம் பெருகத்தூய யெரூசலம் எழுந்தசோதி!
மன்பதை வாழ்வொளிர்ந்து மண்ணினில் இன்பம்காண
மனமொழி மெய்யினாலே தினமுழைத் திட்டவள்ளல்!
துன்பியல் முடிவைஏந்திச் சிலுவையில் நின்றபோதும்
தோய்ந்திடும் அன்பில்வையம் வாழ்ந்திட விழைந்தயேசு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்வகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெய்வத்தை எங்கே தேடுகிறாய்?

மந்திரம் ஓதலும் பாடலும் அட்சர
மாலை உருட்டலும் நீக்கிவிடு!
இந்தநற் கதவுகள் மூடிய கோயிலின்
இருள்நிறை மூலையில் தனிமையிலே
எந்தமெய்ப் பொருளினை ஏத்துகிறாய்? உன்
இருவிழி திறந்துநீ பார்த்துவிடு!
உந்தனத் தெய்வதம் முன்பிலை யே!இதை
உணர்ந்திடு! ஏர்பிடித் தோருழவன்

உழுதிடு வான்கடும் நிலத்தினை, அங்கிறை
உறைந்திடு வான்!ஒரு வழியமைக்க
விழைந்தவன் கற்களை உடைத்திடு வேளையுன்
வேந்தனங் கிருந்திடு வான்!வெயிலில்
மழையினில் காய்ந்து நனைந்து கலந்துஇம்
மாந்த ருடன்அவன் வாழ்ந்திடுவான்!
களைந்திடு காவியை! புழுதி படிந்து
கசங்கிய தவனுடை, காண்கிலையோ!

நீயுமுன் பூந்துகில் மாற்றியிப் புழுதியில்
நின்று நடந்திடு வாய்அவன்போல்;
பாயும் அவன்அருள் பூமியில்; எம்மிலோர்
பாதி யெனும்படி யாகிவிட்டான்!
சேய்மையில் இல்லைநீ தேடிய விடுதலை;
செம்மலர்ப் பூசையை விட்டுவிடு!
தூயவுன் துகிலழுக் கடைந்திட லாம்;நிலத்
துழைத்திடு! மெய்ப்பொருள் தேர்ந்திடுவாய்!

---

*மகாகவி தாகூரின் கீதாஞ்சலியில் ஒரு கவிதையின் (11ம் பாடல்) தமிழாக்கம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருட்பிச்சை

எத்தனையோ வீடுகளின் வாசல்சென்று
இரந்துநின்றேன்! எழிற்கனவாய் உனதுதங்க
வித்தகத்தேர் தூரத்தில் விளங்கவேந்தர்
வேந்திவன்யார் என்றெண்ணி வியப்படைந்தேன்;
மெத்தவளர்ந் ததுநம்பிக் கை;என்வாழ்வின்
மிகுதுயர நாட்களெலாம் மடிந்ததென்று
சித்தத்தில் நினைத்தேன்;நான் கேட்டிடாமல்
சிறுபிச்சை கிடைக்குமென எண்ணிநின்றேன்!

நினதுசெல்வம் சிதறண்டு கிடக்கும்இந்த
நிலத்திலெங்கும் எனநினைந்து காத்திருந்தேன்!
உனதுரதம் வந்தருகில் நின்றதென்முன்;
ஒருமுறுவ லுடனிறங்கி வந்தாய்;வாழ்வில்
இனிஅதிட்டம் இறுதியிலே வந்ததென்று
எண்ணினன்யான்; சடுதியிலே என்னைநோக்கி
உனதுவலக் கரம்நீட்டி, "நீயெனக்கு
உதவுபொருள் யாதாகும்" என்றுகேட்டாய்.

இரப்பவனை இரந்திடுதல் எந்தமன்னற்(கு)
ஏற்றசெயல்? மனங்குழம்பி நின்றேன்;பின்பு
ஒருசிறிய தானியத்தை எனதுபையின்
உள்ளிருந்து பொறுக்கியுனக் களித்தேன்;மாலை
வரநிலத்தில் இரந்தவைகள் கொட்டிப்பார்த்தேன்;
வைரமணி சிறிதொன்றும் அவற்றுள்கண்டேன்!
பெருவியப்பு! முன்புனக்கு முழுதுமீயும்
பண்பெனக்கு வரவிலையே! வருந்துகின்றேன்!

---

*மகாகவி தாகூரின் கீதாஞ்சலியில் ஒரு கவிதையின் (50ம் பாடல்) தமிழாக்கம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழில் அரசி

கன்னி,உந்தன் கவினெழிலைக் கவிதைதனில் வடிப்பின்
காலமதை நம்பிடுமோ நம்பாதோ அறியேன்;
மின்னொளிருன் மேனியெழில் மேகவலைக் குள்ளே
மிளிர்வானத் தெழில்மீன்கள் தாமறியும்; வாழ்வில்
பின்னியவுன் பேரெழிலிப் பேதைசெயுங் கவியில்
பிணைந்துவிடும் முழுதுமென்றோ கூறமுடி யாது;
உன்னிதழின் புன்னகையை ஒளிதெறிக்கும் விழியில்
ஓடிவரு நளினமதை உயர்காதல் மதுவை

செந்தமிழிற் செய்தகவிப் பொற்கலசம் தன்னில்
சேர்த்தளித்து விடின்நாளை வரும்புதிய மனிதர்
“விந்தையிது, விண்ணுலகம் விளங்குமிந்த எழிலை
விரியுலகில் காண்பதெங்கே? வெறும்புளுகு! வெறியில்
சிந்தையெழும் கற்பனை!இக் கவிபொய்யன்!” என்றே
செப்பிடுவர்; என்ஏடும் செழுங்கவிதைத் திறனும்
வெந்தொழியும் காலமதில்; வெறுந்நிலத்தில் இட்ட
வித்தாக உன்னெழிலும் விளங்காமற் போகும்!

ஆனாலும் உன்காதல் காலமெனும் செடியில்
அரும்பாகி முகையாகி மொட்டவிழும் போது
தேனாகும் மகளொன்று பிறந்துவிடின், வாழ்வில்
திருமகளாய் அவள்வளர்ந்து திகழ்ந்துவிடும் போது
தானாகத் தெரிந்துவிடும் தரணிக்குன் அழகு!
தமியேனின் கவிதையிலும் தவழும்நின் அழகு!
“ஏனோஇப் பொய்?” என்று எவரும்பின் இரையார்;
எழிலரசி நீவாழ்வாய்! உன்னெழிலும் வாழும்!

---

*ஆங்கில மகாகவி ‘சேக்ஸ்பியரின்’ ஈரேழ்வரிப்பா (Sonnet) ஒன்றின் தழுவல்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துணைவி

எத்தனை காலம் நீயெனைத் தொடர்வாய்?
நானுமுன் அணைப்பினில் அயர்ந்து
நித்தமும் புதிய கனவுகள் காண்பேன்;
நிலைத்திடும் கவிதைகள் செய்வேன்;
கத்திடும் குயிலும், காலையின் மலர்வும்,
கலைந்திடும் மாலைவான் எழிலும்,
சித்தத்தில் முகிழ்த்துச் சிதறிடச் செய்வாய்;
சேர்ந்தஉன் உறவுதான் சிறிதோ?

இளமையில் என்னை அணைந்தனை; உள்ளத்
தெழுச்சிக்கோர் களத்தினை யமைத்தாய்;
பழமையில் நிறைந்த குறைகளைக் களைந்து
பளுதிலா வுலகமொன் றமைக்க
எழுத்தினில் மனத்தில் செயலினிற் கொண்டேன்;
எய்திய நன்மைகள் சிலவே!
இளமையின் விழிம்பில் நின்றுநான் இன்று
இறந்தகா லத்தினை நினைப்பேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தின் போக்கில் கலந்தவை யாவும்
கலைந்தன; நண்பகல் சென்று
மாலையின் எழிலும் மங்கிய வேளை;
மனத்தினில் நினைவெதும் இன்றி
கோலநல் லமைதி குவிந்திட வேண்டின்
கோதைநீ வந்தெனைத் தழுவி
ஞாலத்தில் சென்று மறைந்தவை கொணர்ந்து
யாவுமென் சிந்தையிற் குவிப்பாய்!

இன்றுநான் சலித்தேன்! உன்னுடை உறவால்
எய்திடும் இடர்கள்தான் சிலவோ?
நன்றி நீசெய்த நன்மைகட் கெல்லாம்!
நண்ணிய துயர்களென் மனத்தில்
குன்றுபோல் இன்று குவிந்தன; அதனால்
குவலயத் தமைதியை யிழந்தேன்;
சென்றுநீ வருவாய் தனிமையே! என்னைச்
சேர்ந்தநற் றுணைவியே செல்க!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெய்ப்பொருள் தேடி........

மெய்ப்பொருள் தேடிப் புவியெலா மலைந்தேன்!
மெய்வருந் திடஉருக் குலைந்தேன்!
கைப்பொருள் இழந்தேன்! கால்வலித் திடநீள்
காததூ ரங்களைக் கடந்தேன்!
பொய்யுல கத்து வாழ்வினை யுணர்ந்தேன்!
புளுதியில் புளுக்களைப் போலே
உய்வகை யறியா துழல்பவர் உலகில்
உண்மையைக் காணநான் விழைந்தேன்!

விழைந்தவென் னுள்ளம் கழிந்தகா லத்து
விளைந்தவை நினைந்தவை யெதனால்
விளைந்தன வென்று எண்ணியிவ் வுலகில்
விதிவலி தோவென மயங்கும்!
கழிந்தவைக் கான காரணம் ஏது?
கணந்தொறும் நிகழ்பவை யெதனால்?
மொழிந்திட முடியா தழிந்திடும் நெஞ்சம்;
மூலத்தை யறிந்திட முயலும்!

முந்தைய வாழ்வும் இந்தவோர் கணமும்
முடிந்தினித் தொடர்ந்திடு பிறவும்
சிந்தையிற் கொள்ளின் செகமுமிவ் வாழ்வும்
சிறியன பெரியன முழுதும்
இந்தஓர் கணம்தான் இருப்பது உண்மை!
இகத்தினில் எதுவுமில் லாது
வந்தவர்க் குதவும் வழியினைக் கொண்டேன்;
வாழ்வுயர் பணியிதே யுண்மை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
11-8-2000
LIBRARY

# உண்மையின் ஊற்று

நேற்றுவரை பெய்தமழை தன்னிலந்த
        நிலஞ்சேறும் சகதியுமாய் இருந்ததங்கே
காற்றடிக்க முரிந்தமரக் கிளைவிழுந்து
        கிடந்தது;அவ் வழிப்போவோர் ஏறிச்சென்று
சேற்றிலொரு பாதையெனப் பயனடைந்தார்!
        சிறுவர்கள் அதிலேறி நடந்துவீழ்ந்து
ஆற்றிலொரு பாலமெனப் பாவித்தங்கே
        அகமகிழ்ந்து கூடிவிளை யாடினார்கள்!

பேரறிந்த ஒருபெரியார் அங்குசென்றார்;
        பெருமரத்தின் கிளைமீது நடந்துசேற்று
நீரினிலே ஆடுகின்ற சிறுவர்நோக்கி
        நிலம்வழுக்கும், கவனமென்றார் அதனைக்கேட்ட
ஓர்சிறுவன் 'நாம்சிறுவர் வழுக்கிவீழ்ந்தால்
        ஒன்றுமிலை; பெரியவர்நீர் வழுக்கிவீழின்
நேர்ந்துவிடும் பெருநட்டம்!' என்றான்!உண்மை
        நீரூற்றைக் கண்டவரோ மௌனமானார்!

---

*ஒரு முஸ்லிம் மத அறிஞர் குறித்த பழைய கதையொன்றின் தழுவல்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடலும் உளமும்

முடிவற்ற நீள்வெளியின் மூலையினி லெங்கோ
முகிழ்த்தெழும்பும் அலைகளிடை ஆடுகின்ற ஓடம்
நடுக்கடலில் அலையுண்டு நாதியற்று வீழும்;
நாற்றிசையும் பெருமலைகள் ஞாலவெளி தன்னில்
தொடுக்கின்ற போர்முரசம் போன்றெழுந்து மோதும்
துடிப்புற்ற உணர்வலைகள் தோன்றுமுளக் கடலே!
அடுக்கடுக்காய் வரும்உள்ளத் துணர்வலைக ளாலே
அலைவுற்று வீழ்ந்திடுமோ வாழ்வென்னும் ஓடம்?

சிறுவரெலாம் சேர்ந்தமைக்கும் சிறுமணலின் வீடு
சிதறிவரும் அலையினிலே சிதைந்துவிழும்; பின்பும்
சிறுமுயற்சி; புதுவீடு; சீறும்அலை; சிதைவு;
சிந்தனையின் போக்கினிலே வந்தணையும் செயல்கள்
வெறுமையுற்று விழுவதுளத் துணர்வலையின் விளைவோ?
வெண்ணுரையில் சிதைந்துவிழும் வீடுவெறும் மணலோ?
குறுமுனிவன் அலைகடல்கைக் கொண்டடக்கி னாற்போல்
குமுறுமுளக் கடலடக்கி வென்றிருப்ப தென்றோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலைநிறைந்த மணிகளெலாம் நடுக்கடலின் அடியில்
வெறுமையுடன் வீற்றிருக்கக் கடற்கரையின் ஓரம்
நிலையிழந்து குமுறியெழும் நீள்அலையின் ஓலம்
நிலையற்ற வாழ்விலெழும் நெட்டோலந் தானோ?
கலைநிறைந்த கவின்அழகுக் காப்பியங்க ளெல்லாம்
கலையாது உறைவதுவும் கவின்உள்ளக் கடலோ?
அலைவுற்று அகிலத்தில் இடருற்று அமைதி
அணுகாது குமுறியெழுந் தார்ப்பரித்தல் ஏனோ?

எழில்வண்ண ஒளிநிலவில் இதயத்தைக் கொடுத்து
எழும்பும்அலைக் கரம்நீட்டி இன்பத்தில் பொங்கித்
தெளிவற்ற மயக்கத்தில் வெண்தரையைக் கொஞ்சும்
திறமற்ற கடல்;இந்தத் தெளிவற்ற உள்ளம்
களிகொண்டு எழும்;பின்பு வெறிகொண்டு வீழும்;
காண்கின்ற பொருள்மீது தான்காதல் கொள்ளும்;
அழிவற்ற நெறிகண்டும் அலைவுற்று ஓடும்;
அகிலத்தில் இதுகாட்டும் அல்லல்கள் சிலவோ?

திரிகின்ற மனிதர்கள் தெரிவதலைக் குமுறல்;
தேடரிய பேரமைதி ஆழ்கடலில் அறியார்!
விரிகின்ற நீள்பரப்பு கருநீலம்; ஆனால்
விலையுற்ற நல்முத்து ஆழ்கடலில் காணார்!
இருளூற்ற எண்ணங்கள் எழும்;உள்ளத் தடியில்
எழில்வண்ணக் கருத்துக்கள் இருப்பதனை ஓரார்!
அருமுத்து தனையொத்த பேரமைதி யுள்ளத்(து)
அடியுண்டு அதைக்காண அறியாரிம் மாந்தர்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரித்தனன் கண்ணன்!

சிதைந்தது கங்குல் இருட்டிரை; வானம்
செறிந்தது செவ்விய அழகு!
இதந்தரும் காலை; இன்னொலி எழுப்பி
எங்கணும் பறந்தன புட்கள்;
விதம்விதம் தோன்றும் முகைகளின் இதழ்கள்
விண்டன; பனிமலர் பிலிற்றும்
பதம்நிறை தேனைப் பருகிட வண்டு
பாட்டெழுப் பும்அதி காலை!

விடியுமுன் எழுந்து தயிர்க்குடம் தூக்கி
விரைந்தனள் யாதவக் கன்னி;
கொடியெனும் இடையாள் கூந்தலைச் செருகிக்
கொண்டனள்; தயிர்க்குடம் தலையில்
பிடித்தொரு கையால் தளிர்க்கரம் வீசிப்
பெய்வளை நடந்தனள்; பெண்மை
வடிவினில் இளமை மலர்ந்தது! அழகு
வளர்ந்தது சுழன்றிடும் விழியில்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவிரல் களிலே சீதளப் பண்ணின்
செவ்விய வேய்ங்குழல் பிடித்துக்
குறுகுறு நடந்து வந்தனன் கண்ணன்;
குறும்பினைக் கண்ணிணை காட்டும்
சிறுமலர் விழிகள் தயிர்வழிச் செல்லச்
சென்றவள் பின்புகண் படாமல்
விறுக்கெனச் சேலைத் தலைப்பினைப் பற்றி
இழுத்தனன்; விழுந்தது பானை!

வெருண்டனள் மங்கை; மைவிழி யுருட்டி
விழித்தனள்; பாலனும் கோபம்
தெரிந்தஅப் பார்வை தெரிந்ததும் பயந்து
தயிர்நுழை கையினை மடித்து
வெருண்டுடல் ஒடுங்கி மலர்விழி பிதுங்கி
வெண்தயிர் செவ்விதழ் வழிய
இருந்தனன்; வானம் எழுந்தது பரிதி;
எங்கணும் காலையின் மலர்ச்சி!

மைவிழி மடந்தை இதழ்களில் முறுவல்
மலர்ந்தது; கண்ணனைத் தனது
கையினால் அணைத்துக் கன்னத்திற் கிள்ளிக்
கலங்கிய கண்களைத் துடைத்துத்
தையலும் சிரித்தாள்! சிறுவனும் இதழ்கள்
தங்கிடும் தயிரினை அகற்றிச்
செய்யவாய் திறந்து சிரித்தனன்! வையம்
செறிந்தது வாழ்வினின் பொலிவு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவேகானந்த!

காலமெலாம் அளந்தளந்தும் உரைக்கடங்கா
கருணைபொழி திருவுருவை, உளங்கனிந்து
ஓலமிடும் அடியவரின், உறுகண்நீக்கும்
உள்ளொளியை, வாய்மனம்மெய் புலன்கடந்த
சீலமெனும் செழுந்திருவைப் பரமகம்சர்
சிந்தையினிற் றெளிவிக்கத் தெளிவுகொண்டு
கோலமுழு தும்உணர்ந்த விவேகானந்த!
கோதற்ற வேதாந்த விளக்கேபோற்றி!

வேறுபடு சமயமெலாம் ஒன்றுகூடி
விளங்குபரம் பொருளுரைக்க வேண்டிநிற்க
மாறுபடு கருத்துக்க ளிடையேஅந்த
மாநாட்டில் அமெரிக்க மாநிலத்தில்
ஏறுநடை போட்டிந்து மதத்தின்தொன்மை
எளிமையொடு பொருள்விளக்கி முழக்கம்செய்த
வீறுபெறு வேதாந்தப் புயலே!இந்து
வேதத்தின் வித்தக!உன் கழல்கள் போற்றி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழைத்துமுண வின்றியுடல் ஒடுங்கிநாளும்
ஓலமிடும் ஏழைகளின் உழைப்பிலோங்கி,
களைத்துவிழும் அவர்பசியை அறிவீனத்தை
களைந்துவிட நினையாதார் துரோகியென்று
முழங்கிநின்ற மழைமுகிலே! இரும்பையொத்த
முருகுடலும் தசைநாரும் வேண்டுமென்று
இளைஞருல கிடம்புகன்ற கர்மயோகி!
இளமைபொலி திருவுருவே! விவேகானந்த!

இருள்நிறைந்த உளங்களிலே இருள்களைந்த
இளங்கதிரே! கதிரொளியே! ஒளிவிளக்கே!
மருளகற்றி மன்பதையின் மனத்தில்இந்து
மதப்பெருமை யுணர்த்திவிட்ட அறிஞ!அன்பின்
பெருநிதியே! பேரருளின் பெரும!மண்பொன்
பெண்ணாசை களைக்களைந்த பெருநெருப்பே!
கருதியவை தனைமுடிக்கும் கர்மவீரா!
கலையாத யோகத்தின் கனலே,போற்றி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்வுற உள்ளல்

அவசரம் இரைச்சல் அவையிடை மூழ்கா
அகநிலை கொண்டுநீ செல்க;
செவிவிழும் ஓசை யெதுமிலா மோனத்
தமைதியைச் சிந்தையிற் காண்க;
புவியுளோ ருடனே உனையிழக் காது
புனிதநற் றொடர்பினைக் கொள்க;
அவசரம் இன்றித் தெளிவுடன் உனது
அகமெழும் உண்மையைப் புகல்க.

மற்றவர் கூற்றைச் செவிமடுத் திடுக;
மதியிலா மந்தைய ரேனும்
பற்பல கதைகள் கொண்டுளர்; அதிகம்
பேசுவோர் மமதையர் நீங்கி
சற்றுநீ விலகு; சார்ந்திடும் கேடு;
சகலரும் நினக்குமேல் கீழாய்
நிற்பர்;நீ பிறரோ டுன்னையொப் பிடிலோ
நிலைத்திடும் வெறுமையும் துயரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உனதுநல் வழிகள் வெற்றிகள் நினைந்து
உவகைகொள்; செய்தொழில் சிறிதே
எனினும்நீ ஆர்வம் கொண்டதைச் செய்க;
என்றுமே நிலையினில் மாறும்
நினதெதிர் கால நிதியது வாகும்;
நீணிலம் சூழ்ச்சிகள் மலிந்த
வினைசெறிந் துளதால் செய்தொழில் தனிலே
வேண்டிய கவனத்தைக் கொள்க.

எனினுமிவ் வுலகின் எழில்நலங் காணா
திருந்திட வேண்டிய தில்லை;
நனியுயர் நோக்கைப் பலர்விழைந் திடுவர்;
நானிலம் எங்கணும் வாழ்வின்
தனியுயர் வீரம் திகழ்ந்திடும்; உந்தன்
தனித்துவத் துடன்உல விடுக;
புனையுறு பொய்மை அன்பினைக் கொள்ளேல்;
புனிதநல் அன்பினைப் பழியேல்;

எழில்கலைந் துலர்ந்த இடத்திலும் அன்பு
என்றுமே பசும்புல்லாய் வளரும்;
கழிந்திடும் காலம்; இளமையை அதிலே
கவினுறக் கழித்தனு பவங்கள்
உளத்தினில் கொள்க அமைதியாய்; திடுமெண்
றுற்றிடும் பல்வகைத் துன்ப
விளைவுகள் கண்டு வீழ்ந்திடா திருக்கும்
வீறுகொள் மனத்துரண் வளர்க்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துன்பியல் எண்ணத் துழன்றிட வேண்டாம்;
தோன்றிடு பயம்பல உளத்துப்
பின்னிடு தனிமை உணர்வினில் சோர்வில்
பிறந்திடும்; வாழ்வுயர் நெறிகள்
ஒன்றிய பண்பில் அமைதியாய் வாழ்க;
உலகத்தில் நீயொரு குழந்தை;
மின்னிடும் மீன்கள் மரங்கள்போல் உரிமை
மிகைப்பட உனக்குமிங் குண்டே.

அறிவையோ இலையோ புவிஅகம் திறந்து
அருநலப் பண்பினைக் காட்டும்;
இறைபற்றி எதனை எண்ணினும் அவனின்
எழில்வழி இணைந்திடு; இரைச்சல்
செறிமயக் கத்து வாழ்விலே துவளாச்
சிந்தைகொள்; சிதைந்துருக் குலைந்தும்
நிறையெழில் உடைத்திப் புவி;உளம் மகிழ்க;
நினதகத் தின்பத்தை விழைக!

---

*ஆங்கில மூலம்: "Desiderata". எழுதியவர் பெயர் தெரியவில்லை.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒளி வளர் விளக்கு

திருக்கார்த் திகைநாளில் தீந்தமிழில் தேன்கவிதை
தருகின்ற வானொலியின் கவியரங்கத் தலைவருக்கும்
உள்ளத்தில் ஒளிர்ஞான வெள்ளத்தில் தோய்த்தெடுத்து
தெள்ளுதமிழ்க் கவிபடைக்க வந்துள்ள கவிஞருக்கும்,

ஒலியலைகள் ஒலிபரப்புக் கருவிகளில் உருமாறி
வெளியேறி மின்காந்த அலைவடிவாய்ச் சென்றேகி
வானொலிப் பெட்டிகளில் வந்துபின்பு நிலைமாறித்
தானொலித்து வெளியேறத் தாமதனைச் செவிமடுக்கும்
தமிழ்கூறு நல்லுலகப் பெருமக்கள் உங்களுக்கும்
வணக்கங்கள் செப்புகிறேன்! வண்தமிழிற் பாடுகிறேன்!

பூரண நிலவு பொலிதிருக் கார்த்திகையில்
ஊரெல்லாம் ஒளிகாணும்! ஒளிவளரு விளக்கெரியும்!
வீட்டு வெளியினிலும் தோட்டத் துரவினிலும்
மேட்டு நிலத்தினிலும் மாட்டுக் கொட்டிலிலும்
நாட்டுப் புறங்களிலும் நாம்காண ஒளிமேவும்!

ஒளிவளர் விளக்கெல்லாம் உலகத்து வாழ்வினிலே
வளர்மனித இலட்சியங்கள் வழுவில்லாக் குறிக்கோள்கள்
அழிகின்ற வையகத்தில் அழிவில்லாப் பொருள்காட்ட
விழைகின்ற நல்லறிவு இவைவிளக்கும் நற்சுடர்கள்!

---

*21-10-1980 வெள்ளிக்கிழமை கார்த்திகை விளக்கீடு. அன்று இலங்கை வானொலியில் ஒலிபரப்பப்பட்ட வானொலிக் கவியரங்கக் கவிதை இது.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒளிவளர் விளக்கென்றும் உலப்பிலா ஒன்றென்றும்
அழிவிலா மெய்ப்பொருளை அகம்தெளிந்த சான்றோர்கள்
பக்திச் சுவைசொட்டப் பைந்தமிழிற் பாடிநின்றார்;
பாடியதம் பாடலிலே பரம்பொருளைக் காட்டிநின்றார்!

பக்தி உளம்தோய்ந்த பண்(பு)அதனை அறிந்துவிடும்
பாங்கில்லா விஞ்ஞானப் பாதைவழி செல்பவன்நான்!
ஆனாலும் விஞ்ஞானம் மெஞ்ஞானம் தன்னுள்ளே
தானாகக் கரைந்துவிடும் தகைமையினை அறிந்திடுவேன்!

மெஞ்ஞானம் கூறவந்த மணிவாகப் பெருமான்
'அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே'
என்றிறையை ஏத்துவதை இங்குரைக்க விழைகின்றேன்!
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவு
மெஞ்ஞானம் மட்டுமல்ல விஞ்ஞான மும்என்பேன்!
மெஞ்ஞானம் கைகூடின் மிளிர்பொன்னும் வெறும்ஓடும்
ஒன்றாகும் நிலைகூடும்; இதுஉண்மை; இதைமறுக்க
விஞ்ஞானம் விழைந்ததில்லை! விளங்கும் அணுத்திரளுள்
வேறுபடும் மின்னணுக்கள் தொகைபற்றி எழுந்ததுவே
ஓட்டுக்கும் பொன்னுக்கும் உளவேறு பாடுகளாம்!
என்றுரைத்த விஞ்ஞானம் மெஞ்ஞானம் தழுவுவதை
இங்குரைக்க விரும்புகிறேன்! இன்னுமொன்று கூறிடுவேன்!

ஒளிசிந்து விண்மீன்கள் வானத்தில் என்றோ
ஒளிர்ந்தின்று மறைந்தன;இன் றங்கில்லை; ஆனால்
கழிகின்ற காலத்தில் ஒளிவந்து வீழ
விழிஇன்று தானந்த விண்மீன்கள் காணும்!
கண்கண்ட இத்தோற்றம் பொய்த்தோற்றம்! இதுபோல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்கண்ட விசும்போடு உலகங்கள் எல்லாம்
காலத்தின் கோலமென விஞ்ஞானம் கூறும்!

இதனை யேமணி வாசகப் பெருமான்
'ஞால மேவிசும் பேஇவை வந்துபோம்
கால மே......'எனக் கூறி விளக்கினார்!

ஒளிவளர் விளக்காய் விளங்குமெஞ் ஞானம்
உணர்த்திடும் உண்மைகள் எல்லாம்
வளர்உல கத்து விளங்குவிஞ் ஞானம்
வழங்குதல் கண்டனம் இன்று!

இன்றோ பலரின் அறிவும் உளப்பண்பும்
குன்றி ஒளிவளராச் சிறுவிளக்காய் நின்றுவிடும்!
இவர்கள்,
சாத்திரங்கள் சடங்குகளே சமயமென நம்பிடுவார்;
கோத்திரங்கள் குலங்களெனக் கோயிலும் வாதிடுவார்;
மெஞ்ஞான முதிர்ச்சியில்லை விஞ்ஞான வளர்ச்சியில்லை
அஞ்ஞான இருள்நடுவே அகந்தெளிந்த தெனநினைப்பார்!

இந்தநிலை நீங்கிவிட இதயத்து நற்பண்பும்
இகவாழ்வில் இருள்போக்கும் விஞ்ஞான அறிவொளியும்
பரவாழ்வு பகர்கின்ற மெஞ்ஞான அனுபவமும்
பாரில்ஒளி வளர்விளக்காய் வந்தமைய வேண்டுமென்பேன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கார்த்திகை மாதப் பூரணை இன்று;
கலைநிறை மதியம் கவினொளி சிந்தும்;
நிலமெனும் மடந்தை நிலவொளி குளிப்பாள்!
அலைகடல் பொங்கும், நிலவினை நாடும்!

பரம்பொருள் என்றும் பேரருள் சிந்தும்;
இருங்கடல் வையம் இறையொளி தோயும்;
தரமுயர் உயிர்கள் தலைவனை நாடும்;
பரம்உயிர் பந்தப் பாங்கிது உரைத்தேன்!

திருக்கார்த் திகைத்தீபம் தெருவெல்லாம் ஒளிசிந்தும்!
சிறுகையில் விளக்கேந்திச் சிறுவர்கள் மகிழ்வார்கள்!
சிறுவர்கள் வளர்ந்துபெரு மனிதர்கள் ஆவார்கள்!
சிந்தைநிறை பண்புஒளி வளர்விளக்காய் அமைந்திடுக!
எனக்கவிதை பாடுகிறேன்! இன்தமிழில் வாழ்த்துகிறேன்!

ஐந்து நிமிடங்கள் தந்தனர்; இங்குநான்
செந்த மிழ்க்கவி பாடி முடித்தனன்;
நன்றி என்கவி கேட்ட அனைவர்க்கும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளத்தனைய மலர்நீட்டம்

உலகத் தமிழ்மறைக் கழகத்தின் மாநாட்டுப்
புலவர்கள் அரங்கத்தை வழிநடத்தும் தலைவருக்கும்,
பாட்டினிலே தமிழமுதைக் கூட்டுகின்ற கவிஞருக்கும்,
கேட்டிங்கு தமிழ்மாந்திக் களிக்கின்ற சான்றோர்க்கும்
வணக்கங்கள் கூறுகிறேன்! வண்தமிழில் வாழ்த்துகிறேன்!

'வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்க்கு
உள்ளத் தனைய உயர்(வு)'என்று உரைத்திட்ட
வள்ளுவன்போல் வேறெவரும் வையத்தில் வாழ்ந்ததில்லை;
எள்ளளவும் பொய்யில்லை, இதுஉண்மை! எனக்கூறி
வள்ளுவனின் வண்பதங்கள் வணங்குகின்றேன்!
வணங்கியெந்தன்
உள்ளத் தெழுகருத்தை ஒண்தமிழில் தோய்த்தெடுத்து
அள்ளிக் கவிதையிலே அளிக்கின்றேன்! ஏற்றிடுவீர்!

'வெள்ளத் தனைய மலர்நீட்டம்' என்றதொடர்
வள்ளுவத்தில் நாம்காணும் வனப்புமிகு உவமையணி;
'வெள்ளத்தின் ஆழத்திற் கேற்பமலர்த் தாள்நீட்டம்,
உள்ளத்தின் ஊக்கத்தின் அளவேயெம் உயர்வாகும்'
என்ற வகையினிலே இக்குறளுக் குரைகண்டு
அன்றுமுதல் வந்தவர்கள் பொருள்தந்து அமைந்தார்கள்;
என்றாலும் இக்குறட்பா இன்னும் பலஉணர்த்தும்!

---

*18-12-1996ல் சென்னையில் நடைபெற்ற 26ஆவது உலகத் தமிழ் மறைக்கழக மாநாட்டுக் கவியரங்கில் பாடப்பெற்றது. இக்கழகம் 1952ல் முனைவர் கா. பொ. இரத்தினம் அவர்களால் ஈழத்தில் நிறுவப்பட்டது.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளத்தின் ஆழம்வெறும் வெள்ளத்தின் ஆழமல்ல!
வள்ளுவத்தில் காணுகின்ற வாய்மை வினைத்தூய்மை
கொல்லாமை சான்றாண்மை நடுநிலைமை பண்புடைமை
அறிவுடைமை அருளுடைமை பிறனில் விழையாமை
மானம் எனநீளும் மாண்புமிக்க நெறிபலவும்
ஒன்றி இணைகின்ற தன்மை உளத்தாழம்!
அந்தளவே தான்மாந்தர் உயர்வின் அளவாகும்,
என்றும் பொருள்கண்டு இயம்பிடலாம்; இதுநிற்க.....

வெள்ளத் தனைய மலர்நீட்டம் எனச்சொன்ன
வள்ளுவனெம் நாட்டினிலே வந்தின்று பிறந்துவிடின்,
குடமேந்திக் கோதையர்கள் தண்ணீருக் காயேங்கி
வரிசையிலே நின்றலையும் பரிதாபம் கண்டுவிடின்,
வெள்ளத்தை உதாரணமாய்க் கொள்வானா? அல்லதுதன்
உள்ளத்தில் நீருக்கு வழிதேட விழைவானா?
தண்ணீர் தண்ணீரென்றே கண்ணீர்விட் டழுகின்ற
மண்ணல்லவா எம்நாடு? மழைசிறிது எப்பொழுதோ
பெருமழையாய்ப் பெய்தாலும், பெருகிவிடும் நீர்ப்பஞ்சம்
ஒருபொழுதும் குறையாத நிலைதானே தொடர்கிறது!
இந்த நிலையினிலே எமக்கிந்த வள்ளுமேன்?
எந்த நிலையினிலும் இன்புற்று இருப்பதற்கு
எத்தனையோ இங்குண்டு! எழில்கொஞ்சும் சினிமாவும்
இதழ்கொஞ்சும் நடிகையரும் நடிகருமென் றெத்தனையோ
இதயத்தைக் கவர்ந்திழுக்க இங்குண்டு! அதனாலே
உள்ளமென்றும் வெள்ளமென்றும் வள்ளுவத்தின் வழியென்றும்
எள்ளளவும் பயனற்ற இவைஎமக்கேன்? நாம்இன்ப
வெள்ளத்தில் மூழ்கிடுவோம்! கள்ளும்தான் சிறிதுண்போம்!

இந்த வழியைத்தான் இன்றுபலர் விழைகின்றார்!
பைந்தமிழில் பெரும்புலவன் பாரதிமுன் சொன்னதுபோல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'தேடிச் சோறு நிதந்தின்று - பல
சின்னஞ்சிறு கதைகள் பேசி - மனம்
வாடப்பல செயல்கள் செய்து - நரை
கூடிக் கிழப்பருவ மெய்தி - கொடுங்
கூற்றுக் கிரையெனப் பின்மாயும் - பல
வேடிக்கை மனிதர்'க ளாக - இன்று
பயனற்ற வாழ்வை நயப்பவ ரேபலர்!

பண்டைத் தமிழ்மரபு வீரம் புகழிவற்றை
பழிக்கின்ற ஓரினமாய்ப் பச்சோந்தி யாய்விட்டோம்!
சிந்தனையிற் றெளிவின்றி செயலில் திறனின்றி
எந்தப் பொழுதிலுமே சொந்தநலம் பேணிநின்று
நாணயங்கள் சேர்ப்பதற்கு நாணயத்தை விற்பவரும்
நாதியற்ற ஏழைகளின் தோள்களிலே நிற்பவரும்
அண்டையுள நாட்டில்தம் அடிமைநிலை போக்கிடவும்
மண்ணோடு மொழிகாத்து மானமுடன் வாழ்வதற்கும்
போராடி வீழுகின்ற குண்டுகளில் உடல்சிதறி
நாளாந்தம் அழிகின்ற நம்தமிழர் நிலைகண்டும்
ஆராரோ அவர்எமக்கு வேறான இனமென்று
பாரா முகம்காட்டிப் பழித்துரைத்து அவர்துயரைத்
துடைக்கின்ற நோக்கின்றி அரசியலை வளர்ப்பவரும்
பதவிக்காய் மேலுள்ளோர் பாதங்கள் வீழ்பவரும்
மொழிஇனத்தின் புகழ்பேசி மேலேற முனைபவரும்
இருக்கின்ற இனத்தினிலே இதயங்கள் உயர்ந்திடுமா?
ஆழமற்ற வெள்ளத்தில் மலர்நீட்டம் கண்டிடுமா?
தாழ்வுற்ற உள்ளத்தின் ஊக்கம்உயர் வாகிடுமா?

சான்றோரே! சபையோரே! சரிந்துவிழும் எம்மினத்தைப்
போன்றஇனம் புவியினிலே வேறெங்கும் பார்த்ததுண்டா?
ஈங்கிதனை எண்ணிடுவீர்! இதற்கேதும் வழிகாண்பீர்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நிலைமாற்ற வள்ளுவமே வழிகாட்டும்
எந்த இருளினிலும் வள்ளுவமே ஒளிகூட்டும்
"வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனைய உயர்'வென்ற வள்ளுவனின்
வாக்கை மீண்டும்நாம் ஆழ்ந்து படித்துவிடின்
தேக்கமுறும் எம்மினத்தின் விடிவிற்கு வழிதெரியும்!

உள்ளத்தின் ஆழம்நான் முன்னர் உரைத்ததுபோல்
உயர்பண்புக் கூறுகளால் நிறைதன்மை; அதன்மேலும்
எப்பொழுதும் வளையாத கொள்கை,உயர் சிந்தனைகள்,
எதிர்வந்த பகைவீழ்த்த எழுவீரம், பழியேதும்
பதியாத செயல்,இந்த பாரினிலே எங்கேனும்
அநீதி நிகழ்ந்துவிடின் அதைஎதிர்க்கும் மனத்துணிவு
அடக்குமுறைக் கெப்பொழுதும் அடிபணியாப் பேராண்மை,
எங்கேனும் எவரேனும் எம்மொழியை எம்மினத்தை
இழித்தாலும் பழித்தாலும் அழித்தாலும் சிதைத்தாலும்
இயல்பாக எழுகின்ற இனமானக் கொந்தளிப்பு,
இவைபோன்ற பலநல்ல குணநலங்கள் சேர்ந்தொன்றாய்
அனமந்துயர்ந்த உள்ளம்தான் வள்ளுவத்தில் நாம்காணும்
உள்ளம்;அதன் ஆழத்தின் அளவேஎம் உயர்வென்றும்
வெள்ளத் தனைய மலர்நீட்டம் என்றதொடர்
விளக்குபொருள் இதுவாகும், உயர்வடையும் வழியாகும்;
எனக்கூறி, இன்றிந்தக் கவியரங்கில் பங்குபெற
எனையழைத்த மாநாட்டின் அமைப்பாளர், குறிப்பாக
தலைவர் இரத்தினம் அவர்களுக்கும், தமிழ்த்தேனைக்
கவிதைகளாய்ச் சிந்தியிங்கு அணிசெய்த கவிஞருக்கும்
பொறுமையுடன் அமர்ந்திங்கு செவிமடுத்த அனைவருக்கும்
உளங்கனிந்த நன்றியினைக் கூறி அமர்கின்றேன்;
ஒண்தமிழே வாழ்ந்திடுக! வள்ளுவமே பரவிடுக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவி படைத்துக் கலை வளர்ப்போம்!

சத்திமகன் பாவாணர் சாற்றுபொருள் யாவையிலும்
சத்தியமாய் உள்நின்று காத்தருள்வான் - பத்தியுடன்
இணையடிகள் தொழுகின்றேன் இனிய தமிழ்க் கவிபடைக்க
துணையவனே இங்கெனக்குக் காண்.

கவியரங்குத் தலைவ;தமிழ்க் கவிபடைத்துக் கலைவளர்க்கும்
கவிஞர்காள்; கவிகேட்க வந்திருக்கும் பெருமக்காள்;
கவிபாடிக் கலைவளர்க்கும் கவின்பொருட்கள் பலஇந்தப்
புவியுண்டு; அவைபற்றிச் சிலமுன்னர் புகல்கின்றேன்.

நதியொன்று சதிராடி மலைநின்று வீழும்
நளினத்தில் கலைமேவக் கவிபாடி ஓடும்
இதழ்விண்டு மலரொன்று எழில்கொஞ்ச நிற்கும்
இதுகண்டு ஒருவண்டு களிகொண்டு பாடும்!

அலையொன்று கடல்மீது மலையாகத் தோன்றும்
அதுவந்து கரைமோதிச் சிதறுண்டு வீழும்
கலையுள்ளம் இதுகண்டு கவியொன்று பாடும்
கவிசிந்து கலைவண்ணம் புவிநின்று வாழும்

---

*(22.12.1974 ல் குப்பிழான் கிராமத்தில் நடைபெற்ற "எண்ணக்கோலம்" வெளியீட்டு விழாவில் நடைபெற்ற கவியரங்கில் பாடப்பெற்றது)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குயில்கூவிக் கவிபாடிக் கலையாக்கும், எங்கள்
கோயில்கள் மணிஓசை கலையாக்கும், தமிழில்
பயில்கின்ற பாவெல்லாம் கலையாக்கும், இவற்றைப்
பாடியஅப் பாவலரும் கலைவளர்த்தார் முன்பு.

இன்றிந்த மேடையிலே கவிபடைத்துக் கலைவளர்க்க
எமையழைத்தீர்! எமக்குமுன்னே இருந்திட்ட புலவர்கள்
அன்றளித்த கவியெல்லாம் அரும்பண்புக் கூறுகளை
அகத்தினிலே விதைத்துலகை வளர்த்திட்ட அருங்கலைகள்.

களமேறிப் பகைவென்ற காளையர்கள் வீரத்தை,
கைப்பிடித்த பெருமகனும் காதலியும் வாழ்கின்ற
உளப்பாங்கை, காதலினை, உரைக்கின்ற கவிபலவும்
உதித்திட்ட அன்னாளில் உயர்வுற்ற தெம்கலைகள்.

தமிழ்பழித்த ஒருமன்னன் தலையினிலே கல்லேற்றித்
தருவித்தான் ஒருவேந்தன், தமிழ்மானம் அவன்காத்தான்;
தமதான மணித்தேரைக் கொடிமுல்லைக் கீந்திட்ட
தமிழ்மன்னன் கொடைகண்டோம்; தளிரனைய ஒருசிறுவன்

களம்கண்டு கொலையுண்ட பொழுதுவக்கும் ஒருதாயின்
கதையறிவோம்; கருவிழியாள் விடைகொடுக்க வேங்கையெனக்
களம்ஆடிப் பகைவென்று வீரத்தின் விளைநிலமாய்
காண்கின்ற காளையர்கள் கதைகளையும் நாம்கேட்டோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவைகூறும் எழிற்கவிதை படித்துவிடின் இதயத்தில்
எழும்வீர உணர்(வு);அங்கு அறம்தோய்ந்த மறம்தோன்றும்;
இவையுள்ளத் தளிக்கின்ற உணர்வுகளே கலையாகி
எழுந்துள்ளத் தெழுச்சிக்கும் மலர்ச்சிக்கும் வழிகோலும்!

தவமணைத்த இளவரசன் இளங்கோவும் தமிழணைத்த
கவியரசன் கம்பனொடு கருத்துநிறை திருக்குறளை
அவனிக்கு அளித்திட்ட தமிழ்முனிவன் வள்ளுவனும்
அன்றிருந்த கவிஞர்களும் அவர்பின்பு வந்துதித்த

பாரதியும் தம்முடைய பாட்டுத் திறத்தாலே
படிப்போர்தம் உள்ளத்தில் பலமாற்றம் செய்தார்கள்;
பாரில் பலமொழியில் இவர்போன்று பலபுலவர்
பாடிக் கலைவளர்த்தார் பாரில் வளம்சேர்த்தார்.

உண்மைக் கவிஞர்கள் இவர்கள்தாம்! உணர்ச்சிகளின்
ஓட்டம் மிகுந்து உயர்கலையாய் என்றென்றும்
மண்ணில் தவழ்ந்து உயிர்த்துடிப்புக் கொண்டவையாய்
மலர்ந்தின்னும் மடியாமல் மணம்வீசி ஒளிகாலும்!

இன்று சிலகவிஞர், இன்கவிதை இயல்பறியார்,
எழுதுகிறார் தலையற்ற வாலற்ற சிலவரிகள்!
நன்றென்று கூறுவதும் இவர்கள்தான்! புதுமைமிகு
நற்கவிதை புதுக்கவிதை என்றென்று நவில்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓசை சிறிதிருக்கும், அதுவும்தான் ஒடிந்தொடிந்து
உருக்குலைந்து தோன்றிவிடும், உள்ளிருக்கும் கருப்பொருளோ
பேசுவதற் கேதுமின்றிப் பயனற்ற சிறுகதைகள்
பேசிநிற்கும்; இன்றிவைதான் பைந்தமிழின் கவியென்பார்.

எந்தவிதக் குறிக்கோளும் இல்லாத எழுத்தாகி
எப்பயனும் இல்லாத, வெற்றுச்சொற் கோர்வைகளாய்
வந்தவைகள் கவிதைகளா? வையத்தை வாழ்விக்க
வண்தமிழால் வகைசெய்வோம்! வாழ்வுக்கு வளம்சேர்ப்போம்!

அழகுதமிழ்க் கவிபடைத்து அருங்கலைகள் வளர்த்திடுவோம்;
அதுபடித்து விலங்குகளாய் ஆனவரின் நிலைமாறும்;
பழம்பெருமை உணர்ந்திடுவர்; பண்போடு சான்றாண்மை
பகைவீழ்த்து வீரம்நெறி பிறழாத நிலைகூடும்.

உள்ளத்தின் உண்மையவர் வாழ்வினுக்கு ஒளியூட்டும்;
உயர்கலைகள் பலவுமவர் உளங்களினை மகிழ்விக்கும்;
தெள்ளூற்ற தமிழமுதக் கவியுண்டு சுவைப்பதற்கும்
தெரிகின்ற கலையுள்ளம் பலஅங்கு மலர்ந்துவிடும்!

சிந்தனையிற் சிறந்திடுவர்! செகத்தில்அவர் தேய்ந்தாலும்
சீரியநற் குறிக்கோளின் பலம்ஒன்றே பண்பாக
வந்தணைய வாழ்ந்திடுவர்! வையத்தில் இவர்வாழ்வு
வளர்ந்துவிடக் கலைவளர்க்கும் வண்கவிதை செய்திடுவோம்!

எனக்கூறி,

எனது கவி கேட்டிங்கு இருந்தஉங்கள் பொன்னடிகள்
ஏத்தி முடிக்கின்றேன்! இருந்தமிழே உனதுபுகழ்
என்றென்றும் நிலவட்டும்! இன்கலைகள் பலதோன்றி
உனதுமடி தவழட்டும்! ஒண்தமிழே நீ வாழ்க!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ‘எண்ணக் கோலம்’ நூலிலிருந்து
(1974)

○ மின்பொறியியலாளரான கணேசலிங்கம் அவர்கள் விஞ்ஞானத்தோடு இலக்கியத்தை இணைக்கக் கூடியவர்.

○ அண்மைக் காலங்களில் விஞ்ஞானத் துறைகளில் பயிற்சி யுடையோர் சிலர் எழுத்துலகிற் பிரவேசித்துள்ளமை மகிழ்ச்சிக் குரியதே. இலக்கியத்தில் இடம்பெறக்கூடிய பொருளையும் அதனை அணுகும் நோக்கினையும் விஞ்ஞானப் பயிற்சி ஓரளவுக்குப் பாதிக் கவே செய்யும். அப்பாதிப்பினால் இலக்கியத்துக்கு இலாபமே.

○ ஆசிரியர் கவிதைகள் அவரது உள்ளத்தை எமக்குப் பளிங்கு போற் காட்டுகின்றன. எளிமையும் தெளிவும் கவிதைகளிற் காணப்படுகின்றன. இவை விரும்பத்தக்க பண்புகள்.

**பேராசிரியர் க. கைலாசபதி** (வாழ்த்துரை)

○ யாழ் இந்துக்கல்லூரியில் என்னிடம் படித்த கணேசலிங்கம் என்னைக்காண வந்தார். வெறுங்கையோடு வரக்கூடாதென்றோ என்னவோ, கையோடு தம் கவிதைத் தொகுதியையும் கொண்டு வந்திருந்தார். புத்தகத்தைப் புரட்ட, “என்று கற்றனை நீயிது போல்?” என்று என் உள்ளம் உவகையுற்றது. யான் கற்பித்த எல்லாம், ஓசை கெடாமல் எப்படிச் செய்யுள் இயற்றுவது என்பது பற்றிய சில விளக்கங்களுடன் சரி.

இன்றோ அவ்வித்து முளைத்து வளர்ந்து மலர்ந்து மணம் வீசக் கண்டால் யாருக்கத் தான் பெருமையிராது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

○ கணேசலிங்கத்திற்குக் கவிதை இயல்பாக வருகின்றது. மோனை எதுகைக்காக, தான் சொல்ல வரும் கருத்தைச் சிதைத்து சரஸ்வதி யின் முகத்திற் கரி பூசும் சிறுமதி இங்கில்லை.

புதுமை என்று சொல்லி வசனத்தை மடக்கிப் போட்டுப் போலிக்கவி கட்டும் ஏமாற்றும் இங்கில்லை.

**வித்துவான் க. கார்த்திகேயன்** (அணிந்துரை)

○ கவிஞர் கணேசலிங்கம் அவர்களைத் திறமை மிக்க மின் பொறியியலாளர் என்றே பலர் அறிவர்; ஆனால் அவர் ஒரு பெருங் கவிஞர் என்பதைச் சிலரே அறிவர்.

○ மின்பொறியியலாளரெனினும் பழைமையை முற்றாக ஒதுக்கும் பிறழ்வுணர்ச்சிக்கு அவர் அடிமைப்படவில்லை. பழமையிற் கால் கொண்டு புதுமையில் மலர்ந்திருக்கின்றன அவருடைய பாடல்கள்.

○ படிப்போரைச் சுவைக்க மட்டுமின்றிச் சிந்திக்கவும் தூண்டும் முறையிலே திட்ப நுட்பமாகப் பாடும் ஆற்றல் கவிஞர் கணேசலிங் கத்தின் தனிச் சிறப்புக்களில் ஒன்றாகும்.

**முனைவர் கூ.பொ. இரத்தினம்** (முகவுரை)

UNIVERSITY OF PERA[DENIYA]
2000 - 5
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
2000 -5- 31
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
LIBRARY

520123


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
2000 -5- 31
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞர் கணேசலிங்கம் அவர்கள் பாடியுள்ள கவிதைகள் பொருட் செறிவுள்ளவை; இலக்கிய வளம் கொண்டவை. அனுபவச் சாரத்தையும் உணர வேண்டிய வாழ்வியல் உண்மை களையும் உள்ளடக்கி நிற்கும் இந்தக் கவிதைகள் எல்லோரும் படித்துப் பயன் பெற வேண்டிய கவிதைகள். இவை போற்றிக்காக்கப்பட வேண்டிய கவிதைகள். பொறியாளர் சித்தாந்தரத்தினம் கவிஞர் திரு. கணேசலிங்கம் அவர்கள் வழங்கி யுள்ள இந்தக் கவிதைகள் தமிழுக்குக் கிடைத்த நல்ல இலக்கிய வரவு.

*பேராசிரியர்* **பொற்கோ.**



520123

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org